பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 09 சனிக்கிழமை (21-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:87





வன்னியில் விடுதலைப் புலிகளின் மோட்டார் சைக்கிள் படைப்பிரிவு ஒன்று தனது பயிற்சிகளை முடித்துக்கொண்டு நேற்று வெளியேறியது. பயிற்சி நிறைவு விழாவில் தலைவர் பிரபாகரன் கலந்து கொண்டு அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக்கொண்டார். வன்னியின் பிரத்தியேகமான இடம் ஒன்றில் பயிற்சி நிறைவு விழா இடம்பெற்றது. தலைவர் பிரபாகரனுடன் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், மோட்டார் சைக்கிள் படைப்பிரிவின் பொறுப்பாளர் மணியரசன், தளபதிகள், புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.
மோட்டார் சைக்கிள் படைப்பிரிவின் அணிவகுப்பு மரியாதையைத் தொடர்ந்து, அவர்களின் சாகசக் காட்சிகளும் இடம்பெற்றன. மேலதிகமான விசேட பயிற்சிகளை முடித்துக்கொண்டு இந்தப் படைப் பிரிவு வெளியேறியுள்ளது என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

# முஸ்லிம் ஒற்றுமை தோன்றி துளிராகவே கருகிவிட்டது!

## முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் பூகம்பத்தால் நான்கு முன்னாள் எம்.பிக்கள் திடீர் பல்டி!

கொழும்பு,பெப்ரவரி21

அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் அயராத முயற்சியால் கடந்த புதன்கிழமை இரவு தோன்றிய முஸ்லிம் தலைவர்களின் ஒற்றுமை அடுத்த நாள் வியாழன் இரவு துளிராகவே கருகிவிட்டது. முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து மரச்சின்னத்தில் போட்டியிடுவதற்கு இணங்கியிருந்த அஷ்ரப் காங்கிரஸ் தவிசாளர் ஏ.எல்.எம் அதாவுல்லா ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குத் தாவிவிட்டார்.

முஸ்லிம் காங்கிரஸில் வெடித்த அரசியல் பூகம்பத்தின் துரதிஷ்ட விளைவு இது என்று விடயமறிந்த அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று உதயன் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தபடி -

அதாவுல்லாவும் அவருடைய கட்சிக்காரர் இன்னொருவரும் மயோன் முஸ்தபாவும் ஏ.எம்.நௌசாத்தும் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் காரர்களில் 6பேரும் முஸ்லிம் காங்கிரஸ் சின்னத்தில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

முக்கியமாக இந்த முடிவையும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முடிவுகளையும் முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடத்துக்கு அறிவிப்பதற்காக ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு கொழும்பில் தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் விடிய விடிய உயர்பீடக் கூட்டத்தை நடத்தினார்.

அந்தக் கூட்டத்தில் ரவூப் ஹக்கீம் பேசுகையில் -

1. கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் தனித்துப் போட்டியிடும்.

2. அம்பாறை மாவட்டத்தில் அதாவுல்லா, அவருடைய கட்சிக் காரர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அதாவுல்லா, அன்வர், ஹரீஸ், அஸீஸ் நால்வர் அணி சந்திரிகாவின் பக்கம்!

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா உள்ளிட்ட முன்னாள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளனர் என்று ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்.ஐ.அன்வர் இஸ்மாயில், எச்.எம்.எம்.ஹரீஸ், எம்.அஸீஸ் ஆகியோர் இவ்வாறு போட்டியிடவுள்ள ஏனைய மூவருமாவர் என்று அந்தச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.மு., சுதந்திரக் கூட்டமைப்பு, தமிழ்க்கூட்டமைப்பு திங்கள், செவ்வாயில் வேட்பு மனுக்கள் தாக்கல்

கொழும்பு,பெப்.21

ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய பிரதான கட்சிகள் பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை எதிர்வரும் திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலேயே தாக்கல் செய்யவிருக்கின்றன. வேட்பு மனுக்களைப் பூர்த்தி செய்யும் பணிகளில் அக்கட்சிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

பல மாவட்டங்களுக்கான வேட்பு மனுக்கள் பட்டியல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும் எஞ்சியவை நாளை பூர்த்தி செய்யப்பட்டுவிடும் எனவும் ஐ.தே.ஊடகப் பேச்சாளரான ஜயன்த கருணாதிலக்க தெரிவித்திருக்கிறார்.

ஐ.தே.முன்னணியில் இணைந்து போட்டியிடும் ஏனைய கட்சிகளுடன் இறுதிச் சுற்றுப்பேச்சுக்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பு மனுப் பட்டியல்கள் பூர்த்தி செய்யப்பட்டு கையெழுத்திடுவது ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருக்கிறார்.

கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடும் ஜே.வி.பி. வேட்பாளர்களின் பட்டியல்கள் கிடைத்திருக்கின்றன எனவும் கூறிய அவர் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் கூட்டமைப்பில் போட்டியிடுவது குறித்து பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள கச்சேரிகளில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும்.

## மட்டு. வேட்பாளர்களுடன் கரிகாலன் இன்று சந்திப்பு

மட்டக்களப்பு,பெப்.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை விடுதலைப் புலிகளின் பிரமுகர் கே.கரிகாலன் இன்று சந்தித்துக் கலந்துரையாட இருக்கின்றார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தேர்தல் விவகாரங்களைக் கையாள்வதற்கென விடுதலைப் புலிகள் தமது பிரதிநிதியாகக் கே.கரிகாலனை நியமித்துள்ளார்.

இந்த மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள வேட்பாளர்களை கரிகாலன் இன்று சந்தித்துத் தேர்தல் செயற்பாடுகள் குறித்து ஆராய்வார்.

எதிர்வரும் திங்கட்கிழமை தமது வேட்பு மனுத்தாக்கல் செய்ய அவர்கள் முடிவு செய்துள்ளனர். இறுதியாக்கப்பட்டுள்ள பட்டியலில் ஜோசப் பரராஜசிங்கம் மட்டுமே அரசியல் கட்சியைச் சேர்ந்தவர். ஏனையோர் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள்.

வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுவோர் விவரம் வருமாறு:-

ஜோசப் பரராஜசிங்கம், ராஜன் சத்தியமூர்த்தி, கிங்ஸ்லி இராசநாயகம், கே.கனகசபை, செல்வி தங்கேஸ்வரி கதிர்காமன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பா.அரியகேந்திரன், எஸ்.அரசரத்தினம். (ம-3-21)

## நாளை ஐ.தே.க. விசேட மாநாடு

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு நாளை காலை 9.30 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு மாநகரசபைத் திடலில் நடைபெறும்.

இம்மாநாட்டில் கட்சியின் சகல உறுப்பினர்களும், தொகுதி மட்டத்திலிருந்து உயர் மட்டப் பிரதிநிதிகளும் பங்குகொள்ளலாம் என்று கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகும் நாளைய தினத்தில் சமாதான விழா ஒன்றையும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விழா கொழும்பு விகாரமகாதேவி பூங்கா திறந்த வெளியரங்கில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

'நிரந்தர சமாதானத்துக்காக போர் நிறுத்தத்தைப் பாதுகாத்துக் கொள்வோம்' என்னும் கருப் பொருளில் நடைபெறும் இவ்விழாவில், சமயத்தலைவர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், வர்த்தக சமூகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்வர்.

## யாழ். மருத்துவ பீடாதிபதியின் குடும்பத்தினருக்குப் பயமுறுத்தல்!

### வெள்ளை வானில் சென்றோர் அட்டகாசம்

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் கே.சிவபாலனின் இல்லத்துக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் அவரது குடும்பத்தினரை மிரட்டி அச்சுறுத்தியிருக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றிருக்கிறது.

கொக்குவில் தலையாழியில் அமைந்துள்ள மருத்துவ பீடாதிபதியின் இல்லத்துக்கு இருளோடு இருளாக வெள்ளை நிற 'ஹைஏஸ்' ரக வான் ஒன்றில் வந்த நபர்களே அங்கிருந்தவர்களை மிரட்டிப் பயமுறுத்தியிருக்கின்றனர்.

சம்பவம் நடந்தவேளை பீடாதிபதி சிவபாலன் வீட்டில் இருக்கவில்லை.

வானில் வீட்டு வாயிலில் வந்திறங்கியவர்கள் பீடாதிபதியின் மகனை அழைத்து பீடாதிபதி எங்கே என்று விசாரித்திருக்கின்றனர். பின்னர் மகனை மிரட்டிப் பயமுறுத்தியதுடன் வீட்டில் இருந்த பீடாதிபதியின்


(16ஆம் பக்கம் பார்க்க)


### தபால் மா அதிபர் இன்று யாழ்ப்பாணம் வருகை

குடாநாட்டில் தபால் சேவையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக தபால்மா அதிபர் கே.ஏ.எஸ்.சேனதீர இன்று யாழ்ப்பாணம் வருகின்றார். இன்று காலை மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலய 2ஆவது மாடியில் தபால் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

வவுனியாவில் தேங்கியுள்ள தபால் பொதிகள் தொடர்பாகவும் யாழ். தபால் நிலையக் கட்டடத்தைத் திறப்பது தொடர்பாகவும் தபால்மா அதிபர் இங்கு ஆராய்வார். குடாநாட்டில் தபாலகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவர் கேட்டறிவார். (ம-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்





யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியப் படகோட்டிகள் தம்மை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதம் இருந்தனர். கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இருந்து வந்த அதிகாரிகள் அவர்களைப் பார்வையிட்டுப் பேசிப் போராட்டத்தை முடித்துவைத்தனர். தூதரக அதிகாரிகள் கடற்படையினர் சகிதம் படகோட்டிகளைப் பார்வையிட்டுவிட்டுச் சிறையிலிருந்து திரும்புவதையும் (மேலே) ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட படகோட்டி ஒருவருக்கு தூதரக அதிகாரி உணவு கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

### இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி வாக்காளருக்கு

# ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையம் அமைக்கும் சாத்தியம் குறைவு

வவுனியா,பெப்.21

வன்னித் தேர்தல் தொகுதியிலுள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளின் வாக்காளர்கள், வாக்களிக்க ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் வாக்குச்சாவடி அமைப்பதற்கான, சாத்தியப்பாடுகள் குறைவு என்று வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் நேற்றுக் கூறினார்.

ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் வாக்குச்சாவடி அமைக்கப்படுமா? என்று கேட்டபோது, இவ்வாறு பதிலளித்த அவர், காரணம் சூனியப் பிரதேசம் 500 மீற்றர் மட்டுமேயாகும். இங்கு வாக்குச்சாவடி அமைப்பது என்றால் 86 வாக்குச்சாவடிகள் அமைக்க வேண்டும். அப்பகுதியின் இரு பக்கங்களிலும் வெடிபொருள்கள் உண்டு. வாக்களிக்கவரும் மக்களைக் கட்டுப்படுத்த முடியுமா என்பது தெரியவில்லை. எனவே, இதற்கான சாத்தியப்பாடு குறைவாகவே உள்ளது என்று மேலும் விளக்கிக்கூறினார்.

இப்பிரதேச மக்கள் வாக்களிப்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார் எனவும், இது தொடர்பாக முடிவுகள் எதுவும் இதுவரை தமக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 185 வாக்காளர்களும், மன்னார் மாவட்டத்தில் 72 ஆயிரத்து 980 வாக்காளர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 53 ஆயிரத்து 439 வாக்காளர்களுமாக மொத்தம் 2 லட்சத்து 26 ஆயிரத்து 604 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் வாக்களிக்க வவுனியாவில் 91 வாக்குச்சாவடிகளும், மன்னாரில் 68 வாக்குச் சாவடிகளும், முல்லைத்தீவில் 50 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்படவேண்டும்.

கடந்த தேர்தலில் 1.1 வீத மக்களே முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்களித்தனர். இதேபோன்று வவுனியாவில் 55.91 வீதமும், மன்னாரில் 33.36 வீதமும் வாக்களிககப்பட்டது. இம்முறை வாக்களிப்பு எண்ணிக்கையில் மாற்றம்வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# இளங்கலைஞர் மன்றத்தின் இசைவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.21

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் முதலாம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இசை விழா நிகழ்வுகள் யாவும் யாழ். சட்டநாதர் வீதியிலுள்ள மன்றக் கலாமண்டபத்தில் தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9.30 மணிவரை நடைபெற உள்ளன.

நாதஸ்வரக் கச்சேரி, பண்ணிசை, குழுப்பாடல், பாட்டுக்கச்சேரி, புஸ்பாஞ்சலி, நாட்டியாஞ்சலி, புல்லாங்குழல் இசை, வயலின் கச்சேரி உட்படப் பல்வேறு நிகழ்வுகள் இதில் இடம்பெறவுள்ளன.

இன்றைய முதலாம் நாள் நிகழ்வில் மாலை 4.30 மணிக்கு கே.ஆர். சுந்தரமூர்த்தி, கே.எஸ்.தேவதாஸ் குழுவினரின் மங்கள இசையும் 5.30 மணிக்கு ஏ.அமிர்தலோஜனின் பண்ணிசையும் அதனைத் தொடர்ந்து கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவிகளின் குழுப்பாடலும் இடம்பெறுகின்றன.

மாலை 6.15 மணிக்கு கலைமகள் இராஜரத்தினத்தின் பாட்டுக்கச்சேரியும் 6.45 மணிக்கு இளங்கலைஞர் மன்ற மாணவிகளின் புஷ்பாஞ்சலியும் தொடர்ந்து எஸ்.கௌசிகனின் பாட்டும் இடம்பெறும்.

7.15 மணிக்கு எம்.அருட்செல்வத்தின் பாட்டும் 7.45 மணிக்கு பங்கையற்செல்வி முகுந்தனின் பாட்டும் 8.30 மணிக்கு எஸ்.கணபதிப்பிள்ளையின் இசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளன. (ஒ-10-17)

## சாரணர்தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.21

இலங்கைச் சாரணர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் உலக சாரணர் தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற உள்ளது.

சாரணர் இயக்க மாவட்ட ஆணையாளர் சு.ஏகாம்பரநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார். (ஒ-7)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்.பெப்.21

கைதடி, நுணாவில் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் வி.தெய்வேந்திரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தபாலதிபர் தா.குகபாலன் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.21

நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க.வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் அருட்சகோதரி எம்.தேவநேசன் தலைமையில் புனித ஆசிர்வாதப்பர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-10-51)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.21

நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பற்பகல் 2மணிக்கு அதிபர் க.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.இராஜலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-10-51)

★ ★ ★

வேலணை,பெப்.21

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சுங்கத் திணைக்கள முன்னாள் பிரதிப் பணிப்பாளர் இ.சுந்தரமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-10)

★ ★ ★

நீர்வேலி,பெப்.21

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-ரி-110)

### அம்பாறை மாவட்டத்தில்

# 2 கட்சிகள், 2 சுயேச்சைக் குழுக்கள் இதுவரை வேட்பு மனுக்கள் தாக்கல்

அம்பாறை மாவட்டத்தில் நேற்று நண்பகல்வரை இரு அரசியல் கட்சிகளும், இரு சுயேச்சை அணிகளும் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளன.

16 சுயேச்சைக் குழுக்கள் இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளன என்று உதவித் தேர்தல் ஆணையாளர் டி.தென்னக்கோன் தெரிவித்தார்.

ஐக்கிய சோசலிஷ முன்னணிக் கட்சியும், ஒரு சுயேச்சை அணியும் வேட்புமனுத் தாக்கல் செய்தன. முன்னதாக பூமிபுத்திரக் கட்சியும், சுயேச்சை அணியும் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தன.

இதேவேளை, தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்ப இறுதித்தினம் எதிர்வரும் திங்கட்கிழமை என்றும் தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களிலேயே தமிழர் கூட்டமைப்பு, முஸ்லிம் முன்னணி, ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணி, ஐ.தே.கட்சி என்பன வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# 10 கட்சிகள் வேட்பு மனுக்கள் தாக்கல்; 44 சு.குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின

கொழும்பு,பெப்.21

பொதுத்தேர்தலில் போட்டியிட பதிவு செய்யப்பட்ட 10 அரசியல் கட்சிகள் பல மாவட்டங்களில் நேற்று முன்தினம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. 21 மாவட்டங்களில் 44 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியிருக்கின்றன என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

றுகுணு மக்கள் கட்சி கண்டி, மாத்தளை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, குருநாகல் மற்றும் கேகாலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. ஐக்கிய சமாஜவாதி கட்சி குருநாகல், புத்தளம், மொனறாகலை மாவட்டங்களிலும், சிங்கள மஹா சம்மத பூமிபுத்திர கட்சி மாத்தளை, வவுனியா மாவட்டங்களிலும், ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி மொனறாகலை, கேகாலை, மாவட்டங்களிலும், ஸ்ரீலங்கா தேசிய முன்னணி கொழும்பு மாவட்டத்திலும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

திகாடுமல்ல மாவட்டத்தில் 6 சுயேச்சைக் குழுக்களும், மாத்தறை மாவட்டத்தில் 4 சுயேச்சைக் குழுக்களும், புத்தளம் மாவட்டத்தில் 3 சுயேச்சைக் குழுக்களும், அநுராதபுரம், நுவரெலியா, காலி, அம்பாந்தோட்டை, கண்டி, மொனறாகலை, கேகாலை ஆகிய மாவட்டங்களில் தலா 2 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியிருக்கின்றன.

கம்பஹா, களுத்துறை, வவுனியா, மட்டக்களப்பு, திகாமடுல்ல ஆகிய மாவட்டங்களில் ஒரு சுயேச்சைக் குழு கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நேற்று வரை 15ஆக அதிகரிப்பு!

கொழும்பு,பெப்.21

நாட்டில் தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் தொகை நேற்றுக்காலை வரை 15 ஆக அதிகரித்துள்ளன.

நேற்றுமுன்தினம் மாலைவரை அறிவிக்கப்பட்ட தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் தொகை 11 ஆகும். புதிதாக நான்கு சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதையடுத்து இத்தொகை 15ஆக அதிகரித்துள்ளதென பொலீஸ் தேர்தல் பிரிவு தெரிவிக்கின்றது.

எம்பிலிப்பிட்டிய, இரத்தினபுரி, சிலாபம் ஆகிய பகுதிகளில் புதிதாக நான்கு சம்பவங்கள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், இவை அனைத்தும் சிறியளவிலான வன்முறைகள் என்றும் மேலும் வன்முறைகள் நடைபெறாதிருக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவை தேர்தல் வன்முறைகள் குறித்துக் கூடுதலான முறைப்பாடுகளைத் தெரிவித்திருக்கின்றன. அநுராதபுரம் மாவட்டத்திலேயே கூடுதலான முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

### ‘ஏப்ரல் 3க்குப் பின் பார்த்துக் கொள்கிறேன்’

# பிரதேச செயலாளருக்கு முன்னாள் எம்.பி. அச்சுறுத்தல்

கூரைத்தகடுகள் பகிர்தல் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையொன்றையடுத்து, பிரதேச செயலாளர் ஒருவர் பதுளை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக பதுளை பொலீஸில் புகார் செய்திருக்கின்றார்.

கூரைத்தகடுகள் பகிர்தல் தொடர்பாக, குறிப்பிட்ட உறுப்பினர், மீகாகியுல பிரதேசச் செயலாளர் எம்.ஜி. டபிள்யூ. நாப்பாவெலவுடன் தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டார். அவ் விளக்கத்தில் திருப்தி கொள்ளாத உறுப்பினர், பிரதேசச் செயலாளரை அதிகார தோரணையில், கூரைத்தகடுகளை மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூறினாராம். அதைத் தம்மால் செய்ய முடியாது என்று பிரதேசச் செயலாளர் மறுத்துரைக்க இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டிருக்கின்றது.

இது தொடர்பாக, பிரதேசச் செயலாளர், பதுளை அரச அதிபர் டபிள்யூ. பரேமதாசவிடமும், பதுளைப் பொலீஸ் அதிபரிடமும் புகார் செய்திருக்கின்றார். பிரதேசச் செயலகக் கடமையைச் செய்யவிடாது தடுப்பதுடன், எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி பார்த்துக் கொள்கின்றேன் என்று தன்னை பலவகையிலும் அச்சுறுத்தினார் என்று பிரதேசச் செயலாளர் புகாரில் தெரிவித்திருக்கிறார்.

# யாழ். பொது நூலகத்தை விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது

## மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

யாழ். பொது நூலகத்தை விரைவில் பொதுமக்கள் பாவனைக்கு திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ் மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எரியூட்டி அழிக்கப்பட்ட யாழ். பொதுசன நூலகத்தைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்ட கட்டடங்கள் திணைக்களம் முதற்கட்ட வேலைகள் யாவற்றையும் பூர்த்திசெய்து குறிப்பிட்ட கட்டடத்தினை கடந்த 07.05.2003இல் எம்மிடம் கையளித்தது.

இரண்டாம் கட்டமாக சிற்றுண்டிச்சாலை, பழு தூக்கி, மேல்மாடியில் வாசிப்பறை ஆகியவற்றை அமைக்கும் வேலையில் கட்டடங்கள் திணைக்களம் முழுவீச்சில் செயற்பட்டு வருவதனால் தற்போது சகல வேலைகளும் முடிவடையும் நிலையில் உள்ளன.

மீளமைக்கப்பட்ட பொதுசன நூலகம் 07.05.2003இல் எம்மால் பொறுப்பேற்கப்பட்ட போதும், ஆளணி அங்கீகாரம் கிடைக்கப்பெறாமை, மாதாந்தம் தேவைப்படும் பராமரிப்பு செலவுக்கான ரூபா 5 லட்சம் நிதிப் பற்றாக்குறை போன்ற காரணங்களினால் நூலகத்தை வாசகர்களின் பாவனைக்கு உடனடியாகத் திறந்துவிட முடியாதநிலை காணப்பட்டது. மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குரிய பல்வேறுபட்ட முயற்சிகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டபோதும் இதுவரை ஒன்றும் வெற்றியளிக்கவில்லை.

இதனிடையே, தேசிய வீடமைபபு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கட்டடத்தில் இதுவரை காலமும் இயங்கிவந்த இடைக்கால நூலகம், குறிப்பிட்ட கட்டடம் உரியவர்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டியேற்பட்டமையால் 20.09.2003 முதல் மூடப்பட்டுள்ளதுடன் கட்டடம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வாசகர்களிற்கு ஏற்பட்ட இடையூறுகளை நீக்கும் முகமாகவும், தமிழீழ விடுதலைப் புலிகள், பொது நிறுவனங்கள், கல்விமான்கள், பொதுமக்கள் ஆகியோரது தொடர்ச்சியான வேண்டுகோள்கள் காரணமாகவும் நூலகத்தினைப் பயன்படுத்துவதைத் தாமதிக்காது உடனடியாக அனுமதிக்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

புனரமைக்கப்பட்ட நூலகம் மீளவும் இயங்குவதற்குரிய ஆளணி அங்கீகாரம் இதுவரை கிடைக்கப்பெறாமையினால், எமது 05 கிளை நூலகங்களின் சேவை நேரத்தை மட்டுப்படுத்தி, மீளமைக்கப்பட்ட நூலகத்தில மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் சமூக அமைப்புக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். - என்றுள்ளது.(ம)

# தொண்டர் தொல்லையிலிருந்து தப்புவதற்கு புலிகள் பெயரைப் பயன்படுத்தும் ஜெயலலிதா!

சென்னை,பெப்.21

விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி தனது தொண்டர்களின் தொல்லைகளில் இருந்து தப்பத் தமிழக முதல்வர் ஜெயலலிதா முயற்சிக்கிறார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்துக்காக ஜெயலலிதா சூறாவளிச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அப்போது அதி.மு.க. தொண்டர்கள் முண்டியடித்து அவர் மீது பூமாலைகளையும், பூங்கொத்துக்களையும் வீசுவதைத் தடுக்க, விடுதலைப் புலிகளால் தனக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற பழைய குற்றச்சாட்டை ஜெயலலிதா மீண்டும் கூற ஆரம்பித்துள்ளார்.

தனது சுற்றுப்பயணம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டை மீண்டும் விடுதலைப்புலிகள் மீது ஜெயலலிதா சுமத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் இந்த விடயம் தொடர்பாக அவர் கூறியதாவது:-

எனது பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு முழு ஒத்துழைப்புத் தர வேண்டியது ஆதரவாளர்கள் அனைவரதும் கடமை என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். நான் வரும் வழிகளில் பெரிய பூங்கொத்துகளுடன் நிற்கிறீர்கள். இவற்றை நான் விரும்பவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களது அன்பைத் தெரிவிக்கின்ற வகையில் நீங்கள் கொண்டு வந்த பூங்கொத்துகளையும் மாலைகளையும் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக எனது வாகனம் நிறுத்தப்பட்டு



ஜன்னல் கண்ணாடி கீழே இறக்கப்பட்டவுடன் ஒரே நேரத்தில் பலரும் பாய்ந்து வந்து பூங்கொத்துகளையும், மாலைகளையும் எனது வாகனத்திற்குள் என் மீது வீசுகிறீர்கள். அதனால் எனது தோளிலும் கையிலும் காயம் ஏற்படுகிறது. வீசி எறிந்த தண்ணீர் நிறைந்த பூங்கொத்துகளால் மண்ணும் சகதியும் என்மேல் விழுகின்றன. காரின் உட் பகுதியும் எனது ஆடையும் அலங்கோலம் ஆகின்றன. இவை தேவைதானா?

நீங்கள் பூங்கொத்துகளை ஏந்தி நிற்கிறீர்கள். நீங்கள் அவ்வாறு நிற்பதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு விடுதலைப் புலிகள் உங்களைப் போலவே கரை வேட்டி கட்டிக் கொண்டு பூங்கொத்து ஏந்தி நிற்கக் கூடும் அல்லவா?

அவர்கள் பூங்கொத்துக்குள் வெடிகுண்டு வைத்து, நீங்கள் காருக்குள் பூங்கொத்துகளை வீசுவதைப் போலவே, காருக்குள் குண்டுகளை வீசினார்கள் என்றால், எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்த்தீர்களா? விடுதலைப் புலிகளால் எனக்கு ஆபத்து ஏற்படும் என்று இந்திய உளவுப் பிரிவு முன்னரே எச்சரித்து, அதன் விளைவாகவே மத்திய அரசு கறுப்புப்பூனைப் படையினரை எனக்குக் காவல் புரிய ஏற்பாடு செய்துள்ளது.

இப்போது உங்களது இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக அந்தப்பாதுகாப்புக்கு ஊறு ஏற்படலாம் அல்லவா?

ஆகவே, பெரிய பூங்கொத்துகளைக் கொடுக்க விரும்புகிறவர்கள் அவற்றுக்கு உரிய பணத்தை விரயம் செய்யாமல் தேர்தல் நிதியாக வழங்கலாம் அல்லது கழக வளர்ச்சி நிதியாக வழங்கலாம் - என்றுள்ளது.

# நாடாளுமன்றத் தேர்தலில் வைகோ போட்டியிடவில்லை



நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்துக்காக விளக்கமறியலில் இருந்து வெளியேவந்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை. தான் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி வந்த சிவகாசித் தொகுதியில் தமது கட்சிப் பிரமுகர் ஒருவரை வேட்பாளராக நிறுத்தியிருக்கின்றார்.

'பொடா' சட்டத்தின் கிழ் கைதாகி சுமார் இரண்டு வருட காலம் விளக்க மறியலில் இருந்து வந்த வைகோ, வழக்கிலிருந்து சுற்றவாழி எனத் தாம் விடுவிக்கப்படும்வரை பிணைகோரி விண்ணப்பிக்கமாட்டேன் என்று கூறிவந்தார்.

ஆனால், நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தை எதிர்கொள்வதற்காக அவர் பிணையிலாவது வெளியே வரவேண்டும் என்று தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி நேரடியாக வேலூர் சிறைக்குச் சென்று வைகோவைச் சந்தித்து 'அன்புக் கட்டளை'யிட்டதன் பிரகாரம் அவர் பிணைக்கு 'விண்ணப்பித்தார்; வெளியே வந்தார்.

அவர் சிவகாசி தொகுதியில் மீண்டும் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. அதன் அடிப்படையில் தி.மு.க. கூட்டமைப்பில் சிவகாசி உட்பட நான்கு தொகுதிகள் ம.தி.மு.கவுக்கு ஒதுக்கப்பட்டது.

ம.தி.மு.க. வேட்பாளர் பட்டியலை நேற்றுமுன்தினம் வைகோ வெளியிட்டார்.

சென்னை அண்ணா நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வேட்பாளர்கள் பெயரை அவர் அறிவித்தார்.

சிவகாசித் தொகுதியில் ம.தி.மு.க. விவசாய அணித் துணைச் செயலாளர் சிப்பிப்பாறை ரவிச்சந்திரன் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டது.

வந்தவாசி தொகுதியில் செஞ்சி என்.ராமச்சந்திரனும், திருச்சி தொகுதியில் எல்.கணேசனும், பொள்ளாச்சி (தனி) தொகுதியில் டாக்டர் சி.கிருஷ்ணனும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# சர்வதேசக் குழு ஹெய்ட்டி செல்கிறது!

வாஷிங்ரன்,பெப்.21

கரிபீயன் தீவான ஹெய்ட்டியில் ஜனாதிபதி ஜோன் பேட்ரண்ட் அரிஸ்டிட்டுக்கு அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் அங்கு பன்னாட்டு பிரதிநிதிகள் குழு செல்லவிருக்கின்றது என அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

அதேசமயம், பாதுகாப்புக் கருதி ஹெய்ட்டியில் உள்ள சகல அமெரிக்க பிரஜைகளையும் அங்கிருந்து வெளியேறுமாறு அமெரிக்கா கோரியிருக்கின்றது.

அமெரிக்கா, பிரான்ஸ், கனடா 'கரிஜெம்' (கரிபியன் சமூகம்), அமெரிக்க மாநிலங்கள் ஸ்தாபனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவே ஹெய்ட்டிக்கு செல்லவிருக்கின்றது.

இந்த நாடுகளினதும், அமைப்புகளினதும் தூதுவர் தமது திட்டம் குறித்து ஹெய்ட்டி அரசுக்கும் , எதிரணித் தரப்புக்கும் விளக்கமளிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மோசடியான தேர்தல் மூலம் அதிபர் அரிஸ்டிட் ஆட்சியைத் தக்க வைத்துள்ளார் என்று தெரிவித்து அவரைப் பதவி விலகக் கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களே தற்போது அவருக்கு எதிரான ஆயுதக் கிளர்ச்சியாக உருவெடுத்திருக்கின்றது.

கடந்த 5ஆம் திகதி வடக்கு நகரான கொனயிவஸை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியமை, பல்வேறு நகரங்களில் அவர்களின் ஆதிக்கம் பரவி வருகின்றது.

முன்னர்- பத்து ஆண்டுகளுக்கு முன்பு - அரிஸ்டிட்டை இராணுவ ஆட்சியாளர்கள் பதவியிலிருந்து துரத்திய சமயம் அமெரிக்கப் படைகளின் உதவியுடன் அரிஸ்டிட் ஆட்சியை மீட்டுக் கொண்டார்.

அப்போது நாட்டிலிருந்து ஓடி அயல் நாடான டொமினிக்கன் குடியரசில் தஞ்சமடைந்திருந்த முன்னாள் இராணுவத் தளபதிகளும், அதிகாரிகளும் தற்போது கிளர்ச்சியாளர்களுக்கு உதவுவதற்காக அவர்களின கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு நகருக்குள் பெரும் ஆயுத தளபாட வலுவுடன் வந்துள்ளனர். இந்த இரு தரப்பினரும் கை கோத்துள்ளதால் மிக நெருக்கடியான சூழ்நிலையை அரிஸ்டிட் எதிர்கொள்கிறார் எனக் கூறப்படுகிறது.

இதேசமயம் - ஹெய்ட்டியில் உள்ள இருபதாயிரம் அமெரிக்கர்களின் பாதுகாப்புக் குறித்து ஆராய்வதற்காக அமெரிக்கர்களின் தெற்குக் கட்டளையகத்தைச் சேர்ந்த நான்கு உயரதிகாரிகள் ஹெய்ட்டியின் தலைநகர் போர்ட் - ஒப்- பிறின்ஸ்"க்கு அடுத்த சில தினங்களில் வரவிருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேவைப்பட்டால் அமெரிக்கர்களை ஹெய்ட்டியிலிருந்து அவசர அவசரமாக வெளியேற்றுவதற்கு தயாரான நிலையில் அமெரிக்க இராணுவம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் தமக்கு எதிராகத தீவிரமடைந்துவரும் கிளர்ச்சி குறித்து அரிஸ்டிட் நேற்றுமுன்தினம் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டார்.

கிளர்ச்சியில் ஈடுபடுவோரை பயங்கரவாதிகள் என்று வர்ணித்து அவர் அவர்களிடமிருந்து நாட்டைக் காப்பதற்காகத் தேவைப்பட்டால் தனது உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றார் என அறிவித்தார்.



ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சார்பில் புதிய அதிர்ஷ்டலாபக் குலுக்கல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிரான்ஸின் பரிஸ் நகரில் வாரந் தோறும் இதன் குலுக்கள் நடைபெறுகின்றது. பிரிட்டன், ஸ்பெயின், பிரான்ஸ் உட்படப் பல்வேறு நாடுகளில் ஒரே நேரத்தில் இந்தச் சீட்டுக்கள் விற்பனைக்கு விடப்படுகின்றன. பரிஸ் நகரில் உள்ள ஒரு கடையில் வாடிக்கையாளர்கள் சீட்டுக்களைத் தேர்வு செய்யும் காட்சி.

# நடுவானில் விமானங்கள் மோதும் பேராபத்துத் தவிர்க்கப்பட்டது!

## பிரான்ஸ் வான் பரப்பில் சம்பவம்

பாஸெல்,பெப்.21

நடுவானில் இரு விமானங்கள் மோதவிருந்த பேராபத்து விமானிகளின் சாமர்த்தியத்தால் தவிர்க்கப்பட்டது.

வடக்கு பிரான்ஸ் நகரான ரீம்ஸ் மீது நேற்றுக்காலை பறந்து கொண்டிருந்த சுவிஸ் மற்றும் ஹொலான்ட் (டச்சு) நாட்டு விமானங்களே நெருங்கி வந்து ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகும் அபாயம் ஏற்பட்டது.

ஆனால், விமானங்களில் இணைக்கப்பட்டுள்ள எச்சரிக்கைக் கருவிகள் கொடுத்த தகவலை அடிப்படையாக வைத்து விமானிகள் தங்கள் விமானங்களைத் தனித்தனியாக வெவ்வேறு திசைக்கும், உயரத்துக்கும் மாற்றிக் கொண்டதால் விபத்து நேராமல் தவிர்க்கப்பட்டது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள கென்னடி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சூரிச் நகருக்கு சுவிஸ் விமானம் பறந்து கொண்டிருந்தது.

அதே சமயத்தில் அதன் அருகே டச்சு விமானமும் பறந்து கொண்டிருந்தது, சுவிஸ் விமானத்தில் இருந்த எச்சரிக்கைக் கருவிகள் மற்றொரு விமானம் அருகே நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது என்று சமிஞ்ஞை கொடுத்தது.

இதையடுத்து, தமது விமானத்துக்கும் டச்சு விமானத்துக்கும் இடையேயான இடைவெளியை அதிகரிக்கும் வகையில் விலகிச் சென்றது சுவிஸ் விமானம். பின்னர் சூரிச்சில் திட்டமிட்டபடி தரையிறங்கியது அந்த விமானம்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிரான்ஸ் வான் பரப்பில் இரு விமானங்கள் மோதும் நிலைக்கு நெருங்கி வந்தமைக்கு இந்தவேலை நிறுத்தம் தான் காரணமா என்பதை ஊர்ஜிதப் படுத்த முடியவில்லை. (ஒ)

# காட்டிக் கொடுப்பவர்களுக்கு பல கோடி ரூபா வெகுமதி!

பக்தாத்,பெப்.21

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களைக் காட்டிக் கொடுத்தால் பல கோடி ரூபா பரிசு வழங்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

தேடப்பட்டுவரும் சதாமின் ஆதரவாளர்களான 32 பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியலை சில தினங்களுக்கு முன் வெளியிட்டுள்ளது ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவம்.

கடந்த ஆண்டு ஏப்ரலில் சதாம் ஆட்சி வீழ்த்தப்பட்டபிறகு 52 பிரமுகர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட்ட அமெரிக்க இராணுவம், அதற்குப் பின்னர் இது போன்ற பட்டியலை வெளியிடுவது இதுவே முதல் தடவை.

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் பாத் கட்சியின் முக்கிய நிர்வாகியான முகமது யூனிஸ் அல் - அகமதுவின் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுத்தால் 10 கோடி ரூபா சன்மானம் அளிக்கப்படும் என்று அறிவிக கப்பட்டுள்ளது.

எஞ்சியோரின் தலைக்கு 45 லட்சம் ரூபாவிலிருந்து ஒரு கோடி ரூபா வரை சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் அமெரிக்க படைகளுக்கு எதிரான கெரில்லாத் தாக்குதலில் அல் - அகமதுவுக்கு முக்கிய பங்கு உண்டு எனக் கூறப்படுகின்றது. ஈராக்கின் பல்வேறுபகுதிகளில் கெரில்லாப் படைகளுக்கான பயிற்சி மையங்களை அகமது நடத்திவருகிறார் என அமெரிக்க இராணுவத்தினர் குற்றஞ்சாட்டினர். (ஒ)



இந்தோனேஷியாவில் கடந்த சில நாள்களாகப் பலத்த மழை பெய்துவருகின்றது. தலைநகர் ஜகர்தாவைச் சுற்றி உள்ள 100 கிராமங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. மழை வெள்ளம் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடிசைகளை அடித்துச் சென்றுவிட்டது.

நகரில் உள்ள கட்டடங்களும் வெள்ளத்தில் மிதக்கின்றன. பல ஆயிரக் கணக்கான ஹெக்டேயர் நிலத்தில் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி நாசமாகி விட்டன. வெள்ளம் புகுந்த ஒரு வீட்டின் காட்சி இது.

# நஸ்ரீனின் புத்தகத்துக்குத் தடை!

டாக்கா,பெப்.21

பங்களாதேஷைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீன் எழுதியுள்ள 'ஷய் சப் அந்தாகர்' (அந்த இருண்ட நாள்கள்) என்ற புத்தகத்தை பங்களாதேஷ் அரசு தடைசெய்துள்ளது.

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் இப் புத்தகம் கடந்த மாதம் பிரசுரமானது. இஸ்லாத்தையும் தூதர் முகம்மதையும் நிந்திக்கும் வகையில் இந்நூல் எழுதப்பட்டிருப்பதால், சமூகங்களுக்கிடையே வெறுப்புணர்வை இந்நூல் ஏற்படுததும் என்பதால் தடைசெய்யப்படுகின்றது என்று பங்களாதேஷ் அரசு காரணம் தெரிவிக்கின்றது.

கடந்த 4 மாதங்களில் தஸ்லிமா நஸ்ரீன் புத்தகம் தடைசெய்யப்படுவது இது இரண்டாவது முறையாகும். அவர் எழுதிய 'கா' என்ற புத்தகம் கடந்த ஆண்டின் இறுதியில் தடைசெய்யப்பட்டது.

நஸ்ரீன் டாக்டருக்குப் படித்தவர். எழுதுவது பொழுதுபோக்கு. ஆனால் இஸ்லாத்தையும், பெண்களை நடத்தும் விதம் குறித்தும் எழுதி மதப் பெரியவர்களின் கண்டனங்களுக்கு ஆளாகிவருகிறார். (ஒ)

# வைத்தியசாலைக் காணி துப்புரவு

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ். போதனா வைத்தியசாலைக்குப் பின்புறம், நீண்டகாலமாகப் பாவிக்கப்படாதுள்ள காணியைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் 'ஹலோ ரஸ்ட்' மிதிவெடி யகற்றும் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு படையினர் குடாநாட்டைக் கைப்பற்றி ஞானம்ஸ, சுபாஸ் ஆகிய ஹோட்டல்களில் முகாமிட்ட பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான இக்காணி பாவனையின்றி இருந்தது. இப்பகுதி உயர்பாதுகாப்பு வலயமாகையால் இக்காணியில் முட்கம்பிகள் போட்டுப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன.

இப்போது 'ஹலோ ரஸ்ட்' நிறுவனம் கனரக வாகனங்களின் உதவியுடன் முட்கம்பி வேலிகளை அகற்றிக காணியைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.(ஒ-8)

## திருட்டு மின்பாவனை; மூவர் கைது!

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவர் அச்சுவேலிப் பொலீஸாரின் உதவியுடன் சுன்னாகம் மின்சார சபை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டனர். இந்த மூவரும் நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களைத் தலா 10 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-8)

## நுண்கலை விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ் பல்கலைக்கழக நுண்கலைக் கழகத்திற்கு 2003 - 2004 கல்வியாண்டில் இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கை நெறிகளுக்குத் தெரிவான புதுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

அன்றையதினம் காலை 9.30 மணிக்கு புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு நடைபெறவுள்ளதால் மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கலைப்பீட உதவிப்பதிவாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-10)

## காணாமற்போனோர் வழக்குகள் தொடர்பாக 8 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.21

காணாமற்போனோர் குறித்த வழக்குகள் தொடர்பாக 8 பேரை நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ் மேல் நீதிமன்றத்துக்குச் சமுகமளிககுமாறு காணாமற்போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தவருக்கான அமைப்பு அறிவித்துள்ளது.

அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

சோபிகா மல்லிகா (கொய்யாத் தோட்டம்), பரமநாதன் புஸ்பவதி (அரியாலை), சின்னத்துரை ஆறுமுகம் (கொழும்புத்துறை), பாஸ்கரன் சகுந்தலாதேவி (கைதடி), செல்வரட்ணம் இராசமணி (யாழ்ப்பாணம்), குமார் கரோலினா (குருநகர்), தேவதாஸ் சுரேஸ்குமார் (யாழ்ப்பாணம்), மேரி இரவிலிண்டா (யாழ்ப்பாணம்).

(ஒ-8)

## போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தினர் பாடசாலை மாணவர்களிடையே எதிர்வரும் 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடத்த விருந்த விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சிப் போட்டி மார்ச் மாதம் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறுமென விஞ்ஞானச்சங்கம் தெரிவித்துள்ளது.(ஒ-ரி)


சட்டநாதர் வீதி, நல்லூர்

**இளங்கலைஞர் மன்ற இசைவிழா**

*மேற்படி மன்ற இசைவிழா 21.02.2004 முதல் 01.03.2004 வரை நடைபெறவுள்ளது.*

*இன்றைய நிகழ்ச்சிகள் – லிங்கம் கிறீம் ஹவுஸ் ஆதரவில்*

மாலை 4.30 மணிமுதல் இரவு 9.30 மணிவரை.

மங்கள இசை - திரு. K.R.சுந்தரமூர்த்தி குழுவினர்

பண்ணிசை - A.அமிர்தலோஜன்

குழுப்பாடல் - கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவிகள்

பாட்டு - கலைமகள் இராசரத்தினம்

புல்லாங்குழல் - S.கௌசிகன்

பாட்டு - M.அருட்செல்வம்

இசைக்கச்சேரி - S.கணபதிப்பிள்ளை

*இசை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

சட்டநாதர் வீதி, நல்லூர். - இளங்கலைஞர் மன்றத்தினர்.

(28726) (24-12-17)



**கழிவகற்றும் சேவை**

உங்கள் வளவில் உள்ள மலசல கூடக் குழிகள், கழிவு நீர்த்தொட்டிகளில் உள்ள கழிவுகளை இயந்திரம் மூலம் சுகாதார முறைப்படி அள்ளி அகற்ற உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**கிளீன்வெல்,**

866, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே. 222 2849

(28721) (21-17-12-24)



**நன்றியுடன் பாராட்டுகின்றோம்**

எமது பாடசாலையின் அத்தியாவசியத் தேவையான றோணியோ இயந்திரமொன்றை பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் எமக்குப் பெற்றுத்தந்த



**திரு.எம்.கே.சிவாஜிலிங்கம்**

(முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)

அவர்களை நன்றியோடு பாராட்டுவதுடன், அவரது சேவை மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,

யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை,

வல்வெட்டித்துறை.

(28681) (26-17-12-24)



**சேவைநலன் பாராட்டு**



**திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம்**

B.A. (சிறப்பு), Dip. in Ed. MEd., (SLTS.1)

ஆசிரிய ஆலோசகர் (சமூகக்கல்வி) யாழ். கல்வி வலயம்

**சேவை விவரம்**

ஆசிரிய சேவை...... 1970.10.25 முதல் 1990.12.31 வரை.

ஆசிரிய ஆலோசகர் சேவை..... 1991.01.01 முதல் 2004.02.20 வரை.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா விரிவுரையாளர் (தேசிய கல்வி நிறுவகம் யாழ். இந்து நிலையம்) ....1992 முதல் இற்றைவரை.

இன்று அகவை 60ஐ அடையும் கழக அங்கத்தவர் அவர்களைச் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய ஆலோசகர் கழகம்,

யாழ். கல்வி வலயம்.

(28728) (24-12-17)



**நடமாடும் இலவச கண்சிகிச்சை முகாம்**

"உங்கள் கண்களுக்குப் பாதுகாப்பு மிக அவசியம்"

எமது உடம்பில் "கண்" மிகவும் பிரதானமானது.

★ விசேட கண் பரிசோதகர்கள் மூலமான பரிசோதனைக்கும்,

★ சகல வகைகளிலான கண்ணாடிகளைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும்,

**உங்களை நாங்கள் மிக அன்போடு அழைக்கின்றோம்.**

| பாடசாலை | திகதி | புதிய நேரம் |
|---|---|---|
| யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி | 23.02.2004 | பி.ப. 1.00 - 5.00 |
| யாழ். மத்திய கல்லூரி | 24.02.2004 | மு.ப. 9.00 - பி.ப.1.00 |
| யாழ். வேம்படி மகளிர் கல்லூரி | 24.02.2004 | பி.ப. 2.00 - 6.00 |
| யாழ். கனகரத்தினம் ம.ம.வி. (ஸ்ரான்லிக் கல்லூரி) | 25.02.2004 | மு.ப. 9.00 - 1.00 |
| யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 25.02.2004 | பி.ப. 2.30 - 6.00 |
| யாழ். நல்லூர் ஸ்தான சி.சி.த.க. (கல்வித் திணைக்களத்துக்கு அருகில்) | 26.02.2004 | மு.ப. 9.00 - 1.00 |
| யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி | 26.02.2004 | பி.ப: 2.30 - 6.00 |

அனுசரணை:

**ஒப்டிலைன் ஒப்டிகல்ஸ்**

(மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையம்)

இல.54, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு - 02

(24-12-17) (சி-33385)



Jayoda **ஜயோதா** ජයෝදා

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல 7040358 முதல் 7055056 வரை

சீட்டிழுப்பு இல.08 திகதி 19-02-2004

வெற்றி எண்கள் **3 3 6 9 5 9** சுப்பர் எண் **19**

சுப்பர் ஜக்பொட் பரிசு **12,886,050/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் பெற்றோர் | வெற்றி தொகை | பரிசுத் | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 12,886,050/- | - |
| இடது பக்கத்திலிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 14 | 50,000/- | 700,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 128 | 5,000/- | 640,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,307 | 500/- | 653,500/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 13,057 | 50/- | 652,850/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 1 எண் | 129,361 | 10/- | 1,293,610/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 133 | 1,000/- | 133,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,306 | 100/- | 130,600/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 12,933 | 20/- | 258,660/- |
| மொத்தம் | 158,251 | | 5,517,220/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.5,517,220/-

**இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட் ரூ.13,249,025/-**

தொடர் இல. 6077243க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 பெப்ரவரி 23ம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7053594-1-42

7051226-4-78

7041357-0-49

7048728-2-46

7050258-0-66

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விறியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

உதயன்

## இன, மத தீவிரவாதம் முன்னணிக்கு வருகிறது

இலங்கையில் கடந்த ஐந்து தசாப்த காலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் பல்வேறு முயற்சிகள் காலத்துக்குக் காலம் முன்னெடுக்கப்பட்டன; பல்வேறு யோசனைகள் முன் வைககப்பட்டன; பல்வேறு ஒப்பந்தங்கள் முன்மொழியப் பட்டன. ஆனால், எல்லாமே இடைநடுவில் குழம்பிப் போயின.

பல சமயங்களில் நன்முயற்சிகள் திட்டமிட்டு முறியடிக கப்பட்டன; பல ஆக்கபூர்வமான யோசனைகள் நிரா கரிக்கப்பட்டன. அந்தத் தடைகளை எல்லாம் தாண்டிச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப் பட்டன.

ஒவ்வொரு தடவையும் அப்படி அந்த முயற்சிகள் தடைப்பட்டுக் குழம்பிப் போனமைக்கும் இனப்பிரச்சினை மிகமோசமான நிலையை நோக்கித் தீவிரமடைந்தமைக் கும் பேரினவாதிகளின் இனவெறிப்போக்கும் அது சார்ந்த சிந்தனையும், ஏனைய சிறுபான்மை இனங் களை அடிமைப்படுத்தும் எண்ணமுமே அடிப்படைக் காரணங்கள்.

இந்தச் சிங்களப் பேரினவாதச் சிந்தனையின் எண் ணக்கருவூலமாக, அதற்கான அடித்தளமாக விளங்கி வந்தது - விளங்கி வருவது - பௌத்த மதபீடம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

பௌத்த மதவாதிகளின் தலையீடும், மறைமுக அழுத்தமும், ஒளிவுமறைவாகச் செல்வாக்குச் செலுத் தும் போக்குமே எப்போதும் அமைதி முயற்சிகள் குழம்பு வதற்குக் காரணமாக அமைந்து வந்துள்ளன.

இதுவரை காலமும் பின்புலத்தில் இருந்து இயங்கி, அமைதி முயற்சிகளைக் குழப்பி வந்தவர்கள், இப் போது அந்த முயற்சிகள் அவர்கள் விதிக்கும் தடை களையும் - கொடுக்கும் இடைஞ்சல்களையும் - வெற்றி கரமாகத் தாண்டிப் பலன்தரப்போகின்றன என்ற நலைமை ஏற்பட்டதும் அவற்றைக் குட்டிச் சுவராக்கு வதற்காகத் தாங்களே நேரடியாக அரசியல் களத்துக்கு வந்துவிட்டார்கள்.

சிங்கள, பௌத்த மதவாதிகளும், இனவெறியர் களும் இதுவரை காட்டிவந்த பாதை நாட்டின் அழி வுக்கே வழிசெய்யும் என்பதை உணர்ந்துகொண்ட சிங்கள மக்கள், அவர்களை நிராகரித்து, அமைதி முயற்சியில் ஈடுபடவேண்டியதன் ஆர்வத்தை - ஒட்டு மொத்த ஆவலை - கடந்த தேர்தல் மூலம் வெளிப் படுத்தினர்.

இதனால், அதிர்ச்சியடைந்த சிங்களப் பேரினவாதம், இனிமேலும் ஒளிவுமறைவாகப் பிரசாரம் செய்வது தமது இனவெறிப்போக்கை நாட்டில் நிலைநிறுத்து வதற்குப் பயன்தராது என்பதை உணர்ந்துகொண்டு நேரடியாகக் களத்துக்கு வந்துவிட்டது.

சிங்கள, பௌத்த இனவாதத்தை மட்டுமே கக்கி வரும் சிஹல உறுமய, இப்போது தனது பெயரை 'ஹெல உறுமய' என மாற்றிக்கொண்டுள்ளது.

அதனைத் தனது ஊடகமாகப் பயன்படுத்தி அரசியலில் தன் அதிகாரத்தை நிலைநாட்டச் சிங்கள, பௌத்த தீவிரவாதம் தயாராகிவிட்டது!

இதுவரை அரசியல்வாதிகளுக்குப் பின்புலத்தில் நின்று இன, மத தீவிரவாதத்தை ஊட்டி, காரியங் களை அதன் அடிப்படையில் செயற்படுத்தி வந்த வர்கள் இப்போது நேரடியாகத் தாங்களே அந்தத் 'திருப்பணியை' முன்னெடுக்க முன்வந்துவிட்டார்கள்

பௌத்த பிக்குமாரின் தேசிய சங்க சம்மேளனத் தின் 260 பிக்குகள் 'ஹெல உறுமய'வின் பெயரால் நேரடியாகத் தேர்தலில் நிற்கப்போகின்றார்கள்.

இது, நாட்டின் எதிர்கால துர்ப்பாக்கிய நிலைக்கு அத்தபாரம் போடும் போக்காகவே கருதப்படவேண்டிய ஒன்றாகும்.

இன - மொழி ரீதியாக மட்டுமன்றி மத ரீதியாகவும் தீவிரவாதம் தெற்கில் வலுக்கப்போகின்றது என்ப தற்குக் கட்டியம் கூறும் நிகழ்வாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது.

ஆனால், இந்தத் தீவிரவாத பிக்குகளின் அணி, ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் ஒற்றுமைப்பட்டிருக்கும் பேரினவாதக் கும்பலு டன் கூட்டுச்சேராமல் தனித்து இந்தத் தேர்தலைச் சந்திக்க முனைவதுதான் தமிழருக்கு ஆறுதல் தரும் ஒரே விடயம்.

பேரினவாதிகள் தமக்குள் பிளவுபட்டு நிற்பது அமைதித் தீர்வை விரும்பும் சக்திகளை வலுப்பெற வைக்கும் என்பது உறுதி.

'பிட்ஷா' பாத்திரம் ஏந்தவேண்டிய மதத்துறவிகள் இப்போது வாக்குகளை யாசித்து மக்கள் முன்வரும் விநோதம் இடம்பெறுகிறது.

அரசியலை நல்வழிப்படுத்த வேண்டிய மதத் துறவிகள் தாங்களே அந்த வழிக்குள் இறங்குவது அவலத்தைத்தான் உருவாக்கும் என்பதில் சந்தே கம் என்ன?

# இந்திய மீனவப் படகோட்டிகள் போராட்டத்தைக் கைவிட்டனர்

## தூதரக அதிகாரிகளின் வாக்குறுதியின் விளைவு

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ். சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்ட இந் திய மீனவப்படகோட்டிகள் தமது போராட்டத்தை நேற்றுக்காலை 10.45 மணியளவில் கைவிட்டனர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த இந்தியத் தூதரக அதிகாரிகளின் உறுதிமொழியை அடுத்தே தமது போராட்டத்தை அவர்கள் கைவிட்டனர்.

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவப் படகோட்டிகள் 67பேர் தம்மை விடுதலை செய்யக்கோரி கடந்த திங்கட்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்களில் 15 பேர் உடல்நலம் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தைச சேர்ந்த எஸ்.குமார், எஸ்.ரஞ்சித் ஆகிய அதிகாரிகள் யாழ். சிறைச் சாலைக்கு நேற்றுக்காலை வந்தனர்.

"தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவக்க சட்டமா அதிபரு டன் கலந்துரையாடி வருகின்றோம். சகலரையும் விடுவிக்கத் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். ஆகவே போராட்டத்தைக் கைவிடுங்கள்" என்று அவர்கள் வேண்டுகோள விடுத்தனர்.

மீனவப் படகோட்டிகள் இதனை ஏற்றுக்கொண்டதையடுத்து குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதத்தைத் தூதரக அதிகாரிகள் முடித்து வைத்தனர். அதன்பின்னர் தூதரக அதிகாரிகள் யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்று,அங்கு சிகிச்சை பெற்ற கைதிகளையும் சந்தித்தனர். அவர்களுக்கும் குளிர்பானம் வழங்கி உண்ணாவிர தத்தை முடித்து வைத்தனர். இந்தியத் தூதரக அதிகாரிகளுடன இலங்கைக் கடற்படை மற்றும் யாழ். சிறைச்சாலை அதிகாரிகளும உடனிருந்தனர்.

பின்னர் தூதரக அதிகாரிகள் காங்கேசன்துறை, பருத்தித் துறை, ஊர்காவற்றுறை ஆகிய கடற்பகுதிகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ள பிரஸ்தாப கைதிகளின் படகுகளையும் பார்வையிட்டனர். (ஒ-3-7)

# தெல்லிப்பழை உப அலுவலகம், நூலகத்தை மீள இயக்குவதற்குப் படையினர் அனுமதி

தெல்லிப்பழை,பெப்.21

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலய முன்னரங்க நிலைகளி லிருந்து 600 மீற்றர்கள் தூரத்திற்குள் அமைந்துள்ள தெல்லிப்பழை பொது நூலகம், தெல்லிப்பழை பிரதேசசபை உப அலுவலகம் ஆகியவை மீள இயக்கப்படவுள்ளன. இவற்றினை மீளப் புனர மைத்து இயக்குவதற்கு யாழ். படைத்துறைக் கட்டளைத் தலைமை யகம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்தகால யுத்தநடவடிக்கைகளின்போது தெல்லிப்பழைப் பொது நூலகமும், வலி.வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பழை உப அலுவலகமும் பலத்த சேதமடைந்திருந்தன. புரிந்துணர்வு உடன்பாட்டின் பின் அவற்றை மீளப் புனரமைத்து இயக்குவதற்கு ஆர்வங்காட்டப்பட்டது. ஆயினும் இந்த இரு கட்டடங்களும் உயர் பாதுகாப்பு வலய முன்னரங்க நிலைகளிலிருந்து 600மீற்றர் கள் தூரத்துக்குள் அமைந்திருந்ததால், அதைப் புனரமைத்து இயக்குவது சாத்தியமாகவில்லை.

இவற்றை மீளப் புனரமைத்து இயக்க அனுமதிக்கக் கோரி கடந்தமாதம் 21 ஆம் திகதி வலி. வடக்குப் பிரதேச செயலகத்தில யாழ். கட்டளைத் தளபதி நடத்திய சந்திப்பின்போது வலி.வடக் குப பிரதேசசபைச் செயலாளர் வேண்டுகோளை விடுத்திருந்தார்.

இந்த வேண்டுகோளைப் பரிசீலித்த படைத்துறைக் கட்டளைத் தலைமையகம் பொது நூலகத்தையும், பிரதேசசபை உப நூல கத்தையும் புனரமைத்து இயக்க அனுமதிவழங்கியுள்ளது. இதனைக் கடந்த வாரம் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வலி.வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குண ராசா தெரிவித்தார். (ஒ-150)

# யாழ். மாவட்டத் தேர்தல் பணியில் இம்முறை 6 ஆயிரம் ஊழியர்கள்

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ். மாவட்டத்தில் தேர்தல் பணிகளில் 6 ஆயிரம் அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர்.

யாழ். செயலகம் மற்றும் வாக்களிப்பு நிலையங்களில் தேர் தல பணிகளை மேற்கொள்வதற்காக இவர்கள் நியமிக்கப்படவிருக் கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் இந்தப்பணிக்குப் போதிய அரச ஊழியர்கள் இல்லாத காரணத்தால் கடந்த தேர்தலின்போது கணிசமான எண்ணிக்கையில் அதிகாரிகள் கொழும்பில் இருந்து இங்கு சேவைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால், இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து அரச ஊழியர்கள் தேர்தல் பணிகளுக்காக அழைக்கப்படவுள்ள னர்.

இவர்களுக்குத் தங்குமிடம், போக்குவரத்து உட்படத் தேவை யான வசதிகள் ஆகியவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-3)

# தனிச்சிங்களத்தில் சான்றிதழ்கள்; புரிந்துகொள்ள வைத்தியர்கள் சிரமம்

கொழும்புத்துறை,பெப்.21

கொழும்பில் இருந்து அரச திணைக்களங்களால் குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கப்படும் உத்தியோகபூர்வ கடிதங்கள் மற்றும் சான்றிதழ்கள் போன்றவை பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே இன்னமும் அனுப்பப்படுவதாகக் கூறப்படுகிறது. இதனால், அவற் றைப் புரிந்துகொள்வதில் இங்குள்ளவர்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் தமிழ்ப்பகுதிகளில் இருந்து ஆயுர்வேத வைத் தியர்களைப் பதிவுசெய்யும் பரீட்சையில் தோற்றியவர்களுக் கான வைத்திய அனுமதி அத்தாட்சிப் பத்திரம் முற்றுமுழுதாகச சிங்கள மொழியிலேயே அச்சிட்டு அனுப்பப்பட்டுள்ளது என்று சம்பந்தப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்கள் தெரிவித்தனர்.

தனிச்சிங்கள மொழியில் சான்றிதழ்கள் இருப்பதனால் நாம் எந்தப்பிரிவில் என்ன தகைமையில் சித்தி அடைந்துள் ளோம் என்பதனை அறிவதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக வும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஆயுர்வேத வைத்தி யர்களுக்கான பரீட்சையில் வடக்கு - கிழக்கில் இருந்து பல தமிழ், முஸ்லிம் வைத்தியர்கள் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ஒ-30)

# மொழித்திறன் விருத்திப் பயிற்சி

தெல்லிப்பழை,பெப்.21

வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மொழி வினைத்திறன் விருத்தி செயற்றிட்டத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கான ஆங்கில மொழித் திறன்விருத்திப் பயிற்சி வகுப்புகள் யாழ். மாவட்டத்தில நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இந்தப் பயிற்சி வகுப்புகள நேற்றுப்பிற்பகல் 2.45 மணிமுதல் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வகுப்புகள் வாராந்தம் திங்கள், வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் 2.45 மணி தொடக்கம் 4.45 மணிவரை நடத்தப்படுமெனத் தெரி விக்கப்படுகின்றது. இப்பயிற்சியைப்பெற விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்த சகல திணைக் களங்கள், சபைகள், கூட்டுத்தா பனங்கள என்பவற்றின் ஊழியர் களை மேறபடி பயிற்சிக்கு அனுப்பி வைக்குமாறு மேற்படி அரச அமைப்பு களின நிர்வாகிகளுக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற் சித திணைக்களத்தின் பணிப்பாளர் சி.கிருஸ்ணானந்தன் சுற்றறிக்கை யொன்றை அனுப்பிவைத்திருந் தார். (ஒ-150)

## நாளை

மாசி 10
ஞாயிற்றுக்கிழமை
(22.02.2004)
திதி : துதியை
பகல் 2.44 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
பகல் 3.00 வரை
சுபநேரம்: 9.31-11.01
ராகுகாலம்: 5.01-6.31
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பொறுமையே முன்னேற றத்தின் முதற்படி.

# யாழ்ப்பாணத்தில் புளொட் ஈ.பி.டி.பியுடன் சேராது!

## தேர்தல் குறித்துத் திங்களன்று முடிவு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் புளொட் இயக்கம் ஈ.பி.டி.பியுடன் இணைந்து போட்டியிடும் வாய்ப்பு இல்லை.

அந்த இயக்கத்தின் யாழ். அலுவலக வட்டாரங்கள் இப்படித் தெரிவித்தன.

தேர்தலில் புளொட் அமைப்பின் நிலைப்பாடு தொடர்பாகக் கேட்டபோதே அந்த வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

இது தொடர்பாக புளொட் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

வவுனியாவில் எமது இயக்கம் நிச்சயம் தேர்தலில் போட்டியிடும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் போட்டியிடுவது தொடர்பாக எமது இயக்கத்தின் தலைமைப்பீடம் கூடி ஆலோசனை களை மேற்கொண்டு வருகின்றது. எனினும், இறுதிமுடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இம்முறை யாழ்ப்பாணத்தில் நீதியான முறையில் தேர்தல் நடைபெறுமென நாம் ஒருபோதும் நம்பவில்லை. இதனால் இங்கு போட்டியிடுவது தொடர்பாக நாம் நன்கு பரிசீலனை செய்துவருகின் றோம். அப்படிப் போட்டியிடுவதென்றாலும் நாம் ஈ.பி.டி.பியுடன் கூட்டுச்சேரும் எண்ணம் இல்லை. அதனை எமது தலைமைப் பீடம் அனுமதிக்காது. நாம் ஈ.பி.டி.பியுடன் கூட்டுச்சேர்ந்து போட்டி யிட முயற்சிப்பதாக வெளியாகும் தகவல்களில் எந்த உண்மை யும் இல்லை. தேர்தல் தொடர்பான எமது நிலைப்பாடு எதிர்வரும திங்கட்கிழமை தெரியவரும் - என்றார். (ஐ-8)

# வடபகுதிப் பயணியின் தாக்குதலால் திருடியதைக் கைவிட்டு ஓடிய திருடன்

## கொழும்பு - வவுனியா ரயிலில் சம்பவம்!

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி ரயிலில் பயணஞ்செய்த வடபகுதிப் பயணி ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்த திருடன் அந்தப்பயணி தாக்கியதையடுத்து அறுத்த சங்கிலியை வீசிவிட்டு ஓடித்தப்பினான்.

கடந்த திங்கட்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் தனது மகனுடன் கொழும பிலிருந்து வவுனியாவுக்கு ரயிலில் இரவுவேளை வந்து கொண்டி ருந்தார். அப்போது அவர் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டார். அவர் பயணித்த ரயில் மாகோ ரயில் நிலையத்தில் தரித்து விட்டுப் புறப்பட்டது. அப்போது ரயிலுக்குள் திருடன் ஒருவன் அவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்தெடுத்துக் கொண்டு, ஓடித்தப்ப முயற்சித்தான். ஆனால், அந்த நபர் சுதாகரித்துக் கொண்டு திருட னின் முகத்தில் தாக்கினார். இதனை எதிர்பாராத அந்தத் திருடன் சங்கிலியை ரயிலுக்குள் போட்டுவிட்டு புறப்பட்டுக்கொண்டிருந்த ரயிலில் இருந்து குதித்து ஓடிவிட்டான்.

இதேவேளை, மேற்படி ரயிலில் போதைவஸ்து எடுத்துவந்த இளைஞர் ஒருவர் 'பயணச்சீட்டு பரிசோதகர்களால் பிடிக்கப்பட்டு' அநுராதபுரம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். வவுனியாவைச சேர்ந்த இந்த இளைஞர் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்வதற் குரிய பயணச்சீட்டைப் பெற்றுவிட்டு இரண்டாம் வகுப்பில் பயணஞ் செய்துள்ளார். அப்போது பரிசோதகர்களிடம் அகப்பட்ட இவரின் பயணப்பையைச் சோதனைசெய்தபோது அதற்குள் போதைவஸ்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து பொலீஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார். (ஒ-10-173)

# முட்டாள் தினத்துக்கு மறுநாள் வாக்களிக்கப் போகும் மக்கள்

**நாடு சுதந்திரமடைந்த பின்னர் இதுவரை இந்நாட்டின் நாடாளுமன்றம் பன்னிரண்டு தடவைகள் கலைக்கப்பட்டன. இவ்வாறு நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னணிகளை சாந்தகுமார விதான தொகுத்து வழங்கியுள்ளார். 'லங்காதீப' வார இதழில் வெளியான அந்தத் தொகுப்பின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஜே.ஆர்.இந்த நாட்டுக்கு உருவாக்கி வழங்கிய - அரசமைப்பு கட்டுப்பாடற்ற நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குகிறது. பொதுமக்களின் ஆணையைப் பெற்றதன் மூலம் நிறுவப்படும் அரசொன்றினை அதனது பதவிக்காலத்தில் ஒருவருடம் பூர்த்தியான பின்னர், எவ்வேளையிலும், எக்காரணம் காட்டாமலும் கலைத்துவிடும் அதிகாரத்தை ஜனாதிபதி இதன்மூலம் கொண்டுள்ளார். அது மட்டுமன்றி எந்தவொரு அமைச்சுப் பொறுப்பையும் தன்வசம் எடுத்துக்கொள்ளவும், தான் விரும்பும் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரையும் அமைச்சராக நியமிப்பதற்கும் ஜனாதிபதிக்கு அரசமைப்பு மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்திய சந்திரிகா, பாதுகாப்பு, உள்விவகாரம் மற்றும் ஊடகத்துறை ஆகிய அமைச்சுக்களின் பொறுப்பைத் தன்வசம் எடுத்துக்கொண்டார். அந்த நிகழ்வைத் தொடர்ந்து தொடர்ச்சியான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதனிடையே ஸ்ரீ.ல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய இருகட்சிகளிடையே பணியாரமும் பாற்சோறும் உண்டு மகிழ்ந்து கூட்டணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்குச் சில நாள்களின் பின்னர் மனோ - மலிக் குழுவினரிடையே பேச்சுகள் இடம்பெற்றுவந்த வேளையில் திடீரென ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். அது மட்டுமன்றித் தன்னால் பொறுப்பேற்கப்பட்ட இரு அமைச்சுக்களின் பொறுப்புக்களை பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

ஆறு ஆண்டு காலத்துக்கு நாட்டை நிர்வகிக்கவெனப் பொது மக்களின் ஆணை பெற்றிருந்த ஐ.தே. முன்னணி அரசு பொதுமக்களுக்கு வாக்களித்தபடி செயற்பட இடமளிக்காது ஜனாதிபதி தற்போது அரசைப பதவியிலிருந்து அகற்றியுள்ளார். இதனைத் தொடர்ந்து மற்றொரு பொதுத் தேர்தல் மூலம் புதிய அரசொன்றினை தேர்ந்தெடுக்க நாடு தயாராகி வருகின்றது.

### முன்னுதாரணங்கள்


இச்சம்பவம் தொடர்பாகப் பல தரப்பட்டவர்கள் கொண்டிருக்கும் அரசியல் நிலைப்பாடு பல வகையாக அமைந்திருப்பினும், பொதுமக்களால் பதவியில் அமர்த்தப்பட்ட அரசொன்று இடைநடுவில் கவிழ்க்கப்படுவது இது தான் முதற்றடவை எனக் கூறிவிட முடியாது. நமது நாட்டின் ஆட்சியமைத்த பல அரசுகள் தமது பதவிக் காலம் முடிவடையும் முன்னர் இடைநடுவில் கலைக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் ஸ்ரீலங்காவின் முதல் பிரதமராக பொறுப்பேற்ற டி.எஸ்.சேனநாயகா காலி முகத்திடலில் குதிரைச் சவாரி செய்தவேளை குதிரையினின்றும் வீழ்ந்ததன் காரணமாக உயிரிழக்க நேர்ந்தது. அச்சமயம் அடுத்த பிரதமராக டி.எஸ்.சேனநாயகாவின் அமைச்சரவையில் அமைச்சராக விருந்த எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயகாவே நியமிக்கப்படுவார் எனப் பலர் எதிர்பார்த்தனர். ஆனால், அவ்வேளையில் பண்டாரநாயகா ஐ.தே.கட்சியினின்றும் விலகி ஸ்ரீ.ல.சு. கட்சியை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையால் அவருக்குப் பிரதமர் பதவியைப் பெறும் வாய்ப்புக் கிட்டவில்லை. இதனால், பிரதமர் பதவியை அடைவதற்கு சேர் ஜோன் கொத்தலாவலை ஆர்வம் காட்டினார். ஆனால், தமக்குப் பின்னர் தமது மகனான டட்லி சேனநாயகாவே நாட்டின் பிரதமராக வேண்டுமென டி.எஸ்.சேனநாயகா ஏற்கனவே விரும்பியிருந்தார். இதனால், பிரதமர் பதவி குறித்து சேர் ஜோன் கொத்தலாவலவுக்கும் டட்லி சேனநாயகாவுக்குமிடையே அதிகாரப் போட்டி நிலவியது. ஆயினும் டி.எஸ். சேனநாயகவின் விருப்பம் நிறைவேறும். விதத்தில் சோல்பரிப் பிரபு இவ்விடயத்தில் தலையிட்டு டட்லி சேனநாயகாவைப் பிரதமராக்கியதோடு, அவரது அரசில் சேர் ஜோனை அமைச்சர் பதவி ஒன்றை ஏற்றுச் செயற்பட வைத்தார்.

### முதல் கலைப்பு

ஆயினும் அந்த அரசின் ஆயுள் நீண்டகாலம் நீடிக்கவில்லை. அரசு நிறுவப்பட்ட சில நாள்களிலேயே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 1952 மே மாதம் 30 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அத்தேர்தலும் ஐ.தே.கட்சி பெரும்பான்மை வெற்றிபெற்றதையடுத்து மீண்டும் டட்லியே பிரதமராகப் பதவியேற்றார்.

பதவியேற்ற டட்லியின் அரசு பாரதூரமான பொருளாதாரச் சிக்கலுக்கு முகம்கொடுக்க நேர்ந்தது. அச்சிக்கலிலிருந்து மீளுவ தாயின் பொதுமக்களுககான இலவச அரிசி விநியோகத்தை நிறுத்துவது மட்டுமன்றி அரிசியின் கட்டுப்பாட்டு விலையையும் உயர்த்தியாக வேண்டுமென அந்த அரசில் நிதியமைச்சராகவிருந்த ஜே.ஆர்.ஜயவர்தனா சிபார்சு செய்தார். அதற்கமைய 1953 ஜூலை 20ஆம் திகதி முதல் ஒருகொத்து அரிசியின் கட்டுப்பாட்டு விலையை 25 சதத்திலிருந்து 70 சதமாக அதிகரிப்பதாக அரசு அறிவித்தது. அந்நடவடிக்கைக்கு எதிராக


டபிள்யூ.தஹநாயக்கா


சிறிமாவோ


டட்லி

சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் நாடெங்கும் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தனர். அந்த வகையில் 1953 ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி நாடெங்கும் ஒழுங்குசெய்யப்பட்ட ஹர்த்தால் ஒரு நாளுடன் முடிந்துவிடாது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. இதன்காரணமாக உருவான பதற்ற நிலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு அரச படைகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமக்கள் சிலர் உயிரிழக்க வேண்டி நேர்ந்தது.

இச்சம்பவங்கள் காரணமாகப் பிரதமர் டட்லிசேனநாயகா மனக்குழப்பத்துக்கு உள்ளானார். இரண்டு மாதங்கள் கழித்து அவர் தனது பிரதமர் பதவியை ராஜினாமச் செய்தார். இதன காரணமாக சேர் ஜோன் கொத்தலாவலை பிரதமர் பதவியை ஏற்க நேரிட்டது.

ஆனால், சேர் ஜோன் கொத்தலாவலையின் தலைமையிலான ஐ.தே. கட்சி அரசினால் பொது மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை நிலை நிறுத்த முடியவில்லை. பண்டாரநாயக்கா மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் கூட்டணி அமைத்தார். நாளுக்கு நாள் பொதுமக்களின் மத்தியில் பிரபல்யம் பெற்ற மக்கள் ஐக்கிய முன்னணி 1956இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் அமோக வெற்றியீட்டியது.

### பண்டாரநாயகாவுக்கு எதிர்ப்பு

பண்டார நாயகா நாட்டின் சுபீட்சம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றைக் கருத்திற்கொண்டு ஏழை மக்களின் உயர்வுக்கான பல நடவடிக்கைகளை மேற்கொண்டமையால் முதலாளி வர்க்கத்தினரின் வெறுப்புக்குள்ளானார். இதனால், அரசில் அங்கம் வகித்த வலதுசாரி மற்றும் இடதுசாரித் தலைவர்களிடையே இக்கருத்து மோதல்கள் தலைதூக்க ஆரம்பித்தன. ஸ்ரீ.ல.சு.கட்சியின் வலதுசாரிப் போக்குடைய உறுப்பினர்கள், இடதுசாரித் தரப்பு அமைச்சர்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த சட்ட மூலங்களுக்கு வெளிப்படையாக எதிர்புத் தெரிவித்தனர். குறிப்பாகக் கூட்டுறவு வங்கிகளை உருவாக்குவது குறித்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவேளையில் அமைச்சரவையினுள் இவ்விரு தரப்பினருக்குமிடையேயான மோதல்கள் உச்சக்கட்டத்தை அடைந்தன. இச்சட்டமூலத்தைச் சமர்ப்பித்த பிலிப் குணவர்தனாவை அமைச்சர் பதவியினின்றும் வெளியேற்றுமாறு அரசதரப்புப் பிரதிநிதிகளில் சிலர் வற்புறுத்த ஆரம்பித்தனர்.

இத்தகைய பதட்டமான வேளையிலேயே குருநாகலில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் வருடாந்த மாநாடு இடம்பெற்றது. அந்த மாநாட்டில் பிரதமரின் உரை வலதுசாரிப் போக்குடையோரின் அதிருப்திக்குள்ளானது. இதன் பிரதிபலிப்பாகப் பிலிப் குணவர்தனா மற்றும வில்லியம் சில்வா ஆகியோர் அமைச்சரவையிலிருந்து மட்டுமல்லாது அரச தரப்பினின்றும் வெளியேற நேர்ந்தது.

இதனிடையே சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.பி. இலங்கரத்தனவைச் சந்தித்துக் கட்சியின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்குமாறு வேண்டிக்கொண்டனர்.

### அரசியற்கொலை

இக்கால கட்டத்திலேயே பண்டாரநாயகா கொலைச் சதிமுயற்சிககான திட்டம் தீட்டப்பட்டது. இருந்த போதிலும் குருநாகல் மாநாடு இடம்பெற்று நான்கு மாதங்களின் பின்னரேயே பண்டாரநாயகா கொலை செய்யப்பட்டார்.

பண்டாரநாயகா கொலையுண்டதையடுத்து டபிள்யூ தகநாயகா பிரதமராகப் பதவியேற்றார். பண்டார நாயகாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களைத் தேடிக் கண்டு பிடித்துத் தண்டனை பெற்றுக்கொடுப்பது தகநாயகாவின் முக்கிய பணியாக இருந்த போதிலும் தகநாயகா அவ்விடயத்தில் பெரும் அக்கறை செலுத்த முன்வரவில்லை. பண்டாரநாயகா கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட அமைச்சர்களான விமலா விஜயவர்த்தனா மற்றும் ஸ்ரான்லி டிசொய்ஸா ஆகியோரைப் பதவியினின்றும் விலக்கிவிடுமாறு ஏனைய அமைச்சர்களில் சிலர் மேற்கொண்ட முறையீட்டை கணக்கிலெடுக்காது செயற்பட்டமை, மற்றும் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களெனச் சந்தேகிக்கப்பட்டவர்களைக் கைது செய்வதற்குக் காலம் தாழ்த்தியமை, போன்ற சம்பவங்கள் தகநாயகாவின் தலைமையிலான அரசு மீது பொது மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தின. இதனிடையே பிரதமர் தகநாயகா, உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு என்ற பெயரில் புதிய அமைச்சொன்றினை உருவாக்கி பண்டாரநாயகா கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளையும், பொலீஸ் மற்றும் குற்றத்தடுப்புத்துறைகளையும் அவ்வமைச்சின் கீழ்க் கொண்டுவர முயன்றமைக்கு ஏனைய சகல எதிர்க் கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்தன. இதன் மத்தியில் தாம் புதிய அரசியல் கட்சியொன்றினை உருவாக்க முயல்வதாக பிரதமர் தகநாயகா அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார். மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் பிரதமரின் இக்கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சரவை உறுப்பினர்கள் அமைச்சரவைக் கூட்டத்தைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்தனர். அத்துடன் டி.பி. இலங்க்ரத்ன, மைத்திரிபால சேனநாயக, ஏ.ஜீ.ஜயசூரியா, பி.பி.ஜீ.கலுகல்ல மற்றும் எம்.பி.சொய்ஸா ஆகிய அமைச்சர்கள் தமது அமைச்சுப் பதவிகளைத் துறந்து வெளியேறினர்.

### தஹநாயகாவின் தோல்வி

இந்த நிலையில் தொடர்ந்தும் அரசை நிர்வகிக்க முடியாத நிலையில் 1959 டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி பிரதமர் தகநாயகா நாடாளுமன்றத்தைக் கலைத்ததுடன் 1960 மார்ச் மாதம் 19ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படுமெனவும் அறிவித்தார். அடுத்து இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தகநாயகா ஸ்ரீலங்கா ஜன நாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட போதிலும் அவரது கட்சி சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர்களில் ஒருவர்தானும் வெற்றி பெறாததோடு, தகநாயகாவால் கூடத் தனது தொகுதியில் வெற்றிபெற முடியவில்லை.

1960 மார்ச் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி வெற்றிபெற்ற போதிலும், டட்லி சேனநாயகாவின் தலைமையில் நிறுவப்பட்ட புதிய அரசின் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிககும் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் எதிர்க்கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப் பிரேரணை 32 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றபபட்டது. இதன் காரணமாக டட்லி சேனநாயகாவினால் நிறுவப்பட்ட அரசின் ஆயுள்காலம் 35 நாள்களுடன் முடிவடைந்தது.

இதனையடுத்து 1960 ஜூலை மாதத்தில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சி வெற்றிபெற்றது. இதனைத் தொடர்ந்து 1960 ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயகா பிரதமர் பதவியேற்றார். ஆனால், அதுவரை ஸ்ரீ.ல.சு.கட்சி அரசுக்கு ஆதரவு வழங்கி வந்த சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் 1964 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசின் செயற்பாடுகள் குறித்து கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்தன. இதன் காரணமாக ஒன்றில் நிர்வாகத்தை மாற்றுக் கட்சியொன்றிடம் கையளித்து விலகியிருத்தல் அல்லது நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிதாகத் தேர்தலை நடத்துதல் ஆகிய இரண்டிலொரு முடிவைத் தெரிவுசெய்ய வேண்டிய நிலை பிரதமருக்கு ஏற்பட்டது. ஆயினும், கடைசியில் 14 அம்சங்கள் அடங்கிய உடன்பாடு ஒன்றின் கீழ் ஸ்ரீ.ல.சு.கட்சி, ல.ச.ச.கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளடங்கிய கூட்டு அரசொன்றை 1964 ஜூன் மாதம் 16ஆம் திகதி உருவாக்க முடிந்தது. அந்த அரசில என்.எம்.பெரேரா, சம்ளி குணவர்த்தன மற்றும் அனில் முனசிங்க ஆகிய சமசமாஜக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர்.

### கட்சித் தாவல்

ஆயினும் இந்த நல்லிணக்க அரசுக்கு எதிராகவும் பல சம்பவங்கள் இடம்பெற்றன. சிம்மாசனப் பிரசங்கத்துக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்ட 'லேக் ஹவுஸ்' பத்திரிகை நிறுவனத்தை அரசுடைமையாக்குதல், பௌத்த மதத்துக்கு முன்னுரிமையளித்தல் மற்றும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல் படுத்துதல் ஆகிய விடயங்களை முன்னிலைப் படுத்தி சிம்மாசனப் பிரசங்கத்தைத் தோற்கடிக்க சதித்திட்டம் வகுக்கப்பட்டது. அவ்விதம் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படவிருந்த டிசெம்பர் 03ஆம் திகதி சபை முதல்வர் சி.பி.டி. சில்வாவுடன் மற்றும் 12 ஸ்ரீ.ல.சு.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச தரப்பிலிருந்து எதிர்க்கட்சிக்குக் கட்சிதாவினர். அந்த வேளையில் என்.எம்.பெரேராவும், பேர்னாட் சொய்ஸாவும் வெளிநாடொன்றில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தாலும் மற்றும் ஓரிரு அரச தரப்பு உறுப்பினர்கள் அவ்வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாததாலும், ஒரு வாக்கு வித்தியாசத்தில் அப்பிரேரணை தோல்வியடைந்தது. இதன் விளைவாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்த வேண்டியேற்பட்டது.

### 7 கட்சிகளின் கூட்டு

அடுத்து இடம்பெற்ற பொதுத் தேர்தல் முடிவுகள் மூலம், ஐ.தே.கட்சியின் தலைமையிலான 6 சிறுகட்சிகள் இணைந்த கூட்டு அரசொன்று நிறுவப்பட்டது. 'ஏழு கட்சிகளின் கூட்டு' என அழைக்கப்பட்ட அந்த அரசின் நிர்வாகத்தின் போது, தமிழ் மொழிக்கு நியாயமான இடம் வழங்கும் வகையிலான பிரேரணை நாடாளுமன்றத்தில அரசினால் சமர்ப்பிக்கப்பட்டது ஆனால், அந்நடவடிக்கைக்கு எதிராக தென்னிலங்கையில் உருவான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது, கொள்ளுப்பிட்டியில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றைத தடுத்து நிறுத்தும் முயற்சியில் கலகக்காரர்கள் மீது பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கூட்டத்திலிருந்த தம்பராவெ ரத்னசார தேரோ என்ற பிக்கு உயிரிழக்க நேர்ந்தது.

இதனையடுத்து ஸ்ரீ.ல.சு.கட்சி, ல.ச.ச.கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை ஒன்றிணைந்து, 1968 மார்ச் மாதம் 28ஆம் திகதி தம்மிடையே கூட்டு முன்னணி யொன்றை உருவாக்கிக் கொண்டன. அத்துடன் 1970மே மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் இக் கூட்டு முன்னணி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது.

### - வியெஸ்ரி -

ஆயினும் 1971 ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி ஜே.வி.பியினரால் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதக்கிளர்ச்சி காரணமாக இக்கூட்டு முன்னணி அரசு பாரதூரமான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. மிகுந்த சிரமத்தின் மத்தியில் கடைசியில் ஜே.வி.பியின் கிளர்ச்சித் தலைவர்களைக் கைதுசெய்து அவர்களது முயற்சியை முறியடிக்க அரசினால் முடிந்தது.

### என்.எம்.பெரேரா பதவி நீக்கம்

இக் கூட்டு முன்னணி அரசின் நிர்வாகத்தின் கீழ் 1972இல் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து மேலும் ஐந்தாண்டு காலத்துக்கு நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் நீடிக்கப்பட்டது. இம் மசோதா நிறைவேற்றப்பட்டதையடுத்து 1975இல் இடம்பெறவேண்டிய பொதுத்தேர்தல் 1977ஆம் ஆண்டிலேயே இடம்பெறுவது சட்டபூர்வமாக்கப்பட்டது. இதனை எதிர்த்து ஐ.தே.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அதிக தொகுதிகளில் போட்டியிட்டு புதிய வரலாறு படைக்கும் அ.தி.மு.க.

தமிழகத் தேர்தல் வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு 33 நாடாளுமன்றத் தொகுதிகளில் அ.தி.மு.க. இப்போது போட்டியிடுகிறது.

அடுத்த ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக அ.தி.மு.க. விளங்கவேண்டும் என்ற முதல்வர் ஜெயலலிதாவின் குறிக்கோள் இதில் பிரதானமாக வெளிப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தற்போது அதிக நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் அரசியல் கட்சி அ.தி.மு.க. மட்டுமே. அதன் பிரதான எதிர்க்கட்சியான தி.மு.கவைவிட அது இருமடங்கு இடங்களில் போட்டியிடுகிறது.

நாடாளுமன்றத் தேர்தல்களில் அ.தி.மு.க. பல்வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட போதிலும் இதுவரை இத்தனை தொகுதிகளில் போட்டியிட்டதில்லை.

மதுரை, நாகர்கோவில், கோவை ஆகிய தொகுதிகளில் இதுவரை



போட்டியிடாத அ.தி.மு.க. இம்முறை மதுரையிலும் போட்டியிடுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் தேர்வுக்கு முதல்கட்டப் பணிகளை அ.தி.மு.க. தலைமை முடித்துவிட்டது. இருப்பினும கடந்த சில வாரங்களாகத் தொகுதிகள் அடிப்படையில் வேட்பாளர் தேர்வுப் பணியில் ஜெயலலிதா ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் அவர் தமது தேர்தல் சுற்றுப் பயணத்தை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி தொடங்கவுள்ளார். எனவே, வேட்பாளர் பட்டியல் விரைவில் அறிவிக்கப்படும் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

1972 ஆம் ஆண்டு நடைபெற்ற திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் மூலம் நாடாளுமன்றத்தில் அடியெடுத்து வைத்த அ.தி.மு.க. படிப்படியாக தமிழகத்தில் ஒரு பலம் வாய்ந்த அரசியல் சக்தியாக மாறியமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# விரும்பிய தொகுதி கிடைக்கவில்லை: எனவே கிடைத்ததை விரும்புவோம்

## இல. கணேசன் தெரிவிப்பு



தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு விரும்பிய தொகுதிகள் கிடைக்காவிட்டாலும் கிடைத்ததை விரும்பிச் சாதனை படைப்போம் என்று பா.ஜ.க. தேசியச் செயலர் இல. கணேசன் தெரிவித்தார்.


அவர் மேலும் கூறியதாவது:-

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் புதுக்கோட்டை, சிவகங்கை, தென்காசி, தென் சென்னை, திருச்சி உள்ளிட்ட தொகுதிகளில் பா.ஜ.க. போட்டியிட விரும்பியது. ஆனால், இத்தொகுதிகள் ஒதுக்கப்படவில்லை. இது வேதனைக்குரியது. இதை மறைக் கவோ, மறுக்கவோ விரும்பவில்லை. இருப்பினும் கூட்டணி, தொகுதிப்பங்கீடு என்ற நிலையில் இதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

புதுக்கோட்டை நாடாளுமன்றத் தொகுதி பா.ஜ.கவுக்கு ஒதுக்கப்படா விட்டாலும் மத்திய அமைச்சர் திருநாவுக்கரசருக்கு உரிய பாதுகாப்பும் கௌரவமும் பா.ஜ.க.தொடர்ந்து அளிக்கும்.

மத்திய அமைச்சர் திருநாவுக்கரசரும் இக்கூட்டணியின் வெற்றிக்காகப் பாடுபடுவார் என்றார் அவர்.

அ.தி.மு.கவில் ஜெயலலிதாவுக்கு மிக நெருக்கமானவராக இருந்த திருநாவுக்கரசர், கருத்து முரண்பாட்டால் பிரிந்து தனிக்கட்சி தொடங்கினார். பின்னர் பா.ஜ.கவில் இணைந்தார். இவர் செல்வாக்குப்பெற்ற புதுக்கோட்டைத் தொகுதியை பா.ஜ.கவுக்குத் தர ஜெயலலிதா வேண்டுமென்றே மறுத்துவிட்டார் என்று கூறப்படுகின்றது. (ஒ)




அ.தி.மு.கவின் தோழமைக்கட்சிகள்

# சிதம்பரத்துக்கு காங்கிரஸ் நிர்ப்பந்தம்

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் 'காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை' போட்டியிடாமல், தமிழகத்தில் காங்கிரஸுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யுமாறு அதன் தலைவரும் முன்னாள நிதியமைச்சருமான ப.சிதம்பரத்தை காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் தொடர்ந்து நிர்ப்பந்தம் செய்து வருகின்றனர்.

தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதிலிருந்த சிவகங்கை, சேலம் தொகுதிகளைத் தரவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைச் சந்தித்துக்கோரிக்கை




வைத்தார் சிதம்பரம். காங்கிரஸில் சேருமாறு சோனியா வலியுறுத்தியபோதிலும், அவர் அந்த யோசனையை ஏற்க மறுத்துவிட்டார். இதையடுத்து, தமிழகத்தில் காங்கிரஸுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யுமாறு சோனியா வலியுறுத்தினார். குறைந்த பட்சம் ஒரு தொகுதியில் கூடப்போட்டியிடாமல், காங்கிரஸுக்குப் பிரசாரம் செய்வது முடியாத காரியம் என்று சிதம்பரம் தெளிவுபடுத்தினார்.

இந்நிலையில், சோனியாவின் அரசியல் ஆலோசகரும், மூத்த தலைவருமான அகமது படேல், தொலைபேசி மூலம் சிதம்பரத்தைத் தொடர்பு கொண்டு, இத்தேர்தலில் காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை போட்டியிடாமல் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யவேண்டும என்று வற்புறுத்தியுள்ளார்.

நாட்டின் வளம் கொழிப்பதாக பா.ஜ.க. பறைசாற்றிக் கொள்வது எவ்வளவு ஏமாற்று வேலை என்பதை, அனைத்துத் தரப்பு வாக்காளர்களும, புரிந்துகொள்ளும் வகையில் சிதம்பரத்தால் மட்டுமே தெளிவாகப் பிரசாரம் செய்யமுடியும். அதனால்தான் அவரை எப்படியாவது பிரசாரத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்பதில் காங்கிரஸ் மேலிடம் தீவிரமாக இருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அ.தி.மு.கவுடன் காங்கிரஸ் கூட்டணி வைத்தபோது அதனை எதிர்த்து காங்கிரஸிலிருந்து விலகிய சிதம்பரம் பின்னர் காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை என்ற கட்சியை உருவாக்கினார். (ஒ)

# வாஜ்பாய் பிரதமராவதற்காக 18 வருடங்கள் மௌன விரதம்

வாஜ்பாய் இந்தியப் பிரதமராக வேண்டும் என்பதற்காகக் கடந்த 18 ஆண்டுகளாக மௌன விரதத்தைக் கடைப்பிடித்துவந்த 75 வயது முதியவர், தமது விருப்பமும் நிறைவேறி, வாஜ்பாயைக் கடந்த செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்த பின், 'ஜெய்ஸ்ரீராம்' என்று முழங்கி தீ தனது மௌன விரதத்தை முடித்துக் கொண்டார்.

மத்தியப் பிரதேச மாநிலம், சியோனி மாவட்டம், கான்சார் என்ற இடத்தைச் சேர்ந்தவர் சுந்தர்லால் விஸ்வகர்மா. திருமணம் செய்து கொள்ளாத அவர் ஊனமுற்றவர். வாஜ்பாய்மீது அளவற்ற மதிப்புக் கொண்டவர். 'வாஜ்பாய்' இந்த நாட்டின் பிரதமர் ஆகும் வரை நான் பேச மாட்டேன்' என்று கூறி 1986லேயே மௌன விரதத்தைத் தொடங்கினார் சுந்தர்லால். அவரது விருப்பம் நிறைவேறிய பிறகும் வாஜ்பாய் முன்னிலையில்தான் மௌனவிரதத்தை முடிப்பேன் என்று உறுதியாக இருந்தார் அவர்.

கடந்த வாரம் வாஜ்பாய் வந்தபோது அவரைச் சந்தித்த சுந்தர்லால் உணர்ச்சி பொங்க, 'ஜெய்ஸ்ரீராம்' என்று முழங்கி தீ தனது மௌன விரதத்தை முடித்துக்கொண்டார். வாஜ்பாயின் பதவிக்காலம் நிறைவடையும் பொழுதாவது அவரைச் சந்திக்க முடிந்ததே என்பதில் சுந்தர்லாலுக்கு அளவற்ற மகிழ்ச்சி.

# பா.ஜ.கவில் இணைந்தார் ஹேமமாலினி

பிரபல இந்தித் திரைப்பட நடிகை ஹேமமாலினி (வயது 55) கடந்த வியாழக்கிழமை பா.ஜ.கவில் முறைப்படி சேர்ந்தார்.

பா.ஜ.க. மூலம் இவர் ஏற்கனவே மாநிலங்களவை உறுப்பினராகப் பதவிவகித்து வருகிறார். கடந்த 1999 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வேட்பாளர் வினோத் கன்னாவை ஆதரித்துப் பஞ்சாப் மாநிலம் குருதாஸ்பூர் தொகுதியில் ஹேமமாலினி பிரசாரம் செய்துள்ளார்.

"திரைப்படங்களில் தீவிரமாக நடித்துக் கொண்டிருந்தாலும் இதர நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும் பா.ஜ.கவில் நான் இணைவது காலதாமதமானது. தற்போது தேர்தல் நெருங்கி வருவதால் பா.ஜ.கவில இணைய இதுவே சரியான தருணம் என முடிவெடுத்தேன். நமது நாடு வளர்ச்சியடைய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அரசியலில் நுழைந்துள்ளேன்" என்றார் ஹேமமாலினி (ஒ)

# மத்தியில் ஆட்சியைப் பிடிக்கப்போவது யார்?

இந்தியா சுதந்திரம் அடைந்ததில இருந்து மத்தியில் தனிக்கட்சி ஆட்சிதான். நடைபெற்று வந்தது. கடந்த சில தேர்தல்களில் எந்த ஒரு கட்சிகளும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் அடிக்கடி ஆட்சிகள் கவிழ்ந்து வந்தன. வி.பி.சிங், தேவகவுடா, குஜ்ரால், வாஜ்பாய் ஆகியோர் தலைமையிலான ஆட்சிகள்



அற்ப ஆயுளில் முடிந்தன. எனவே, பாரதிய ஜனதாக்கட்சி தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற 24 கட்சிகள் அடங்கிய பெரும் கூட்டணியை அமைத்துப் போட்டியிட்டது. இந்தக் கூட்டணியில் மாநிலக் கட்சிகள் இடம் பெற்றன. இந்தக் கூட்டணி கடந்த 1999ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தது.

பிரதமர் வாஜ்பாய் தலைமையில், அந்தக் கூட்டணி ஆட்சி அமைத்தது. தற்போது பிரதமர் வாஜ்பாய் 4 ஆண்டு காலம் வெற்றிகரமாக ஆட்சியை நடத்தி முடித்துவிட்டார். இதிலிருந்து மத்தியில் இனிக்கூட்டணி ஆட்சிதான் ஏற்படும் என்ற நிலை உருவாகி உள்ளது. வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி காங்கிரஸ் கட்சிக்கு கிலியை ஏற்படுத்தி விட்டது. எனவே, தாங்களும் கூட்டணி ஆட்சி அமைக்கத் தயாராக இருப்பதாக அறிவித்தது. அதற்காக மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளது.

கடந்த தேர்தலின் போது தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்த தி.மு.க, பா.ம.க, ம.தி.மு.க, லோக் ஜனசக்தி போன்ற கட்சிகள் தற்போது காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ளன. கூட்டணியில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் மாநிலங்களின் ஆளும் கட்சிகளைப் பொறுத்து கூட்டணிச் செல்வாக்கில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதைய சூழ்நிலையில் ஆந்திராவில் தெலுங்கு தேசம் கட்சியை விட காங்கிரஸுக்கு செல்வாக்கு அதிகரித்துள்ளது. ஏனென்றால் 'தெலுங்கானா' பிரச்சினை, முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது. மேலும் வர இருக்கின்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் தெலுங்கான ராஷ்டிரிய சமாஜ் கட்சி கூட்டணி அமைக்க உள்ளதும் ஒரு காரணம் ஆகும்.

அருணாசலப் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சிக்குச் சாதகமான சூழ்நிலை காணப்படவில்லை. ஆனால், அஸாமில் கூடுதல் தொகுதிகள் கிடைக்கும் என்று கருத்துக் கணிப்பில கூறப்பட்டுள்ளது. பீகாரில் லல்லு பிரசாத் யாதவின் ராஷ்டிரிய ஜனதா தளம் - காங்கிரஸ் கூட்டணி கூடுதல் இடங்களைப் பெற வாய்ப்பு உள்ளது. பா.ஜனதா - ஜனதா தளம் (ஐக்கியம்) கூட்டணி கடந்த தேர்தலை விட சில தொகுதிகளை இழக்கும் நிலை ஏற்படலாம். குஜராத்தில் இந்துத்வ கொள்கை ஓங்கி நிற்கிறது. எனவே, அங்கு பா.ஜனதா கட்சி பெரும்பாலான தொகுதிகளைப் பிடிக்கும். அரியானாவில் பன்சிலால் கட்சியுடன காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்தால் கூடுதல் தொகுதி பெறும் வாய்ப்பு உள்ளது.

இமாசலப் பிரதேசத்திலும், ஜம்மு காஷ்மீரிலும் இந்தத் தேர்தலில் காங்கிரஸுக்கு செல்வாக்கு அதிகரித்துள்ளது. அங்கு அக்கட்சி கூடுதல் இடம் பிடிக்கலாம் என்று கூறப்படுகிறது. கர்நாடகத்தைப் பொறுத்தவரை இந்தத் தோதலில் தேவகவுடாவின் ஜனதா தளம், காங்கிரஸ, பா.ஜனதா கட்சிகளுக்கு இணையான தொகுதிகளைப பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய பிரதேசத்தில் பா.ஜனதாவுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் கடந்த தேர்தலை விடக் கூடுதல் தொகுதி கிடைக்கும் என்று கூறமுடியாத நிலை உள்ளது.

மராட்டியத்தில் தற்போது ஆளும காங்கிரஸ் கூட்டணி ஆட்சியின் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளால் பா.ஜனதா - சிவசேனா கூட்டணிக்கு கூடுதல் தொகுதிகள் கிடைககலாம். ஒரிஸாவில் பா.ஜனதா - பிஜு ஜனதாதளம் கூட்டணியே 90 சதவீதம் தொகுதியை பிடிக்கும் நிலை உள்ளது. பஞ்சாப்பில் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள கோஷ்டிப் பூசல் காரணமாக அகாலி தளம் - பா.ஜனதா கூட்டணி அதிக தொகுதிகளைப் பெறும் என்று தெரிகிறது. ராஜஸ்தானில் பா.ஜனதா ஆட்சி நடைபெற்று வருகிறது. இருந்தாலும் அங்கு காங்கிரஸ் அமைக்கும் கூட்டணி அக்கட்சிக்குக் கூடுதல் தொகுதிகளைப் பெற்றுத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்த தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. போன்ற கட்சிகள் தற்போது காங்கிரஸுடன் கூட்டணி அமைத்துள்ளன. மேலும் இந்தக் கூட்டணியுடன் கம்யூனிஸ்ட் கட்சிகளும், முஸ்லிம் லீக் கட்சிகளும் உள்ளன. எனவே, தி.மு.க. கூட்டணி கூடுதல் தொகுதிகளைப் பெறும் என்று கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. டெல்லியிலும் காங்கிரஸ் கட்சியே கூடுதல் தொகுதிகளைப் பெறும் நிலை உள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் முலாயம்சிங் யாதவின் சமாஜ்வாதக் கட்சியே மற்றக் கட்சிகளைவிட கூடுதல் தொகுதிகளைப் பெறும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். காங்கிரஸ் கட்சி மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியுடன் கூட்டணி அமைத்தால் ஓரளவு தொகுதிகளைப் பெற முடியும். தற்போது பா.ஜனதாவுடன் முன்னாள் முதல்வர் கல்யாண்சிங் இணைந்துவிட்டார். இது பா.ஜனதாவுக்கு ஓர் எழுச்சியையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே முன்பு எதிர்பார்த்ததைவிட கூடுதல் தொகுதிகளை அக்கட்சி பிடிக்கலாம என்று கருத்துக் கணிப்புக் கூறுகிறது.

வடகிழக்கு மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்கே செல்வாக்கு உள்ளது. அங்கு 1999ஆம் ஆண்டு தேர்தலைப் போலவே வர இருக்கின்ற தேர்தலிலும் அக்கட்சிக்கு கூடுதல் தொகுதி கிடைக்க வாய்ப்பு உள்ளது. கோவா, கேரளா, மேற்கு வங்காளம் மற்றும்



யூனியன் பிரதேசங்களில் கடந்த தேர்தலைவிட எந்தவித மாற்றமும் ஏற்படாது என்று கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன. எது எப்படியோ மத்தியில் ஆட்சியைத்தக்க வைத்து கொள்ள பா.ஜனதாவும், ஏற்கனவே விட்ட அதிகாரத்தைப் பிடிக்க காங்கிரஸ் கட்சியும் பலமான கூட்டணிகளை அமைத்து வருகின்றன. மாநிலங்களின் கூட்டணி அமைவதைப் பொறுத்தே இந்த இரு அணிகளில் எவை மத்தியில் ஆட்சியைப் பிடிக்கும் என்பது தெரியவரும். ☆

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு
10 - 01 - 1936



இறப்பு
22 - 01 - 2004

### திருமதி ஆறன் சின்னமணி

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமானவரே!
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.


இன்று (21.02.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவாசாரதா (இளைய மகள்),
யசோதரன் (பேரன்).

*மாவிலங்கை வீதி,*
*துன்னாலை கிழக்கு,கரவெட்டி.*
(28643) (26-34-19)

# மூன்றாம் ஆண்டு நினைவில்....

ஆழிமண்ணில் முத்தாய்
11 - 04 - 1978



ஆழக்கடலில் வித்தாய்
21 - 02 - 2001

### கடற்கரும்புலி மேஜர் விடுதலை
### (கந்தையா இந்திராணி)


நொருங்குண்ட தமிழினத்தின் விடுதலைக்கு வித்தாக,
தன் இன்னுயிரை அர்ப்பணித்த அவதார வேங்கை,
கரும்புலியாய் களம் பாய்ந்த முதல் வேங்கை மாவீரன்
மில்லரின் நெஞ்சுறுதியில் வெடித்தெழுந்த எரிமலை!

*(21.02.2001 அன்று இவருடன் வீரகாவியமான அனைத்து போராளிகளுக்கும் எமது வீரவணக்கங்கள்)*

*ஆழியவளை,*
*தாளையடி.* (சி-33355) (26-34-19) - குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
25 - 06 - 1928



விண்ணில்
04 - 03 - 2003

அமரர்
### சின்னத்துரை இராசையா

திதி: பிரதமை 21.02.2004 (சனிக்கிழமை)

ஓராண்டு ஓடினாலும்
ஓயாது உம் ஞாபகம்
ஊரெல்லாம் உமைப்பற்றி
ஓயாமல் வாழ்த்தும்
பாராள எம்மையெல்லாம்
வளர்த்தாளாக்கி
பேர் சொல்ல வைத்த
அப்பாவே உமை மறவோம் நாம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்மார்.

*"கலாபவனம்",*
*இணுவில் கிழக்கு, மஞ்சத்தடி.* (28619)(34-19-26)

## 2 பாடசாலைகளை சொந்த இடத்தில் இயக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.21

அரியாலையில் உள்ள இரு பாடசாலைகளைச் சொந்த இடங்களில் மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரியாலை பூம்புகார் அ.த.க. பாடசாலை ,அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளும் தமது சொந்த இடத்தில் இயங்கமுடியாத நிலையில் உள்ளன.

இப்பாடசாலைகளின் கட்டடங்கள உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளன. இவற்றிலிருந்து இராணுவத்தினர் இதுவரை வெளியேறவில்லை. இதனால் இப்பாடசாலைகளை இயக்கமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலைகள் இரண்டும் தற்போது அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயத்தில் இட நெருக்கடி மத்தியில் இயங்கி வருவதால் இவற்றைச் சொந்த இடத்தில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரியுள்ளனர். (ரி-8)

## கணித பாடவிருத்திக்கு பரீட்சைத்திட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.21

பாடசாலைகளில் தரம் 9, 10, 11 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாதாந்தக் கணித பாடப் பயிற்சிப் பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று யாழ்கல்வி வலயப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மாணவர்களிடையே குறைந்துள்ள கணிதபாட கல்வி விருத்தியினை இப்பயிற்சி வகுப்புகளின் மூலம் மேம்படுத்தவுள்ளதாகவும் -

கடந்த மாதம் முதல் நடத்தப்பட்டு வரும் இப்பரீட்சைகள் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பால்மா பைக்கற்றுக்களை களவாடி விற்றவர் கைது!

தென்மராட்சி,பெப்.21

தாவடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கடையில் திருடப்பட்டவை என்று கூறப்படும் பால்மா பைக்கற்றுக்களைக் கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு விற்கமுயன்ற நபர் பொலீஸாரால் பிடிக்கப்பட்ட சம்பவம் கடந்தவாரம இடம்பெற்றது.

மேற்படி நபர் பால்மா 'பைக்கற்றுகளை கடைகடையாக விற்பனை செய்வதை அவதானித்த பொலீஸார் அவரை விசாரணை செய்தபோது அவை சங்கக்கடையில் திருடிய பால்மா பைக்கற்றுகள் என்று தெரியவந்தது.

அந்த நபரிடமிருந்து 34 பைக் கற்றுகள் பால்மா கைப்பற்றப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.(ஒ-8-117)

## மகளிர் தினத்தை முன்னிட்டுப் போட்டிகள்

கொழும்புத்துறை,பெப்.21

அரியாலை அபிவிருத்திச் சங்கம சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, பொதுஅறிவுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டிகள் எதிர்வரும் 28 ஆம், 29ஆம் திகதிகளில் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் இடம பெறவுள்ளன.

அரியாலைப்பிரதேச மாணவர் களுக்கான இப்போட்டிகளின் விண்ணப்ப முடிவுதிகதி எதிர்வரும் 25 ஆம் திகதியாகும். படிவங்களை அரியாலை திருமகள் வீதியிலுள்ள சங்கச் செயலாளரிடம் பெற்றக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8-30)

## மனித உரிமை குறித்து பொலீஸாருக்குப் பயிற்சி

மனித உரிமைகள் தொடர்பாகப் பொலீஸாருக்கு நான்கு நாள்கள் பயிற்சிப்பட்டறையை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் காங்கேசன்துறைப் பொலீஸ் நிலையத்தில் நடதத வுள்ளனர்.

எதிர்வரும் 25ஆம், 26ஆம், 27ஆம 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறையில் காங்கேசன்துறைப் பொலீஸ்நிலைய சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் கலந்துகொள்ள வுள்ளனர். (ஒ-8-7)


**English, Maths**

தரம் 6 இல் இருந்து O/L வரை. O/L இல் A,B,C பெறுபேறடைவோருக்கு ஆங்கிலம் A/L, G.A.Q, Spoken English, ஆங்கிலம் மூலம் தரம் 6.7 எல்லாப் பாடங்களும கற்பிக்கப்படும்.

தொடர்பு: 85, சிவன் கோயிலடி, மேற்கு வீதி, திருநெல்வேலி. (34)(28683)


# 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

தோற்றம்
02 - 01 - 1937



மறைவு
22 - 01 - 2004

### திருமதி இரஞ்சிதமலர் சோமசுந்தரம்

*2004 ஆம் ஆண்டு தைமாதம் 22 ஆம் திகதி பூர்வபக்க பிரதமைத் திதியில் அமரத்துவம் எய்திய அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

மரணச்சடங்கில் கலந்துகொண்டோர், அனுதாபச் செய்திகளை அனுப்பியோர், மலர் வளையங்கள் ஈந்தோர், துயர்மிகுவேளையில் பல்வேறு வழிகளிலும் உதவியோர், ஒத்துழைத்தோர் அனைவருக் கும் எங்கள் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

- குடும்பத்தினர்.

**33A 1/1, 33** *ஆம் ஒழுங்கை,*
*வெள்ளவத்தை.* (C/33369)(34-19-12)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
14 - 10 - 1927



இறப்பு
21 - 01 - 2004

### திருமதி அருந்ததி செல்வராசா

அருந்ததி யாகத் தோன்றி
அன்புத் தாயாகி நின்றாய்
மாத்தனைக் கந்தன் அருளோடு
மாண்புற வாழ்ந்தாய்
அயலவர்கள் போற்ற அறம்
பல செய்தாய்
இன்று எம்மை துயரத்திலாழ்த்தி
தாயவளாகிவிட்டாய்
இறைவாழ்வில் அமைதி பெற
இறைஞ்சுகின்றோம்.

மணியகாரன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மகன்,மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்,
மைத்துனிகள். (28497)(34-19-26)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

*தாயின் மடியில்*
*1936 – 01 – 27*



*இறைவன் அடியில்*
*2004 – 01 – 22*

### அமரர் சோமசுந்தரம் அருளம்பலம்

(ஓய்வுபெற்ற அதிபர். யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம்)

அன்போடும் பண்போடும்
பட்டுமணி தனைவளர்த்து
பாரதனை ஆளவிடுவேன்
குட்டிமணி தனை வளர்த்து
குவலயங்கள் ஆளவிடுவேன்
எனஎம்மை தாலாட்டுப்பாடி
வளர்த்தாயே அப்பா!
எம்மால் மறக்கமுடியவில்லை
அன்பாக அணைத்த கரங்கள் எங்கே
இங்கே கதிகலங்கி நிற்கின்றோம்
இங்கே ஒருமுறை வாரீரோ!

இன்று (21.02.2004) சனிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறுகின்ற அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
தனங்களப்பு. சாவகச்சேரி.
தற்காலிக முகவரி:
கோப்பாய் மத்தி. பெற்றோல் நிரப்புவீதி. கோப்பாய்.

மைத்துனர்: **இ.ஜெகராசா,**
மனைவி: **அ.தனராணி**
பிள்ளைகள்: **அ.சந்திரமோகன், அ.கேதாரணி.**
(27943)(34-19-26)

# அதிகாரப் போரின் முடிவு எப்படியிருப்பினும் நாட்டுக்கும், மக்களுக்குமே பெரும் பாதிப்பு

**நாட்டில் அரசியல் கட்சிகளிடையே நிலவும் அதிகாரப் போர் தொடர்பாக "ராவய" சிங்கள வார இதழ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் விவரித்துள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

கடந்த நான்கு ஆண்டுகளுக்குள, மூன்றாவது தேர்தலை இப்போது மக்கள் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

சிலவேளை, இத்தேர்தல் முடிவுற்று, சிறிது காலத்தின் பின்னர், மற்றொரு தேர்தல் நடைபெற்றாலும் அதில் ஆச்சரியமில்லை.

அரசியல் நாகரிகம் மிக்க நாடுகளில் நாடாளுமன்றத்தின் ஆயுள் காலம் முடிவுற்ற பின்னர், அல்லது நாடாளுமன்றத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கான பெரும்பான மைப்பலத்தை ஆளும்கட்சி இழக்கும சந்தர்ப்பத்திலேயே நாடாளுமன்றம் கலைக்கப்படுகின்றது. ஆனால், தற்போது இலங்கையில் இந்த இரு காரணங்களை முன்னிட்டும் நாடாளுமன்றம் கலைக்கப்படவில்லை. ஜனாதிபதி கொண்டுள்ள அபரிமிதமான அதிகாரங்கள் காரணமாகவே மக்கள் தேர்தலை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. அதிகாரம் என்பது நியாயமானதும், சட்டத்துக்கு உட்பட்டதுமேயன்றி தான்தோன்றித்தனமாக நடப்பதற்கு அல்ல. அதற்கு வரைவிலக்கணம் இருந்தாலும், அத்தகைய எதுவும் எமது நாட்டு அரசியல் நடைமுறைகளில் இருப்பதாகத் தெரியவில்லை. வேறுநாடுகளில், இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீதிமன்றம் சென்று அதற்கு எதிராக முறையீடு செய்ய வழிமுறைகள் இருந்தாலும் இலங்கையில் அத்தகைய முறைகள் செல்லுபடியற்றவைகளாகவே உள்ளன.

### அரசியல் கலாசார சீரழிவு

ஜனாதிபதியின் இந்தத் தீமானங்களுக்கு எதிராக, ஐ.தே.கட்சி, போதுமான எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை. அதுபோன்றே சுதந்திரக் கட்சி மாத்திரமின்றி அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளுடன் எப்போதும் செயல்படுவதாக மார்தட்டிக்கொள்ளும் ஜே.வி.பி.கூட இதை அனுமதித்துள்ளது. ஜே.வி.பியினரின் அழுத்தங்களுக்கு உட்பட்ட, அவர்களது வாதங்களின் பிரதிபலிப்பே, இந்த நாடாளுமன்றக் கலைப்பு என்றுகூடக் கூறமுடியும். இலங்கையின் ஒட்டுமொத்த அரசியல் கலாசாரம, எவ்வளவு தூரம் சீரழிந்து போயுள்ளது என்பதை இந்த ஒழுக்கக் கேடுகள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

தேர்தல் தவிர்க்க முடியாதது என்ற நிலை இருந்தாலும், அதை அமைதியாகவும் நாகரிகமாகவும் மேற்கொள்ளத்தேவையான ஆயத்தங்களை தேர்தலுக்கு முன்னரே மேற்கொள்ளககூடிய வாய்ப்புகள் இருந்தன. ஆனாலும் எந்தவொரு கட்சிக்கும் அதற்கான தேவை. இருக்கவில்லை. அதிகாரப்போட்டியைக் காட்டுமிராண்டித்தனமாக முடிவின்றி இழுத்தடிப்பதே சகல அரசியல்வாதிகளதும் விருபபமாக இருந்தமை தெரிகிறது.

தேர்தல் செயற்பாடுகள் தொடர்பாக பொதுச் சொத்துக்களை ஆளுங் கட்சியினர் பயன்படுத்துவதைத் தடுபபதற்கு ஜனாதிபதி பெருமுயற்சி செய்து வருவதும்கூட நன்றாகத் தெரிகிறது. ஜனாதிபதி தனது எதிரணிக்கும் பாதிப்பை ஏற்படுத்தவே அவ்வாறு செயற்படுகிறார் என்றாலும், பொதுச் சொத்துகளை தேர்தல் செயற்பாடுகளுக்கு ஆளும் கட்சியினர் பயன்படுத்துவதைத் தடுப்பது நல்லதே. ஆனாலும் ஜனாதிபதியின் கட்சி ஆட்சி செய்த காலங்களில் நடந்துள்ள தேர்தல்களின் போது, பொதுச்சொத்துகளை ஆளும்கட்சி பயன்படுத்துவது தடை செய்யப்படவில்லை என்பதையும் மறந்து விடமுடியாது.

நாடாளுமன்றச் சம்பிரதாயங்களின படி நாடாளுமன்றத்தினுள் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என்ற வேறறுமை நிலவுகிறது. அமைச்சர் பதவிகள், ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கப்படுகின்றன. ஆனால், எதிரணிக்கும்கூட அமைச்சர் பதவிகளை வழங்கும் விசேடமான முறை இலங்கையில் கடைப்பிடிக்கப்படுகிறது. தி.மு. ஜயரத்ன போன்ற நபர்கள் அத்தகைய பதவியொன்றை ஏற்பதைப் புரிந்துகொள்ள முடிந்தாலும் லக்ஷ்மன் கதிர்காமர் போன்ற, சம்பிரதாயங்களுக்கு மதிப்பளிப்பதில் பெயர்பெற்ற ஒருவர், அத்தகைய நிலைக்கு உட்பட்டதைப் புரிந்துகொள்வது கடினமாகவே உள்ளது. இந்த, முடிவில்லாத காட்டுமிராண்டித்தனமான போரில், யார் வெற்றி பெற்றாலும், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுவதை எவராலும் தவிர்க்க முடியாது என்பதே உண்மையாகும். ✳

**சரா**

---

# குடாநாட்டு வாகனச் சாரதிகளே மனித உயிருக்கு மதிப்பளியுங்கள்!

கடந்த இரு தசாப்த காலத்துக்கும் மேலாகவே அகால மரணங்கள் தமிழர் தாயகத்துக்குப் பழகிப் போனவையாக மாறிவிட்டன.

ஏனெனில், 'ஷெல்கள், விமானக் குண்டுகள், பல்குழல் எறிகணைகள் என்று பல்வேறு வகையில் மரணம் இந்தப் பூமியில் மலிந்துவிட்டது.

ஆனாலும் கோரவிபத்துக்களும் அகாலமரணங்களை ஏற்படுத்தும் காரணியாக மாறிவருவதைத்தான் ஏற்கமுடியாதுள்ளது.

எந்த வாகனம் எந்தப்பக்கம் வந்து மோதப்போகிறதோ? என்ற ஓர் அச்ச நிலையுடனேயே மக்கள் குடாநாட்டு வீதிகளில் நடமாடுகின்றனர்.

சிலவாகனங்கள் மின் கம்பங்களுடன் மோதித் தமது பலத்தை வெளிக காட்டுகின்றன. இன்னும் சில வாகனங்கள் மேலும் ஒரு படி முன்னேறி வீதியை விட்டு விலகிச் சென்று மதிலை உடைத்து வீட்டுக்குள் புகுந்து நலம விசாரிக்கின்றன. வேறு சில வாகனங்கள் சாரதிகளின் கட்டுப்பாட்டை இழந்து சுற்றிச் சுழன்று சகாசம் புரிந்து தலைகீழாகப்புரண்டு அப்பாவிப் பயணிகளை பரலோகம் அனுப்புகின்றன. ஆகமொத்தம் குடாநாட்டில் உயிரிழப்பு அல்லது அங்கவீனத்தை ஏற்படுத்தும் ஒரு விபத்தாவது தினமும் நடக்கிறது.

குடாநாட்டில் இடம்பெறும் வீதி விபத்துக்களுக்கு வாகனங்களின் அதிகரிப்பு, சீரற்ற வீதிகள் என்பன உட்படப் பலகாரணங்கள் கூறப்படுகின்றன. ஆனாலும் சமீபகாலமாகப் பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகணங்களின் அதிவேகத்தால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

### பொதுப்போக்குவரத்து வாகனங்கள்

"அம்மா வாருங்கோ"
"ஐயா ஏறுங்கோ"
"அண்ணா முன்னுக்கு வாங்கோ"
"அக்கா பின்னுக்குப் போங்கோ"
"தங்கச்சி விலத்துங்கோ"
"தம்பி காசைத் தாங்கோ"

இப்படித் தமிழ்மொழியில் உள்ள அன்பான உறவு முறைச் சொற்களையெல்லாம் இன்று நாம் தாராளமாகக் கேட்கக்கூடிய இடங்கள் எமது பஸ் தரிப்பு நிலையங்கள்தான். மாமா, மாமி, மச்சான், மச்சாள் போன்ற சில உறவுமுறைச சொற்களைக் கேட்க முடியாதிருப்பதுதான் ஒரு குறை.

இவ்வாறு உறவு முறைச் சொற்கள் எமது பொதுப்போக்குவரத்துச் சேவை வாகன நடத்துநர்களால் ஒலிக்கப்படும் போது அவை உள்ளதில் இருந்து எழுகின்றனவா? அல்லது வெறும் உதட்டளவில் எழுகின்றனவா என்ற சந்தேகம் இப்போது எழுகின்றது. ஏனெனில் அந்த அன்பான சொற்கள் உள்ளத்தில் இருந்து எழுந்தால் தனியார் போக்குவரத்து வாகனங்களின் சாரதிகள் அதிகவேகத்தில் வாகனங்களை விரட்டி விபத்துக்கள் ஏற்படக் காரணமாகமாட்டார்கள்.

### உயிரின் விலை?

உதாரணமாக அடுத்த பஸ்தரிப்பிடத்தில் காத்துக் கொண்டு இருக்கும் ஐந்து பிரயாணிகளை ஏற்றுவதற்காக பொதுப்போக்குவரத்து வாகனங்கள் இரண்டு போட்டி போட்டுக் கொண்டு கண்மண்தெரியாமல் வேகமாகப் போகும்போது ஏற்பட்ட கோர விபத்தில் இரண்டு மனித உயிர்கள் பலி எடுக்கப்படுகின்றன என்று வைத்துக் கொள்வோம். பஸ்தரிப்பு நிலையத்தில் நின்ற குறிப்பிட்ட ஐந்து பிரயாணிகளும் கொடுக்கும் பயணக் கட்டணம் மொத்தமாக ஐம்பது ரூபா என்றும் வைத்துக் கொள்வோம் அப்படியாயின் இங்கு இரண்டு மனித உயிர்களின் மொத்தப் பெறுமதி ஐம்பது ரூபா ஆகிறது. ஆகவே யாழ். குடாநாட்டில் ஒரு மனித உயிரின் விலை வெறும் இருபத்தைந்து ரூபா மட்டுமே. எனவே இந்த விதமாகப் பார்க்கும் போது மனித உயிரின் மதிப்புக் குறைந்து கொண்டே சென்று செல்லாக் காசாக மாறுகின்ற நிலை விரைவில் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### வீதிகளின் நிலை

வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட காரணங்களில் ஒன்று வீதிகளின் மோசமான நிலைமையாகும். குடாநாட்டுப் புனர்நிர்மாணப் பணிகளில் பின் தங்கிய நிலையில் உள்ளன என்பதை தெட்டத்தெளிவாகக் காட்டிக் கொண்டிருப்பவை அவல நிலையில் உள்ள எமது வீதிகள்தான்.

ஒற்றைத் திருக்கல் மாட்டு வண்டி போவதற்குக் கூடத் தகுதியற்ற வீதிகளே பெரும்பாலும் இங்கு காணப்படுகின்றன. ஆனால் அத்தகைய வீதிகளில்தான் 'ரோசா', ஹைஏஸ்', 'பொகசர்', 'ஹீரோஹொண்டா' என விதவிதமாக அதியுயர் வேகத்தில் பறக்கின்றன. ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. ஆஸ்பத்திரிக்கு அல்லது மேலுலகுக்கு வெகுவிரைவாக மனிதரை அனுப்பிக் கொண்டும் இருக்கின்றன.

மோசமான வீதிகளைச் செப்பனிடுவது என்பது தனிமனித முயற்சிக்கு அப்பாற்பட்ட விடயம் ஆகும். இதனைச் சீர்செய்ய வேண்டியவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளே. ஆகவே அத்தகைய அதிகாரிகளும் வீதி விபத்துக்கள் அதிகரிக்கக் காரணமாகின்றனா.

### வீதி ஒழுங்கு

ஒரு மனிதன் தனது வீட்டு முற்றத்தைப் பயன்படுத்துவதற்கும், பொது வீதியை பயன்படுத்துவதற்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. அதாவது வீட்டு முற்றத்தை தான் நினைத்தபடி பயன்படுத்தலாம். எவரும் ஏனென்று கேட்கமுடியாது. ஆனால் பொது வீதியைப் பயன்படுத்தும் போது அதற்குரிய ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கத்தான் வேண்டும். அதாவது ஒரு மனிதன் தன்னைப் பாதுகாப்பதுடன் மற்றையவர்களுக்கும் இடையூறு ஏற்படுத்தாமல் பொதுவான வீதிகளைப் பயன்படுத்த வேண்டும்.




இதற்கு வீதி ஒழுங்கு முறைகள் பின பற்றப்படவேண்டும்.

ஆனால் எமது வீதிகளில் இன்று நடப்பது என்ன சைக்கிளில் செல்லும் எமது இளம் சமூகம் வீதியை அடைத்தபடி சமாந்தரமாகச் செல்கின்றது. வணணவண்ண நிறமுடைய விதம்விதமான மோட்டார்ச் சைக்கிள்கள் வித்தைகள் காட்டிக்கொண்டு பறக்கின்றன.

சில பொதுப்போக்குவரத்து வாகனங்கள் வீதிகளில் தமக்கிடையே ஓட்டப்போட்டி நடத்தி ஓடி ஓடி உழைத்து ஊருக்கெல்லாம் மரணச்செய்திகளை அறிவித்துக் கொண்டு இருக்கின்றன.

### தடுக்கும் வழி

இந்த வீதிவிபத்துக்களைத் தடுபபதற்கு நமக்கு நாமே கட்டுப்பாடுகளை விதிப்பதே சிறந்த வழியாகும்.

பாலர் வகுப்பில் இருந்தே மாணவர்களுக்கு வீதி ஒழுங்குமுறை தொடர்பான பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு கற்பிக்கப்படுதல் வேண்டும். அவர்கள அவற்றைக் கடைப்பிடிப்பதும் உறுதி செய்யப்படவேண்டும். மனித உயிர்களைக் காப்பாற்றும் நோக்குடன் அவல நிலையில் உள்ள வீதிகளைச் சிரமதான அடிப்படையில் செப்பனிடவேண்டும். தமது வீட்டு முற்றத்தைச் சுதந்திரமாகப் பயன்படுத்துவது போலவே பொது வீதிகளைப் பயன்படுத்தும் பழககத்தை நாம் கைவிடவேண்டும் ✳

**வடகோவை சிவநேசராசன்**

---

# பரீட்சைகளில் அக்கறை காட்டுங்கள்; அதேசமயம் பொதுஅறிவையும் வளருங்கள்!

## மாணவருக்கு திட்டப்பணிப்பாளர் அறிவுறுத்து

தென்மராட்சி,பெப்.21

எமது மாணவர்கள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதில் அக்கறை காட்டுவது தவறல்ல. அதேசமயம் பொதுஅறிவை வளர்ப்பதிலும கவனம் எடுக்கவேண்டும்.

- யாழ். செயலகத்திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை இவ்வாறு அறிவுறுத்தினார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின நூறாவது வருடாந்த மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்து இங்கு வரும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை அவர்களுடன் அளவளாவும் போது எம்மால் உணரமுடிகிறது. அந்த மாணவர்களுடன் எமது மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசமுடியாமல பிறர் உதவியை நாடும் அவல நிலையைக் காணும்போது எமது மாணவர்களின் கல்விநிலையின் வீழ்ச்சியை உணரமுடிகிறது.

பிரபல கல்விமான்களை உருவாக்கிய எமது பிரதேசத்தில் ஆங்கில அறிவுடைய மாணவர்களைச் சந்திப்பது மிகவும் அரிதாகவே உள்ளது.

தமது பிள்ளைகள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டுமெனப் பெற்றோர்கள் விரும்புகின்றனர். இதில் தவறில்லை. ஆனால் தமது பிள்ளைகள் ஏனைய அறிவுகளைப் பெறுவதில் அக்கறை காட்டப் பெற்றோர்கள் தவறிவிடுகின்றனர். மாணவர்கள் தமது பாடங்களைப் படிப்பதுடன நின்றுவிடாமல் நூல்நிலையங்களுக்குச்சென்று அறிவைப் பெருக்கும் நூலகளை கற்றறிதல் வேண்டும் என்றார் அவர்.

கல்லூரி அதிபர் இ.கயிலைநாதன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் தாமோதரம்பிள்ளை இல்லம், ஸ்ரீசுமங்களா இல்லம் சம புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றன. (ஒ-117)

---

# புலன்விருத்தி குன்றியவர்களுக்கும் உரிமைகளை அனுபவிக்க உரித்துண்டு!

## விளையாட்டு நிகழ்வில் உரை

வலிகாமம்தெற்கு,பெப்.21

"புலன்விருத்தி குன்றியவர்கள் ஏனையோர் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவிக்க உரித்துடையவர்களாவர்.

யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி புலன் விருத்தி குன்றியவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சமூகஜோதி கா.கணேசதாசன் இவ்வாறு தெரிவித்தார்.

சங்கக் காரியாலய மண்டபத்தில வைத்திய கலாநிதி என்.சிவராஜா தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் கா.கணேசதாசன் மேலும் கூறியதாவது:-

கல்வி, தொழிற்பயிற்சி, தொழில் வழங்கல் போன்ற துறைகளில் மனித நேய அடிப்படையில் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை அளித்து, சமூகத்தில் அவர்களும் ஒரு பங்காளி என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். ஊனமுற்றவர்கள் உறவுகளுக்குள்ளேயே புறந்தள்ளப்படும் நிலை மாறவேண்டும் எனக் கூறினார்.

வைத்திய கலாநிதி என்.சிவராஜா தலைமையுரையில் தெரிவித்ததாவது:-

ஊனமுற்றவர்களைச் சமூகத்தில் சுமைகளாகக் கருதாது அவர்களுக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தரக்கூடிய எண்ணங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஒ-152)

---

# தேர்தலில் ஈடுபடுவதற்கு 3 கட்சிகளுக்குத் தடை!

சாய்ந்தமருது,பெப்.21

தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) உட்பட மூன்று அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தடைசெய்துள்ளார். பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ), சர்ச்சைக்குள்ளாகியுள்ள ஈழமக்கள் ஜனநாயக முன்னணி (ஈபிஆர்எல்எவ்), கே.டி.சஜீத் தேவானந்த தலைமையிலான யூத் ஜன விமுக்தி சஹயோகிதா பெரமுன ஆகிய அரசியல் கட்சிகளே இவ்வாறு எதிர்வரும் பொதுத தேர்தலில் ஈடுபடுவதற்கு தடை செய்யப்பட்டவைகளாகும்.

தேர்தல் ஆணையாளர் அலுவலகதில் மொத்தமாக 51 அரசியல் கட்சிகள் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவதற்குத் தகுதி உடையனவாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இக்கட்சிகளுள் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியும் அடங்கியருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘நீரப்’ திட்டத்தின் கீழ் குடாநாட்டின் குடிதண்ணீர் விநியோகம் சீராக்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.21

நீரப் திட்டத்தின் கீழ் குடாநாட்டின் குடிதண்ணீர் விநியோகப் பணிகள் சீர்செய்யப்படவுள்ளன.

இந்தத் திட்டத்துக்கு நீரப் நிறுவனம் ஒருகோடி ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது என்றும் -

இந்தப் பணிகள் யாழ். பிராந்திய உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள எட்டு இடங்களில மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் - உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்கீழ், சாவகச்சேரி நகரசபையின் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தில் ஏழு திறந்த கிணறுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதுடன், சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமத்தில் உள்ள குழாய்க் கிணறுகள் மற்றும் திறந்த கிணறுகள என்பனவும் புனரமைக்கப்படவுள்ளன.

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அராலி வடக்கு, முதலிகோவிலடி மற்றும் பொன்னாலைப் பகுதியில் உள்ள குடிதண்ணீர்க் குழாய்களை புனரமைக்கும் பணியும் - மேற்கொள்ளப்படவுள்ளது.

அடுத்தமாதம் முற்பகுதியில் இந்தப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகும் - என்று கூறப்பட்டது.(எ-6)

## நிர்க்கதியான குடும்பம் ஒன்றுக்கு கோப்பாய் எழுச்சிப் பேரவை உதவி

சிறுப்பிட்டிப்பகுதியில் வீடு எரிந்து போனதால் நிர்க்கதியாக நின்ற குடும்பம் ஒன்றுக்கு கோப்பாய் பிரதேசத் தேசிய எழுச்சிப் பேரவையினர் உதவி வழங்கினர்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த பாடசாலை செல்லும் மாணவருக்கு சீருடைகள் மற்றும் புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பாடசாலைப் பைகள் என்பவற்றை தேசிய எழுச்சிப பேரவையின் கோப்பாய்ப் பிரதேச அமைப்பினர் வழங்கினர்.

அத்துடன் அந்தக் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் உடுபுடைவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பிரதேசத் தேசிய எழுசசிப் பேரவை காரியாலயத்தில் வைத்து இப்பொருள்களை தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் வழங்கினார்.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச அரசியற்றுறைப் பொறுப்பாளர் கிரி மற்றும் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஓ-86)

# திடீர்ப் பொதுத் தேர்தலால் கல்விச் செயற்பாடுகள் குழப்பம்

## ஜனாதிபதி மீது குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.21

ஜனாதிபதி தமது இஷ்டப்படி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு அடுத்த பொதுத்தேர்தலுக்கான திகதியை நிர்ணயித்திருப்பதால் பாடசாலை மாணவர்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கிறார் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு. எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலினால் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைகள் பிற்போடப்பட்டிருக்கின்றன. இதனால் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கல்விச் செயற்பாடுகளில் பாரிய குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன எனவும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இது தொடர்பாக அமைச்சர் கொடித்துவக்கு மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை மே மாதத்திற்குப் பிற்போடப்பட்டிருப்பதால் பரீட்சை முடிவுகள் வெளியாவதும் தாமதமடையப் போகிறது.

இதனால் பல்கலைக்கழகங்களில அடுத்த கல்வி ஆண்டை குறித்த காலப் பகுதியில் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமின்றி ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கும் மாணவர்கள் உரிய காலத்தில் விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

சர்வதேச கல்வித்திட்டத்தின் அடிப்படையில் வருடாந்தம் 210 முதல் 220 பாடசாலை நாள்கள் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கின்ற போதிலும் இலங்கையில் 190 நாள்களே பாடசாலைகள் நடத்தப்படுகின்றன.

இம்முறை 150 இற்கும் குறைவான நாள்களே பாடசாலைகளை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2 லட்சத்து 40 ஆயிரம் மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொள்ளாமல் ஜனாதிபதி தனது தன்னிச்சையான முடிவை எடுத்துள்ளார்.

பாடசாலைகளின் இரண்டாம் தவணை ஆரம்பத்திலும் பெரும் குழப்பங்கள் தோன்றியுள்ளன. ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளில் இரண்டு பிரிவுகளாக இரண்டாம் தவணைப் பாடத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது மாணவர்களின் கல்விச செயற்பாடுகளுக்குப் பெரும் பாதிப்பாக அமையும்.

- இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## கற்றல் உபகரணம் அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,பெப்.21

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அறிவொளிர் ஒன்றியம் சில்லாலை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலையில் கற்கும் வசதி குறைந்த நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

சங்க அறிவொளிர் ஒன்றியத்தின் தலைவர் பி.சூசைப்பிள்ளை இத் தகவலை தெரிவித்தார். (எ-135)

# ஐ.ஜி.பி. சேவைக்காலம் நீடிப்பால் ஜனாதிபதி - அரசு மற்றொரு சர்ச்சை!

## ஜனாதிபதியின் உத்தரவை அரசு நிராகரிக்கிறது

கொழும்பு,பெப்.21

பொலீஸ்மா அதிபர் (ஐ.ஜி.பி.) இந்திரா டி சில்வாவின் பதவிக்காலம் நீடிப்புத தொடர்பாக ஜனாதிபதிக்கும் அரசுக்குமிடையே மற்றொரு சர்ச்சை உருவாகியுள்ளது. இந்திரா டி சில்வா பொலீஸ்மா அதிபர் பதவியைத் தொடர்ந்து வகிக்க உரிமையுடையவரா இல்லையா? என்பது குறித்தே சர்ச்சை எழுந்துள்ளது.

60 வயதைப் பூர்த்தி செய்வதால் இந்திரா டி சில்வா நேற்று முன்தினம் முதல் ஓய்வு பெற்றவராவார் என்று அரசு கூறுகிறது. ஆனால், அவரது பதவிக் காலத்தை ஜனாதிபதி மேலும் ஆறுமாதங்கள் நீடித்திருக்கிறார் எனவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி வரை அவர் பதவி வகிப்பார் என்றும் ஜனாதிபதி செய லகம் தெரிவித்திருக்கிறது.

60வயது பூர்த்தியுடன் தான் ஓய்வுபெறுவதை ஏற்றுக்கொள்ளுமாறு கோரி கடந்த ஜனவரி 8ஆம் திகதி இந்திரா டி சில்வா ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார் எனவும் அக்கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார் எனக் கூறி கடந்த 28ஆம் திகதி ஜனாதிபதியின் செயலாளர், இந்திரா டி சில்வாவுக்கு கடிதம் அனுப்பியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், செயலாளரினால் அனுப்பப்பட்ட கடிதத்தை கடந்த புதன் கிழமை ரத்துச்செய்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இந்திரா டி சில்வாவின் பதவிக்காலத்தை மேலும ஆறு மாதங்களால் நீடித்து கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

பொலீஸ்மா அதிபருக்கு இவ்வாறான ஒரு சேவை நீடிப்பை வழங்க ஜனாதிபதிக்கு எந்த அதிகாரமும் இல்லையென அரசு கூறுகிறது. பொலீஸ்மா அதிபர் பதவி, ஒரு அரச திணைக்களத் தலைவர் பதவியாகக் கணிக்கப்படுவதால் பொலீஸ்மா அதிபரின் பதவிக்கால நீடிப்பு அமைச்சரவையின் அனுமதியுடனேயே நடைபெற வேண்டுமெனவும் அரசு கூறுகிறது.

அரசமைப்புச் சட்டத்தின் 17 ஆவது திருத்தத்தின் படி, சபாநாயகரின் தலைமையிலான அரசமைப்புச் சபையின் அங்கீகாரத்துடனேயே ஜனாதிபதி பொலீஸ்மா அதிபரை நியமிக்க முடியும்.

பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவின் பதவிக்காலத்தை நீடிக்குமாறு ஜனாதிபதி செய்திருந்த சிபார்சை கடந்த மாதம் கூடிய அரசமைப்புச் சபை நிராகரித்திருக்கின்றது.

இந்த நிலையில், சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஜயதிஸ்ஸ ஹேரத்தை பதில் பொலீஸ்மா அதிபராக நியமிக்குமாறு அமைச்சரவை சிபாரிசு செய்யலாம் என அரசு வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

## வைத்திய அதிகாரிகள் இடமாற்றம்

வலி.தென்மேற்கு,பெப்.21

வேலணை அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக டாக்டர் ஆ.திருநாவுக்கரசு இம்மாதம்முதல பதவி ஏற்றுள்ளார். இங்கு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வந்த டாக்டர் சி.கமலநாதன் சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.(எ-135)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்.சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கு புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த 5ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்திலேயே இத்தெரிவுகள் இடம்பெற்றன.

விளையாட்டுக்கழகத்தின் தலைவராக பி.சங்கரும் செயலாளராக கே. யோகேஸ்வரனும், பொருளாளராக ரி.உமாசங்கரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-8)

## போலந்து திரைப்பட வீடியோக்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் புகழ்பெற்ற போலந்து நெறியாளரான கிறிஸ்ரோ.ஃ.வ கியலெஸ்கியின், "THREE COLOURS BLUE" என்னும் திரைப்படம் ஆங்கிலத் துணைத்தலைப்புகளுடன் காண்பிக்கப்படும்.

படக்காட்சியின் இறுதியில் அ.யேசுராசா, க.சட்டநாதன், ஏ.ஜே.கனகரட்னா ஆகியோரின் நெறிப்படுத்தலின கீழ் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வமுள்ளவர்கள் எவரும் பங்கு கொண்டு பயன்பெறலாமென ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (எ)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
டாக்டர்கள் சிபார்சு செய்வது
றோயல் குளுக்கோஸ்
100 % சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:- Royal Industries, Colombo.
0112334603




ஏக விநியோகத்தர்கள்
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567
சத்திரத்துச் சந்திக்கு அருகில்

ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
ஓடியோ பாடல் சிடி, வீடியோ பாடல் சிடி,
எம்.பி.3 பாடல் சிடி, திரைப்பட சிடி இவைகளை
10% விலைக் கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் ஒசாகி சிடி பிளேயர்,
பனசோனிக் சிடி பிளேயர், ஜெனரேட்டர்
போன்ற எலக்ரோனிக் பொருள்களையும்
மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கவிதாஸ் எலக்ரோனிக்ஸ்
181, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P.: 0777 758217. (சி-33365) (26-13-19-21)


## பொதுமக்களுக்கு முக்கிய அறிவித்தல்

**யாழ்ப்பாணம் நல்லூர் நல்லைநாத (அல்லது சட்டநாத) சுவாமி கோயில்**

நல்லூர் நல்லைநாத சுவாமி கோயிலுக்கு 1907ஆம் ஆண்டு வைகாசி முதலாம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் T.சிவசிதம்பரம முன்பாக நிறைவேற்றப்பட்ட 2765 இலக்க தர்மசாதன உறுதிப்படியும் அச்சாதனம் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் நம்பிக்கைச் சொத்து 33 இலக்க வழக்கில் அணைக்கப்பட்டு அவ்வழக்கில் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரமும் நானே குறித்த கோயிலுக்கு தர்மகர்த்தா. அக்கோயிலுக்குரிய ஆதனங்களை சில நபர்கள் கருத்தொருமித்து ஒன்றுசேர்ந்து சட்டத்திற்கு மாறாகவும் விரோதமாகவும் பிறருக்கு விற்பதற்கும் குத்தகைக்குக் கொடுப்பதற்கும் அடாத்தாகக் கோயில் காணிகளில் இருப்பவர்களிடமிருந்து பணத்தை அறவாக்கவும் முயற்சிகள் செய்கிறார்கள்.

ஆகவே, குறித்த கோயிலுக்குரிய காணிகளையிட்டு சட்டத்திற்கு மாறான தனிநபர் குழுக்களிடம் பணத்தைக் கொடுத்து சட்டத்திற்கு மாறாக எவ்வித எழுத்துச் சாதனத்தையும் அல்லது பற்றுச்சீட்டுக்களைத் தந்தாலும் ஏமாறவேண்டாம் என்று இத்தால் அறிவிக்கின்றேன்.

குறித்த கோயில் காணிகள் சம்பந்தமாக சட்டரீதியான முறையில் தொடர்புகொள்ள விரும்பினால் என்னிடம் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

**சின்னத்தம்பியாப்பிள்ளை துரைராசா**
நல்லூர் நல்லைநாத (அல்லது சட்டநாத) சுவாமி கோயில் தர்மகர்த்தா
*124, டபிள்யு. ஏ. சில்வா மாவத்தை,*
*வெள்ளவத்தை, கொழும்பு 6. தொ. பேசி: 011-2365729.* (28677) (34-13-19-21)

## 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 14 - 03 - 1937 |  | 23 - 01 - 2004 |

### அமரர் இராமலிங்கம் கதிர்காமநாதன்

கடந்த **23.01.2004** அன்று காலமான எமது குடும்பத் தலைவரின் மறைவின்போது மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் இன்று (21.02.2004) சனிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறுவதால் அந்நிகழ்விலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.* (28693)(34-13-19-21)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அருணாசலம் சிவலக்சுமிதேவி

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த திருமதி அருணாசலம் சிவலக்சுமிதேவி அவர்கள் (16.02.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் மயானததிற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சுகி பவனம்',*
*இந்துக்கல்லூரி ஒழுங்கை,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*


தகவல்:
**த.அருணாசலம்**
(கணவர்)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# அஞ்சலகக் கட்டடம் திறக்கப்படுமா? சாவகச்சேரிப் பொதுமக்கள் ஏக்கம்



அஞ்சலகத்துக்கென்று கட்டப்பட்ட புதிய கட்டடம்



தற்போது அஞ்சலகம் இயங்கும் பழைய களஞ்சிய அறை

தென்மராட்சி,பெப்.21

2000ஆம் ஆண்டு சாவகச்சேரிப் பகுதியல் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின்போது சேதமடைந்த அரச அலுவலகங்களில் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகமும் ஒன்றாகும். இந்த அஞ்சல் அலுவலகமும் அலுவலர் விடுதியும் யுத்தத்தினால் பலத்த சேதங்களுக்கு இலக்காகிக் காணப்பட்டன.

சாவகச்சேரியில் மீளக்குடியமர்ந்தவர்களின் அஞ்சல் தேவைகளைப் பூர்த்தி செய்ய சேதமடைந்த களஞ்சியக் கட்டடம் ஊழியர்களால் தற்காலிகமாகச் சீர்செய்யப்பட்டு அங்கு அஞ்சலகம் செயற்பட்டு வருகிறது. ஒரு அறையைக் கொண்ட இந்தத் தற்காலிக அலுவலகம் மழைபெய்யும் வேளைகளில் வெள்ளக் காடாகக் காட்சி தரும். இடவசதி இல்லாததால் முன்னர் தபால் வண்டில்கள் பாதுகாப்புக்காக விடப்படும் கொட்டிலிலேயே தினமும் தபால் பிரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கட்டடமும் கடந்த வருட மழையின்போது சரிந்து வீழ்ந்து சேதமடைந்து பின்னர் மீண்டும் சீர் செய்யப்பட்டது.

2003 ஆம் ஆண்டில் தொலைத்தொடர்பு அமைச்சின் விசேட ஒதுக்கீட்டிலிருந்து கிடைத்த 40 லட்சம் ரூபாவைக் கொண்டு அஞ்சல் அலுவலகம் கட்டப்பட்டது. கடந்த டிசெம்பர் மாதம் அஞ்சலகத்துக்குரிய உபகரணங்களும் வந்துசேர்ந்தன.

ஆனால், புதிய கட்டடத்தின் திறப்பு விழா தாமதமடைந்துகொண்டே செல்கிறது. பொதுமக்கள் இதன் பின்னணியில் அரசியல் காரணங்கள் உள்ளதாகப் பேசிக் கொள்கின்றனர். யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமக்குச் சகல வசதிகளுடன் கூடிய அஞ்சல் அலுவலகம் வரவுள்ளது என்று எதிர்பார்ப்புடன் இருந்து ஏமாற்றமடைந்துள்ளனர்.

அரசியல் காரணமாக அஞ்சல் அலுவலகத் திறப்புவிழா தாமதமடைவதாகக் கூறப்படுவதால் இனிப் பொதுத் தேர்தல் முடிந்து புதிய நாடாளுமன்றம் கூடி அமைச்சர்கள் தெரிவுசெய்யப்பட்ட பின்னரே இந்த அஞ்சலகம் திறக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் தேவைக்காகவா அல்லது அரசியல்வாதிகளின் பெயருக்காகவா இந்த அஞ்சல் அலுவலகம் புனரமைக்கப்பட்டது என்பது சாவகச்சேரிப் பகுதி மக்களின் கேள்வியாக உள்ளது.

'சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி விடமாட்டார்' என்ற நிலையில் இப்போது சாவகச்சேரி அஞ்சலகப் புதிய கட்டடம் உள்ளது.

(ஒ-117)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.21

தீவக கல்வி வலய மேம்பாட்டுப் பேரவை இணைப்பாளர் ஆசிரியர் வேலுப்பிள்ளை சிவநேசன் எழுதிய "கல்வியும் குடும்பப் பொருளாதாரமும்" எனும் ஆய்வு நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். இதில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-173)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.21

அபிவிருத்தி சமூக அமைப்புக்களின் வலையமைப்பு நடத்தும் விசேட கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தைச் சேர்ந்த யாழ். மாவட்ட வெளிக்களக் காரியாலய தலைமை அதிகாரி கே.சுகிமுறாட்டா கலந்துகொண்டு திட்ட நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடவுள்ளார். (ஒ-ரி)

## செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.21

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் மனைப்பொருளியல் பாடத்தைக்கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. செயலமர்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

## நாவாந்துறையில் புனரமைப்புத் திட்டம்

குருநகர்,பெப்.21

நாவாந்துறை சூரியவெளிப் பகுதியில் சேதமடைந்துள்ள 65 வீடுகள் 'நிக்கொட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வீட்டுத்திட்டத்தில் குடியிருப்போருக்கு குடிதண்ணீர் வழங்கும் நோக்குடன் 3 குடிதண்ணீர்த் தாங்கிகள அமைக்கப்பட்டுள்ளன. மின் வசதி மற்றும் குடிதண்ணீர்க் குழாய்கள் மூலம் நீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக நாவாந்துறை கிராம அபிவிருத்திப் புனரமைப்புக் குழுத் தலைவர் ச.மரியாம்பிள்ளை தெரிவித்தார். (ஒ-10-51)

## கைதடி - நுணாவில் மினிபஸ் விபத்தில் காயமடைந்தோரின் வாக்குமூலம் பதிவு

தென்மராட்சி,பெப்.21

கடந்த 12ஆம் திகதி கைதடி - நுணாவில் பகுதியில் இடம்பெற்ற மினிபஸ் விபத்தில் காயமடைந்தவர்களிடம் வாக்குமூலம் பெறும்பணியைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். இந்த விபத்தில காயமடைந்தவர்களில் இதுவரை வாக்குமூலம் வழங்காதவர்கள் சாவகச்சேரிப் பொலீஸ் நிலையத்திற்குச் சமுகமளித்துத் தமது வாக்குமூலத்தைப் பதிவுசெய்துகொள்ளுமாறு சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ப.என்.அபேசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி விபத்தில் காயமடைந்தவர்களுக்கு எதிர்காலத்தில் நஷ்டஈடோ அல்லது உதவிகளோ வழங்கப்படும் சந்தர்ப்பங்களின்போது பொலீஸ்முறைப்பாட்டுப் பிரதி அவர்களுக்குத் தேவைப்படும் என்றும் -

ஆகவே, விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில பொலீஸாரிடம் வாக்குமூலம் வழங்காதவர்கள் உடனடியாகத் தமது வாக்குமூலங்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறும் - அவர் கேட்டுள்ளார்.

இந்த விபத்தில் 24பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-31-117)

## நடமாடும் சேவையில் விண்ணப்பித்த பலருக்கு அ.அட்டை கிடைக்கவில்லை

கைதடி,பெப்.21

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற நடமாடும் சேவையின்போது தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் பலருக்கு இதுவரை அடையாள அட்டை வழங்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காலதாமதம் பற்றித் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கேட்கப்பட்டபோது விரைவில் வந்துவிடும என்றும் மேலதிக விவரங்களை யாழ் செயலகத்தில் கேட்டுக்கொள்ளுமாறும் கூறப்படுவதாகவும் -

யாழ். செயலகத்தில் கேட்கப்பட்ட போது தொகுதிதொகுதியாகவே தேசிய அடையாள அட்டைகள் வந்து சேர்கின்றன என்று - கூறப்படுவதாகவும் - சம்பந்தப்பட்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வழக்கமான நடைமுறையில் விணப்பிப்பவர்களுக்கு அடையாள அடைகள் ஆறுமாத காலத்தினுள் வழங்கப்படுகின்றன. ஆனால், நடமாடும் சேவையில் விண்ணப்பித்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்க ஏன் காலதாமதம் ஆகின்றது என்று சம்பந்தப்பட்டவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ஒ-75)

## அச்சுவேலி ஆஸ்பத்திரியில் மருந்தின்றி நோயாளர் சிரமம்

அச்சுவேலி;பெப்.21

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படுகின்றது. இந்த வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களுக்கு மருந்துவகைகளில் பல வைத்தியசாலையில் வழங்கப்படாததால், அவற்றைத் தனியார் மருந்தகங்களில் விலை கொடுத்து வாங்கிப்பயன்படுத்த வேண்டியநிலை ஏற்பட்டிருப்பதாகவும் -

இதனால், வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள நோயாளர்கள் பாதிப்பை எதிர்நோக்குகின்றனர் என்றும் - கூறப்படுகிறது. 'அன்ரி பயாரிக்' மருந்துகள் உட்படப் பல்வேறு மருந்துவகைகளுக்கும் இந்த ஆஸ்பத்திரியில் தட்டுப்பாடு நிலவுவதாகவும் -

ஒதுக்கப்பட்ட முதல் காலாண்டுக்கான மருந்துகள் இதுவரை கிடைக்காததே இதற்குக் காரணம் என்றும தெரிவிக்கப்படுகிறது.(ஒ-11)

## நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்பு

நவாலி,பெப்.21

இலங்கை நிர்வாக சேவையின் தரம்II இற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

1980ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதியில் நிரந்தர ஓய்வூதியமுடைய பதவியொன்றில் 15 வருட சேவையைப் பூர்த்திசெய்தவர்களோ -

பொது எழுதுநர் சேவையின் வகுப்பு ஒன்றில் அல்லது அதற்குச் சமனான ஒரு பதவியுடையவர்களில் 1980ஆம் ஆண்டில் நிரந்தர ஓய்வூதியமுடைய பதவியொன்றில் 10 வருட சேவையைப் பூர்த்திசெய்தவர்களோ-

முன்னர் பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்கு அல்லது அதற்குச் சமனான ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்டவர்களோ - மேற்படி ஆள்சேர்ப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (ஒ-10-100)

### உரியகாலத்தில் நிறைவுறாததால்

## இளவாலை ~ மாரீசன்கூடல் வீதி திருத்தப்பணிகள் இடைநிறுத்தம்

இளவாலை - மாரீசன்கூடல் வீதியின் திருத்தவேலை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கையை வலி. தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் பி.விக்டர் மேற்கொண்டுள்ளார்.

இந்தவீதியின் திருத்தப்பணியை உரிய காலத்தில் பூர்த்திசெய்ய ஒப்பந்தகாரர் தவறிவிட்டார் என்றும் - இதனாலேயே வீதித்திருத்த ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் - பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

புதியகேள்வி அறிவித்தல் மூலம் இந்த வீதித்திருத்தப்பணி வேறு ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஏற்கனவே திருத்த வேலைக்காக வழங்கப்பட்டதால் மீளப்பெறப்படவுளளது என்றும் -

உரிய காலத்தில் குறிப்பிட்ட வேலையைச் செய்யத் தவறிய ஒப்பந்தகாரரது பணி முடிவுறுத்தப்பட்டு ஒப்பந்தம் நிராகரிக்கப்படவுள்ளதாகவும் - (Black List) மேலும் கூறப்பட்டது. (ஒ-185)

## திறப்புவிழா

யாழ்ப்பாணம்,பெப்.21

பிரான்பற்று தம்பித்துரை வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பண்டத்தரிப்பு சமுர்த்தி வங்கிச் சங்கப் புதிய கட்டடத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொளவார். (ஒ-ரி)

## மருத்துவமாதர் இன்றிப் பணிகள் அச்சுவேலிப் பகுதியில் சீர்குலைவு

அச்சுவேலி,பெப்.21

அச்சுவேலிப் பகுதியில் பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் நியமிக்கப்படாததால் பொதுச் சுகாதாரப் பணிகள் பாதிப்படைந்திருப்பதாகப் பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலிப் பகுதியில் பொதுச் சுகாதார மருத்துவமாதுக்களாகக் கடமையாற்றிவந்த இரண்டு பேரில் ஒருவர் இடமாற்றம் பெற்றுச்சென்றிருந்தார்.

மற்றவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். இவர்களின் இடங்களுக்கு வேறெவரும் நியமிக்கப்படவில்லை. இதனால், சுகாதார மருத்துவமாதுக்கள் மேற்கொள்ளும் பணிகள் சீர்குலைந்துள்ளன.

சிறுவர் சுகாதாரம், குடும்ப நலம், நோய்த்தடை, குடும்பக் கட்டுப்பாடு, பிரசவத் தாய்மாருக்கான வழிகாட்டல் ஆலோசனை போன்ற பணிகள் மருத்துவமாதுக்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. மேற்படி பணிகள் வருடத் தொடக்கத்திலேயே சீர்குலைந்ததால் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக அச்சுவேலிப் பகுதி பொது அமைப்புகளும் கவலை தெரிவிக்கின்றன.

கிராமிய மட்டத்தில் வீடுகள் மற்றும் பாடசாலைகள் ரீதியாக மேற்கொள்ளப்படும் பொதுச்சுகாதாரப் பணிகளும் சீர்குலைந்துள்ளதால் தொற்று நோய்த் தாக்கம் ஏற்படக்கூடிய அபாய நிலையும் காணப்படுகிறது. (ஒ-11)



மாதகல் ஜே/150, ஜே/151, ஜே/152 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 'எக்கோ' நிறுவன நிதி உதவியுடன் மீள்குடியமர்வுத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இந்தத் திட்டப் பணிகளை 'கரித்தாஸ் பிரான்ஸ' நிறுவன உயரதிகாரி வான்கோ பெத்தோ, இலங்கைக்கான இணைப்பாளர் பற்றி, மாதகல் பகுதிக்கான திட்டமிடல் அலுவலர் ஜெராட் ஆகியோர் சமீபத்தில் நேரில் பார்வையிட்டனர். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

*(படம்: மாதகல் செய்தியாளர்)*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கலர்மீன்கள், புதியவகை மீன் தொட்டிகள், மோட்டர்கள், அழகுப் பொருள்கள், லவ்பேட்ஸ், கூடுகள், பூங்கன்றுகள், பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (27846)

30 நாள் நிரம்பிய ஒறிஜினல் செப்பேட் அல்ஷேசன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. நாளை (22.02.2004) ஞாயிறு பார்வையிடலாம். தொடர்பு: ம.மார்க்கண்டு, M.S.லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (28158)

J.V.C. Japan வீடியோ டெக், சில திரைப்படப் பிரதிகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: ப.யோகராஜா, அச்சுநகர் சங்க பின்வீதி, C/O திருமதி N.சிங்கராஜா் "கில்டா வாசம்", அச்சுவேலி (சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் பார்வையிடலாம்).(28712)

Suzuki 50, N.P.H.B 9459 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.பொன்னம்பலம், இல.247, பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை. T.P.:226-3575.(28642)

## கார் விற்பனைக்கு

பாவித்த மொறிஸ் கார் (1275 குதிரை வலு 1969 மொடல் 5ஸ்ரீ... இலக்கமுடையது) உடன் விற்பனைக்குண்டு. விலைரூபா 75,000 இற்கு மேல் தொடர்பு: 158(114), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222-5672.(C/33378)

11ஸ்ரீ 9xxx Toyata Corella (நீலநிறம்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 021 - 226 -3575 (28727)

## வீடு விற்பனைக்கு

யாழ்.பழைய பூங்கா வீதியில் மறவகுளத்துக்கு மேற்காக சுண்டுகுளி மகளிர் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்குப் பக்கமாக 5 பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி ச.தவேந்திரன், இல.36, சந்தனமாதா ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 222 2300. (28706)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(28639)

நிறைகூடிய புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக் கொள்ளலாம். விலைகுறைக்கப்பட்டுள்ளது. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P.:222-3529, 222 2867. (28700)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

வளர்ந்த அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28638)

பிறிமா இன புறொயிலர் குஞ்சுகளும் (விலை38/=), பேட்டுக்குஞ்சுகளும் 26.02.2004 மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைசந்தி, T.P.:222 2867, 222 3529. (28699)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் 40/- Prima பேட்டுக் குஞ்சுகள் 60/- 01-03-2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28640)

## கடை வாடகைக்கு

யாழ். நகரில் இரு கடைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: 767, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (28713)

## வீடு வாடகைக்கு

இல.20 மணல்தரை ஒழுங்கை கந்தர்மடத்தில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: T.P No. 0777 217606. (28690)

## தவறிவிட்டது

கூட்டுறவுச் சங்க முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்புநிற BAG ஒன்று 19-02-2004 வியாழக்கிழமை மானிப்பாய் சங்கானை வீதிப்பகுதிகளில் தவறிவீழ்ந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் பரிஷ் ப.நோ.கூ.சங்க அலுவலகத்தில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். T.P 222 6699, 0712 307184, 2756. (28711)

G.சுதாகரனாகிய எனது, முக்கிய ஆவணங்களடங்கிய கோவையானது 18-02-2004 அன்று ஆடியபாதம் வீதி, டச்சு வீதிப் பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0777 - 252068 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். (28716)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 12.05.1974 ஆம் ஆண்டு, 12 இல் செவ்வாய், கிரகபாவம் 6, உத்தராடம் 2ஆம பாதம், B.Sc. பொறியியலாளர் London work permit உள்ள மணமகனுக்கு M.D, B.Sc., CMA படித்த 5வயது வித்தியாசம் உடைய அழகான மணமகள் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை, 361, கோவில் வீதி, நல்லூர். (28717)

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971ஆம் ஆண்டு, அத்தம், செவ்வாய் தோஷமில்லாத லண்டன் பிரஜாவுரிமை பெற்ற எலக்ரோனிக்கல் பொறியியலாளருக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. உங்கள் மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள்: கமலக்கண்ணன் திருமணசேவை, 361, கோயில் வீதி, நல்லூர். (28718)

1974, உத்தராடம் 2 ஆம் பாவம் குறைந்த U.K. Engineer மணமகனுக்கு கௌரவ குடும்ப அழகான B.Sc இற்கு மேற்பட்ட மணமகள் தேவை. Sponser உண்டு. துரை விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்பபாணம். (28673)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971 இல் பிறந்த செவ்வாய் தோஷமுள்ள, U.K. இல் work permit இல் தொழில்புரியும் ஸ்பொன்சர் செய்யக்கூடிய M.Sc. பட்டதாரி மணமகளுக்கு, நற்குணமுள்ள பட்டதாரி மணமகன் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு. விள. இல.:2171, C/O உதயன். (28692)

## தபால் மூலம் ஆங்கிலம்/சிங்களம்

மேற்படி மொழிகளை வீட்டிலிருந்தே நீங்கள் படிக்கலாம். தெளிவான தமிழ விளக்கங்களுடன், வழமையான மேற்படி வகுப்புகளும் உண்டு. இன்றே எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள். தொடர்பிற்கு வழிகாட்டல் ஆசிரியர் திரு.மல்வான, 56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (28296)

**இன்று ஆரம்பம்**

*ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான விசேடவகுப்பு*

By: உமாசங்கர்

21-02-04

5.00 p.m

சைன், உடுவில் (28705)

**மோட்டரோலா**

**தொலைபேசி விற்பனைக்கு**

மோட்டரோலா தொலைபேசி விற்பனைக்குண்டு.

தொடர்பு:

**T.P 060 - 213289**

(28685)

## வீடு விற்பனைக்கு

கண்டி வீதி, சுண்டுக்குளியில் (OLD PARK அருகில்) வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

**Ps.P.இம்மனுவேல்,**

அப்போஸ்தல சபை.

மானிப்பாய் வீதி, உடுவில்.

T.P.: 0602 213395.

(26) (28614)

# முட்டாள் தினத்துக்கு....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தது. இதனிடையே கொழும்பு மாநகரில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய என்.எம். பெரேரா, காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் புகழுக்குக் களங்கம் ஏற்படும் விதத்தில் கருத்து வெளியிட்டிருந்தார். இதனை பத்திரிகைகள் தலைப்புச் செய்திகளாகப் பிரசுரிதது முக்கியப்படுத்தின. இதனால் கோபமடைந்த பிரதமர் சிறிமாவோ அதுவரையில் நிதியமைச்சராகப் பதவி வகித்துவந்த என்.எம். பெரேராவை அப்பதவியிலிருந்து நீக்கி அவருக்கு வர்த்தக அமைச்சை வழங்க முடிவு செய்தார். அம்முடிவு ல.ச.ச.கட்சியை அவமதிப்பதாகுமென ல.ச.ச.கட்சித் தலைவர்கள் கருதிய அதேவேளை நிதி அமைச்சுப் பொறுப்புக்களை மீண்டும் என்.எம்.பெரேராவுக்கு வழங்குவது தமக்குத் தலைகுனிவாகுமென்ற வகையில் பிரதமர் சிறிமாவோ கருதினார். இதனால் ல.ச.ச.கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய அமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டங்களைப் பகிஷ்கரித்தனர்.

1975 செப்ரெம்பர் மாதத்தில் ல.ச.ச.கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களைப் பிரதமர் சிறிமாவோ அமைச்சரவையிலிருந்து வெளியேற்றினார். 1976இல் கொழும்பில் இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு முடிவடைந்த கையுடன நாடெங்கும் பரந்த அளவில் வேலை நிறுத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

1975 பெப்ரவரி மாதத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும் அமைச்சரவையினின்றும் வெளியேற்றப்பட்டனர்.

### சிறிமாவோக்கு சிக்கல்கள்

இத்தகைய சிக்கல்களுக்கெல்லாம் முகம் கொடுத்து சிறிமாவோ தொடர்ந்து அரசை நிர்வகித்து வந்தார். தனியார் துறையினர் வசமிருந்த வர்த்தக நிறுவனங்கள் பலவற்றையும், தோட்டங்களையும் அரசு அரசுடைமை ஆக்கியதன் காரணமாகவும், அத்தியாவசிய உணவுப் பண்டங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டமை கரணமாகவும், அவ்வேளையில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேர்ந்தது. அந்த வேளையில் ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியை ஜே.ஆர்.ஜயவர்த்தனா வகித்து வந்தார். உணவுப் பற்றாக்குறையால் வாடிய பொதுமக்களுக்கு உணவுத் தானியங்களை இலவசமாக வழங்குவதாக உறுதியளித்து ஜே.ஆர்.பிரசாரம் மேற்கொண்டார். இதன் விளைவாக இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஐ.தே.கட்சி அமோக வெற்றியீட்டியது. அதேவேளை, ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவி வகிக்கும் சந்தர்ப்பம் கூடக் கிட்டவில்லை.

### நிறைவேற்று அதிகாரம்

இதனையடுத்து நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்திய ஜே.ஆர்., அப்புதிய அரசமைப்பு மூலம் நிறைவேற்று ஜனாதிபதிக்கு வரையறையற்ற பரந்த அதிகாரங்கள் கிட்டும் வகையில் அரசமைப்பு விதிகளையும் உருவாக்கிக் கொண்டார்.

சிறிமாவோவின் குடியுரிமை பறிக்கப்பட்டதன் காரணமாக 1982 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சிறிமாவோ போட்டியிட முடியவில்லை. இதன்காரணமாக அந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சி சார்பில் ஹெக்டர் கொப்பேகடுவ நிறுத்தப்பட்டார். கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா, ரோகண விஜேவீர, குமார் பொன்னம்பலம் மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் அந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டனர். ஆயினும், அந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர்.ஜயவர்த்தன சிரமமெதுவுமின்றி பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இதனிடையே 1983 ஆம் ஆண்டில் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டியிருந்த போதிலும், சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றினை நடத்தியதன் மூலம் பொதுத்தேர்தலை ஜே.ஆர். ஒத்திவைத்தார்.

### கறுப்பு ஜூலை

இதற்குச் சில காலத்தின் பின்னர் 'கறுப்பு ஜூலை' எனக் குறிப்பிடப்படும் இனக்கலவரம் 1983 ஜூலையில இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து நாடெங்கும் தொடர்ச்சியாக வன்செயல்கள் இடம்பெற்று வந்தன. இதற்கு முடிவுகாணும் நோக்கில் 1987 இல் இந்தியா, இலங்கை ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதை அடுத்து இந்திய இராணுவம் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டது.

பொதுமக்கள்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் செய்துகொள்ளப்பட்ட அவ் ஒப்பந்தத்தை பிரதமர் ஆர். பிரேமதாச உட்பட்ட அமைச்சர்கள் பலரும் எதிர்த்தனர்.

அடுத்த நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 1994 ஒகஸ்ட் மாதம் 16ஆம் திகதி இடம்பெற்றது. இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து உருவாக்கிய பொ.ஐ.முன்னணி அத்தேர்தலில் பெரும்பான்மை பெற்றதையடுத்து சந்திரிகா பண்டாரநாயக பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றார். அதற்கு மூன்று மாதங்கள் கழித்து இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிட்டு அத்தேர்தலிலும் வெற்றிபெற்றதன் மூலம் பிரதமர் பதவியைத் துறந்து நாட்டின் ஜனாதிபதியாகச் சந்திரிகா பதவியேற்றார். சமாதானத்தின் தூதுவராகத் தன்னை வெளிக்காட்டி விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுக்களை மேற்கொள்ளத் தயாரானதுடன், 20 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையையும் உருவாக்கப் போவதாக அச்சமயம் சந்திரிகா கூறிக் கொண்டார்.

தற்போது மீண்டும் தேர்தல் ஜுரம் நாட்டில் உருவாகியுள்ளது. தேர்தலை நடத்தி முடிப்பதற்கு 60 கோடி ரூபாவுக்கு மேல் செலவிடப்படவுள்ளது. முட்டாள்கள் தினத்துக்கு மறுநாள் நாம் மீண்டும் எமது வாக்குகளைப் பாவிக்கவுள்ளோம்.

இதன்முடிவு என்னவாகும்? ✪


**நெற் என்பது NORTH EAST TECHNOLOGIES**

*தரமான கணனித் தேவைகளா? நாடுங்கள் நெற்*

*கணனித் திருத்த வேலைகளா? நாடுங்கள் நெற்*

*புதிய, புனரமைக்கப்பட்ட, வடிவமைக்கப்பட்ட கணனிகளா?*

*மொபைல் தொலைபேசிகளா? நாடுங்கள் நெற்*

*மொபைல் தொலைபேசி திருத்த வேலைகளா?*

*மொபைல் தொலைபேசி Lock உடைக்க வேண்டுமா?*

*யாழ். நகரில் ஒரே இடம் நெற் நெற் நெற்*

*முகம் பார்த்து வெளிநாடுகளுக்குக் கதைக்க வேண்டுமா?*

*SLT IDD குறைந்த செலவில் கதைக்க வேண்டுமா?*

*நெற் 2 போன் குறைந்த செலவில் கதைக்க வேண்டுமா?*

*இன்றநெற் 24 மணிநேரமும் பார்க்க வேண்டுமா?*

**34, SADDANATHAR ROAD,**

**NALLUR, JAFFNA**

**TELE: 021 222 3786**

**0777 708498 (Hot line)**

**NAVALY, MANIPAY BRANCH - 021 223706**

(சி-33382) (24)


# துயர் பகிர்கின்றோம்



எமது உற்ற நன்பனும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க கௌரவ உறுப்பினருமாகிய

சண்முகராசா - உமாசுதன்

அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர்**

**பொன்னையா-சண்முகராசா**

*அவர்கள் 17.02.2004 அன்று மரணமடைந்த செய்திகேட்டு நாமும் துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**குணம் குளிர்களி அகம்**

*துர்க்கை அம்மன் கோவிலடி, தெல்லிப்பழை.*


☎ 070-213048

49.கே.கே.எஸ் வீதி. கன்னாகம்.

**வீரபாகு கட்டடம்.** பஸ்நிலையம். பருத்தித்துறை.

# ஓராண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 05 - 1930 | 04 - 03 - 2003 |



கைதடி

**அமரர் தம்பு செல்லத்துரை**

*திதி: பிரதமை*

தீபத்தின் சுடரொளியாய் - மலர்
சிந்திடும் புன்சிரிப்பாய் - மிளிரும்
தேசத்தின் திருவுருவாய்...
திகழ்ந்த எம் அகல் விளக்கே!
பேரோடும் புகழோடும்...
பெருமையாய் பலர் மதிக்க
வாழ்ந்து எம்மையும் வாழவைத்த
அன்புத் தெய்வமே! ஓராண்டென்ன
ஒரு யுகமே சென்றாலும் என்றும்
உங்கள் நினைவுகளுடன்!

(21-13-17)

'செல்வபதி'

கைதடி வடக்கு, கைதடி. (28708)

- குடும்பத்தினர்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழா கிளிநொச்சியில் நேற்று விமரிசையாக ஆரம்பம்

- கிளிநொச்சியிலிருந்து வசந்தன் -

கிளிநொச்சி,பெப்21

தமிழீழ விளையாட்டுத்துறை நடத்தும் மூன்றாவது தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழா கிளிநொச்சியில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு கோலாகலமாக ஆரம்பமாகியது.

தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றினார்.

முன்னதாக கிளிநொச்சி கந்தசாமி ஆலய முன்றலில் இருந்து மாவீர்களான கேணல் சங்கர், லெப்.கேணல் புலேந்தி அம்மான், லெப்.கேணல் விக்ரர், லெப்.கேணல் சந்திரன், மேஜர் அல்பேட், மேஜர் சோதியா, கப்டன் அன்பரசி, கப்டன் திலகா, லெப்டினன்ட் சதா ஆகியோருடைய திருவுருவப் படங்கள் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் எடுத்துவரப்பட்டன.

இந்த ஊர்வலத்தில் தமிழர்களின் பாரம்பரியத்தைச் சித்திரிக்கும் வகையில் சீனடி, சிலம்படி, போன்ற வீர விளையாட்டுக்களை வீரர்கள் நிகழ்த்திக் கொண்டுவந்தனர். அதனைத் தொடர்ந்து தேசிய விளையாட்டு விழாவில் பங்கு பற்றும் வீர, வீராங்கனைகள் தமது மாவட்டக் கொடிகளைத் தாங்கியவாறு அணிவகுத்து வந்தனர். பொதுமக்கள், போராளிகள், எனப் பலதரப்பினரும் ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

ஊர்வலம் கிளிநொச்சி பொது மைதானத்தை வந்தடைந்ததும் அங்கு விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் மாவீர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டன.

ஈகச்சுடர் ஏற்றும் நிகழ்வில் கேணல் சங்கரின் திருவுருவப் படத்திற்கு குட்டிசிறி மோட்டார் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் சுரேஸ்"ம், லெப். கேணல் விக்ரரின் திருவுருவப் படத்திற்கு அவரது சகோதரியும், லெப்.கேணல் புலேந்தி அம்மானின் திருவுருவப் படத்திற்கு தமிழீழ எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமை நேசனும், லெப்.கேணல். சந்திரனின் திருவுருவப்படத்திற்கு அவரது சகோதரனும்,

மேஜர் அல்பேட்டின் திருவுருவப் படத்திற்கு கிளிநொச்சிப் பிரதேச உதவி அரச அதிபர் பொன்.நித்தியானந்தமும், மேஜர் சோதியாவின் திருவுருவப் படத்திற்கு கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் பூவிழியும், கப்டன் திலகாவின் திருவுருவப் படத்திற்கு பாண்டியன் குளம் உதவி அரச அதிபர் திருமதி தியாகராஜாவும் கப்டன் அன்பரசியின் திருவுருவப் படத்திற்கு அவரது சகோதரியும் லெப்.சுதாவின் திருவுருவப் படத்திற்கு அவரது தாயாரும் ஈகச்சுடரினை ஏற்றி வைத்தனர்.

பொதுச் சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஆர்.இராசநாயகமும், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினியும் ஏற்றி வைத்தனர்.

பின்னர் அகவணக்கத்தைத் தொடர்ந்து அம்பாறை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் கிளிநொச்சி ஆகிய எட்டு மாவட்டங்களின் கொடிகளை அந்தந்த மாவட்டங்களின் விளையாட்டு அதிகாரிகள் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து ஜெயந்தன் படையணிச் சிறப்புத்தளபதி ஜெனார்த்தன், விளையாட்டு விழாச் சுடரினை பிரபல விளையாட்டு வீரர் கலாநிதி என்.எதிர்வீரசிங்கம், தமிழீழ வலைப்பந்தாட்ட அணி பயிற்றுனர் செல்வி ரதிகலா ஆகியோரிடம் கையளித்தார். அவர்கள் விளையாட்டுத் தீபத்தை ஏற்றி வைத்தனர்.

வீரர்களின் சத்தியப்பிரமாணம், நடுவர்களின் சத்தியப்பிரமாணம் என்பவற்றைத் தொடர்ந்து வரவேற்புரையை தமிழீழ விளையாட்டுத்துறையைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை நிகழ்த்தினார் ஆசியுரையைக் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையும் சிறப்புரைகளை 'புலிகளின் குரல்' பொறுப்பாளர் தமிழன்பன், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஆகியோரும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. குருகுலம், காந்தி நிலையங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த சிறுவர்களின் கோலாட்டம், காவடியாட்டம், தற்காப்புக் கலைநிகழ்வு, பொலிகை சிவலிங்கம், பருத்தித்துறை கணேசமூர்த்தி ஆகியோரின் சிலம்பாட்டம், கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரிய கலாசாலைகளின் ஆசிரிய மாணவிகளின் உடற்பயிற்சி ஆற்றுகை, செஞ்சோலைச் சிறார்களின் அபிநய நிகழ்வு, யாழ்.பல்கலைக்கழக 'ஜிம்னாஸ்ரிக்' அணியினர், யாழ்.ஜிம்னாஸ்ரிக் கழகத்தினர் மற்றும் கடற்புலிகள் இணைந்து வழங்கிய ஜிம்னாஸ்ரிக் கண்காட்சி ஆகியவை இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து பிற்பகலில் உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாயின.

இந்த விளையாட்டு விழாவில் வடக்கு - கிழக்கின் சகல மாவட்டங்களிலிருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் கலந்துகொள்கின்றனர்.

பெருவிளையாட்டு விழாவையொட்டி பொது விளையாட்டு மைதானம் மட்டுமன்றி கிளிநொச்சி நகரம் எங்கும் மஞ்சள் சிவப்புக் கொடிகளாலும் பலநிற மின்குமிழ்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது.

வன்னியின் பல பகுதிகளில் இருந்தும் யாழ்.குடாநாட்டிலிருந்தும் பெரும் எண்ணிக்கையானோர் கிளிநொச்சியில் திரண்டு கொண்டிருக்கின்றனர். (ஒ-5)



தேசியப் பெருவிளையாட்டு விழாவில் கலந்துகொண்டவர்களில் (வலமிருந்து இடமாக) கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஆர்.இராசநாயகம், 'புலிகளின் குரல்' பொறுப்பாளர் தமிழன்பன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.





தேசியப் பெருவிளையாட்டு விழாவின் ஆரம்ப நாளன்று இடம்பெற்ற சிறப்பு நிகழ்வுகளின் இரு காட்சிகள்.

# அம்பாறைப் பொலீஸ் அணி வீரர்கள் கிளிநொச்சி வரப் படையினர் தடை!

கிளிநொச்சி,பெப்.21

அம்பாறை மாவட்டப் பொலீஸ் அணி வீரர்கள் கிளிநொச்சி வர ஓமந்தைச் சோதனைச் சாவடியில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் மூன்றாவது தேசிய பெருவிளையாட்டு விழாவில் கலந்துகொள்வதற்காக அம்பறை மாவட்டப் பொலீஸ் கரப்பந்தாட்ட அணி நேற்றுக்காலை ஓமந்தை சோதனைச்சாவடிக்கு வந்தது.

அங்கு கடமையில் இருந்த படையினர் அவர்களை கிளிநொச்சி நோக்கிப் பயணிக்க அனுமதிக்கவில்லை என்றும் -

இதனால் இரு பகுதியினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து சம்பந்தப்பட்ட அணி வீரர்கள் விளையாட்டு விழா ஒழுங்கமைப்பாளர்களுக்கு இது குறித்துத் தெரியப்படுத்திவிட்டு அம்பாறைக்குத் திரும்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்டக் கண்காணிப்புக்குழு ஊடாக வவுனியா மாவட்டக் கண்காணிப்புக் குழுவுக்கு விழா ஒழுங்கமைப்பாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, இவ்விழாவில் கலந்துகொள்ளும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஏனைய அணிவீரர்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஒ-5)

# தேசிய விளையாட்டு விழாவில் இன்று இடம்பெறும் ஆட்டங்கள்

கிளிநொச்சி,பெப்.21

தமிழீழ விளையாட்டுத்துறையால் நடத்தப்படும் 3ஆவது தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழாவில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானம், உதய தாரகை விளையாட்டுக் கழக மைதானம் ஆகியவற்றில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் மாவட்ட அணிகளின் விவரம் வருமாறு.

**உதைபந்தாட்டம்**

காலை 8.30 மணி - அம்மாறை மாவட்ட அணி எதிர் வவுனியா மாவட்ட அணி.
பிற்பகல் 3மணி - திருமலை மாவட்ட அணி எதிர் யாழ்.மாவட்ட அணி.
மாலை 4.30 மணி - மட்டக்களப்பு மாவட்ட அணி எதிர் முல்லை மாவட்ட அணி.
இரவு 9 மணி- கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் மன்னார் மாவட்ட அணி.

**கிரிக்கெட்**

காலை 8.30 மணி - வவுனியா மாவட்ட அணி எதிர் மன்னார் மாவட்ட அணி.

**கிளித்தட்டு (ஆண்கள்)**

காலை 8.30மணி - யாழ்.மாவட்ட அணி எதிர் மன்னார் மாவட்ட அணி.

**கிளத்தட்டு (பெண்கள்)**

முற்பகல் 9.30 மணி - திருமலை மாவட்ட அணி எதிர் மட்டக்களப்பு மாவட்ட அணி.

**கபடி (ஆண்கள்)**

முற்பகல் 9.30 மணி - கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் அம்பாறை மாவட்ட அணி.

**கபடி (பெண்கள்)**

காலை 8.30 மணி - கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் அம்பாறை மாவட்ட அணி.

**கரப்பந்தாட்டம் (ஆண்கள்)**

மாலை 6.30 மணி - மன்னார் மாவட்ட அணி எதிர் திருமலை மாவட்ட அணி.

**கரபந்தாட்டம் (பெண்கள்)**

காலை 8.30 மணி - மட்டக்களப்பு மாவட்ட அணி எதிர் யாழ்.மாவட்ட அணி.
முற்பகல் 9.39 மணி அம்பாறை மாவட்ட அணி எதிர் கிளிநொச்சி மாவட்ட அணி.

**வலைப்பந்தாட்டம்**

இரவு 7.30 மணி - மன்னார் மாவட்ட அணி எதிர் வவுனியா மாவட்ட அணி. (ஒ-5)

# மரண அறிவித்தல்கள்

## இராமசாமி பரராஜசிங்கம்

**(சிங்கம் புடைவையக உரிமையாளர், K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)**

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி பரராஜசிங்கம் 18.02.2004 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராமசாமி - தெய்வானைப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரனும் செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் குணபாக்கியலட்சுமியின் (குகா) அன்புக் கணவரும் நவமணி, குமாரசிங்கம் (கொழும்பு), குலசிங்கம் (U.K.), பூலோகசிங்கம் (பரிஸ்), துரைசிங்கம் (கொழும்பு), பூபாலசிங்கம் (U.K.), சிவராஜசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயலட்சுமி (கனடா), இராஜலட்சுமி (கொழும்பு), குகராஜசிங்கம் (U.K.), ரவிராஜசிங்கம் (U.K.), காலஞ்சென்ற ஜெவிராஜசிங்கம், தர்ஜலட்சுமி (மாத்தளை), விஜிதா (கொழும்பு), குலராஜசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகுணதாசன் (கனடா), சுதாகரன் (கனடா), பாலஜிதா (கவிதா,கொழும்பு), நிரோஜன் (குவைத்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தனலட்சுமி, கனகலட்சுமி (மலேசியா), இராமகிருஷ்ணன் (மலேசியா), விவேகானந்தா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுலக்சி, ஜொயினா, பிரிவிஷா, தம்பி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*170, அரசடி வீதி,*
*கந்தர்மடம்.*
*T.P.: 021 222 6768*

தகவல்:
திருமதி கு.பரராஜசிங்கம் (குகா)
(மனைவி).

(28736)(40-11-12)

## வைத்தி பொன்னம்பலம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தி பொன்னம்பலம் அவர்கள் கடந்த 16.02.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி - கதிரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், சிவக்கொழுந்தின் (சந்தை,சாவகச்சேரி) அன்புக் கணவரும் வசந்தா, தனலட்சுமி, சத்தியசீலன் (ஜேர்மனி), இராசேஸ்வரி, வளர்மதி, யோகேஸ்வரா (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பொது நூலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்பாலன் (அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை), பூமிசேகரன் (இ.மி.ச.), சாந்தி (ஜேர்மனி), குணராசா (யாழ்தபாலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பாக்கியம், அரியமலர், நாகராசா (நகரசபை, சாவகச்சேரி), நாகரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நீலாம்பிகை, கஜீதரன், லகீதரன், குலேந்தினி, கஜேந்தினி, டினகரன், துவாரகா, சுஜீவன் (ஜேர்மனி), சாதுசன் (ஜேர்மனி), சாதுகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2004) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திரர் கோயிலடி,*
*கச்சாய் வீதி, சாவகச்சேரி.*

தகவல்:
**பொ.சத்தியசீலன்,**
**பொ.யோகேஸ்வரா**
**(பிள்ளைகள்).**

(28725)(11-12)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி செல்லையா இராமசிப்பிள்ளை

(தையிட்டிபுலம், தெல்லிப்பழை)

**பிறப்பு** 16-05-1919 **இறப்பு** 22-01-2004

*அன்புடனும் பண்புடனும்*
*இல்லத்தரசியாயிருந்து*
*ஆதரவு மொழிபேசி*
*அரவணைத்த அன்னையே – உங்கள்*
*ஆத்மா சாந்தியடைய*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது அன்பு அன்னையின் வீட்டுக் கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் என்பன நாளை (22.02.2004) ஞாயிற்றுக்கிழமை இலங்கை வங்கி வீதி, சுன்னாகத்திலுள்ள அவரது மகனான கதிர்காமநாதனின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
*தையிட்டிபுலம், தெல்லிப்பழை.*
தற்காலிக முகவரி:
*இலங்கைவங்கி வீதி,*
*சுன்னாகம்.*

**- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்,**
**Dr.செ.வேலாயுதபிள்ளை (மகன்).**

(28724)(34-11-12)


# மலிவு விற்பனை

★ ஓடியோ சீடி
வீடியோ செளங்ஸ்
★ M.P.3
★ ஓடியோ கசெற்

மார்க்கோனி
எலக்ரோனிக்ஸ
இல.292, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.

(28697)(37)


# மரண அறிவித்தல்

## சோதிலிங்கம் திருக்குமார்

கல்வளை, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக்கொண்ட சோதிலிங்கம் திருக்குமார் லண்டனில் 2003.10.28 அன்று அகாலமரணமானார்.

அன்னார் சோதிலிங்கம் - இராசமலர் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் தவகுமார் (U.K.), பபிதா (U.K.), விஜயகுமார் (U.K.), சகிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கீர்த்தனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (2004.02.21) சனிக்கிழமை லண்டனிலுள்ள ஸ்ரதம் வேலிஸ் மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை.*

தகவல்:
இ.சந்திரகுமார் (சிறியதந்தை).

(28730) (24-11-12)

# இதயத்தை நெருடும் கண்ணீர் அஞ்சலி

**கல்வளை, சண்டிலிப்பாயைச் சேர்ந்தவரும், எமது அன்புக்கும் பாசத்துக்கும் நேசத்துக்கும் உரியவரும் லண்டனில் வாழ்ந்தவருமான**

## செல்வன்
## சோதிலிங்கம் திருக்குமார்



சோதிலிங்கம் திருக்குமார்

அவர்களது மறைவு மிகுந்த மனவேதனையையும் ஆழ்ந்த அதிர்ச்சியையும் தருகிறது. எங்கள் இதயத்தை நெருடுகின்ற துயரந்தாங்க முடியாமல் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*அழுது அழுது கண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடுதே! மண்ணில்*
*விழுது விழுதாய் வேரூன்றி இருப்பாய் என நினைத்திருந்தோம் – தெய்வத்தை*
*தொழுது தொழுது வேண்டியும் எமை ஏமாற்றிச் சென்று விட்டாயே – திருக்குமரா!*
*பழுது பழுது நம் வாழ்வு இனி பாழும் உலகில் இருந்தென்ன பயன்?*

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!*

*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை.*

**சிறிய தந்தை, சிறிய தாய்,**
**குடும்பத்தினர்**

(28731) (23-11-19)

## நிமோனியாக் காய்ச்சலால் குடும்பஸ்தர் மரணம்!

நிமோனியாக் காய்ச்சலுக்கு குடும்பஸ்த்தர் மரணமான சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கைச சேர்ந்த வி.ரவீந்திரன் (வயது42) என்பவரே மரணமானவராவார். மினிபஸ் சாரதியான இவர், ஒரு வாரகாலமாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

### வலி.மேற்குப் பிரதேசசெயலர் பிரிவில்

## அகதிமுகாம்களில் வசிப்பவர்களின் போஷாக்கை மேம்படுத்த ஏற்பாடு

வலிகாமம் மேற்கு (சங்கானை) பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 17 இடம்பெயர்ந்தோர் அகதி முகாம்களில வசிக்கும் மக்களின் சுகாதாரம் மற்றும் போஷாக்குக் குறைபாடுகள் பற்றி ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலா எஸ்மோகன்ராஸ் தலைமையில் அகதி முகாம்களில் உள்ள மக்களின் நிலைமை பற்றிய கலந்துரையாடல் கூட்டமொன்று நடைபெற்றது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராசா மற்றும் இப்பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சமுர்த்தி அலுவலர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இந்தப் பிரிவில் உள்ள 17 இடம் பெயர்ந்தவர்கள் வசிக்கும் அகதி முகாம்களிலுள்ள மக்களின் சுகாதாரப் பிரச்சினைகளையும், அவர்களின் போஷாக்குக் குறைபாடுகளையும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும கிராம அலுவலர்கள் மூலமாக திரட்டி, ஆய்வு செய்து அவற்றை விரைவில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது என்று இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-135)

## சமுர்த்தி வங்கிக் கட்டடத் திறப்பு விழா

வலி.மேற்கு,பெப்.21

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பண்டத்தரிப்பு சமுர்த்தி வங்கிச் சங்கக் கட்டடத்திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல், யாழ் மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார், உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.யோ.எழிலரசி ஆகியோர் கலந்துகொள்வர்.

(எ-135-73)

## ஆண்டு விழா

தெல்லிப்பழை,பெப்.21

குப்பிளான் தெற்கு புன்னாலைக் கட்டுவன் அறிவொளி சனசமூக நிலையத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் என்.இன்பநாயகம் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சனசமூக நிலையத்தினதும், கிராமத்தினதும் வளர்ச்சிக்குப் பாடுபட்ட பலர் கௌரவிக்கப் படவுள்ளனர். பிரதமவிருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இ.இராசையா கலந்துகொள்ளவுள்ளார். இரவு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

(ம-150)

## இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் 2 லட்சத்து 66 ஆயிரம் வாக்காளர்கள்

யாழ்ப்பாணம்,பெப்.21

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் 2 லட்சத்து 66 ஆயிரத்து 875 பேர் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத கிளிநொச்சி மற்றும் மருதங்கேணிப் பிரதேசத்தில் 83 ஆயிரத்து 975 பேரும் வன்னி மாவட்டத்தில் 91 ஆயிரத்து 864 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 79 ஆயிரத்து 236 பேரும் திருமலை மாவட்டத்தில் 11 ஆயிரத்து 800 பேரும் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்தது.

இந்த வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தேர்தல் திணைக்களம் தொடர்ந்தும் ஆராய்நது வருகின்றது.

(ம-3)


பொய்யாமொழி ஜோதிடம்

அதிர்ஷ்டம் அழைக்கின்றது

தடைபெறும் திருமணம் விரைவில் நடைபெற ஆலோசனை வழங்கப்படும்.

பலரதுவேண்டுதலுக்காக 22.02.2004 (ஞாயிறு மட்டும்) முழுநாளும் மல்லாகம் பழம்பிள்ளையார் கோவில் மடத்தில் சந்திக்கலாம்.

மல்லாகம். (28743)(12-16-18-36) -V.S.S.குருக்கள்.


## 31 ஆம் நாள் நீங்காத நினைவில்

மலர்வு 28 ✧ 04 ✧ 1935



உதிர்வு 22 ✧ 01 ✧ 2004

### அமரர் சின்னையா கனகசபை (றீகல்)

மாண்டவர் மீண்டதில்லை - ஆண்டவன் தீர்ப்பிது...
தாண்டவமாடும் மனமே... உனை நினைக்கிறதே....
நீண்ட தொலைவில் .... நீ... மறைந்துபோனாலும்...
தூண்டாமணி விளக்காய் ... றீகல் ஒளிவீசிடுமே....

அன்னாரின் மறைவைக் கேட்டும், இறுதிச் சடங்குகளிலும் மற்றும் பல்வேறு கருமங்களிலும் எமக்கு, உதவிக் கரம் நீட்டி, பல்வகையிலும் உதவிய அனைத்து உள்ளங்கட்கும், அன்னாரின் குடும்பத்தினர், மனம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (21.02.2004) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் என்பதையும் தெரியத்தருகிறோம்.

42/7, றீகல் வீடியோ,
ஈச்சமோட்டை, 021 222 2896
கடற்கரை வீதி, 0777 110016
யாழ்ப்பாணம். (சி-28744)(36-16-18) - குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 23 - 11 - 1953



இறைவன் அடியில் 23 - 01 - 2004

நெல்லியோடை, அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் சந்தை வீதி, ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் பரராசசிங்கம் திருநாவுக்கரசு

(இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்)

அன்பு, பாசம், இன்முகம், பொதுசேவைகள் உடன் வாழ்ந்தவரே 31ஆம் நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (22-02-2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், இலங்கைவங்கி உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு உடனே எமது இல்லத்துக்கு வந்து எமது துயரினில் பங்குகொண்டு சகல விதத்திலும் உதவியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் தொலைபேசி, தொலைநகல் மூலம் ஆறுதல் கூறியோர் அனைவருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

சந்தை வீதி, ஓம் சாந்தி !
ஆவரங்கால். (28734) (21-16-18) - குடும்பத்தினர்.


லிபேட்டி அச்சுவேலி




(சி-33049)(18)
(ரீல்ஸ்)
காட்சிகள்: 3:00,7.00 (பி.நே.)

ராஜா யாழ்ப்பாணம்



விஜயகாந்த், வடிவேல், பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த (C-33050) (18)




காட்சிநேரம் : 10.30, 2.30,6.30,9.30(பி.நே.) (ரீல்ஸ்)

நிறைஞ்சனாஸ் சங்கானை

ஜோதிகா, ரம்பா, லைலா, விவேக் நடித்த த்ரீரோசஸ் (ரீல்ஸ்) (C/33034)(18)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)

DUNGEONS DRAGONS

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே)

நாகம்ஸ் சுன்னாகம்

புதிய டொல்வி ஒலிநயத்துடன் மகா சிவராத்திரி வெளியீடாக!




(C/33048)(18)

காட்சிநேரம் : 11.00,3.00,7.00. (பி.நே.) (ரீல்ஸ்)





# மரண அறிவித்தல்கள்

## சொக்கலிங்கம் மகாலிங்கம் (ஆச்சாரியார்)

திருநெல்வேலியைச் சேர்ந்த சொக்கலிங்கம் மகாலிங்கம் நேற்று (20.02.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜலட்சுமியின் அன்புக் கணவரும் சிவசங்கர் (லண்டன்), அனுசியா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரலிங்கம் (லண்டன்)அவர்களின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு. (28750)(36-16-18)

தகவல்:
ம.இராஜலட்சுமி
(சோதி-மனைவி).

## செல்லத்துரை நாகராசா (கிளி)

பாடசாலை வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை நாகராசா அவர்கள் 19.02.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் கனகம்மாவின் அன்பு மகனும் இராசாத்தியின் அன்புக் கணவரும் ரஞ்சித் (இத்தாலி), ரஜிதா, ரஜிக்குமார், யனோஜா, ஜெனிசன் ஆகியோரின் அருமைத் தந்தையும் தவராசா, கமலநாதன் (இத்தாலி), நிர்மலா (கனடா), ஜெயநாதன் (கனடா), யுவதாசன்(இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் புவனேஸ்வரி, நீலா (இத்தாலி), தவராசா(கனடா), விஜயா(கனடா),ஜாமினி(இத்தாலி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை. (28748)(36-16-17)

தகவல்:
செல்லத்துரை கனகம்மா (தாய்).

## முதலித்தம்பி பொன்னுத்துரை

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடா, ஸ்காபரோ நகரில் வசித்து வந்தவருமான முதலித தம்பி பொன்னுத்துரை 18.02.2004 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முதலித்தம்பி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகசபை - பூரணம் தம்பதிகளின் மருமகனும் ஸ்ரீகாந்தன் (கனடா), ஸ்ரீவரதன் (ஜேர்மனி), ரவிச்சந்திரன், பிரபாகரன், பிரபாசக்தி, லாவண்யா, துவாரகா, முரளீதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை இணுவில் தம்பிஜா, கனகம்மா, பூமணி, ஞானமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கணேசலிங்கம் (ஜேர்மனி), சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சுந்தரலிங்கம், குமுதினி, பிரபா, கோபிகா ஆகியோரின் மாமனாரும் சுஜாவந்தி, மதுவந்தி, ருக்ஷன், திலக்ஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-02-2004) சனிக்கிழமை (கனடா நேரப்படி) 4242 SCARBOROUGH, KINGSTONRD இல் நடைபெற்று, பூதவுடல் ST.JOHN NORWAY CEMETRY இல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

49,DENSG ROVE ROAD,
SCARBO ROUGH ONT N/IG 2A2
CANADA. (28733)(35-36-16-18)

தகவல்:
க. சிவலிங்கம் (மைத்துனர்).
அரசடி, கொக்குவில் மேற்கு.

## திருமதி செல்லத்துரை பூமணி (பொன்னுப்பிள்ளை)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை பூழணி நேற்று (20.02.2004) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், இராசகாரி, இராசமணி, இரஞ்சிதமணி, அம்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சந்தனலிங்கம், திருமதி ந.தங்கரத்தினம், மகாலிங்கம் (சுவிஸ்), குணரத்தினம் (சின்னமணி) ஆகியோரின் அன்புத் தாயாரும் நவரஞ்சினி, தம்பிஐயா, கமலாதேவி (சுவிஸ்), சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் சசிகலா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஆசிரியர்), சந்தனப்பிரியா, சாந்தப்பிரதீப், சந்தனராஜ், கோசலாதேவி (சுவிஸ்), வாமதேவன் (அதிபர், ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை), கௌசலாதேவி, மீராதேவி (ஹொலண்ட்), கௌரி, செந்துஜா (சுவிஸ்), சசிக்குமார், றெஜிக்குமார் (டோகா), உமேஸ்குமார், குணறோஜன, உமாகாந்தன்(சுவிஸ்),பரமலிங்கம் (ஹொலண்ட்), ஸ்ரீகுலராஜா, வசந்தி, நிசாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஐங்கரன், லாவண்யா, காருண்யா, சனுசா, நிசனன், பதுசன், நிதிசன், தனுசன், தர்சன், சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2004) ஞாயிறு காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(33388)(18-16-36)

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி பரமானந்தவல்லி மகேந்திரன்

உடுவிலை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பரமானந்தவல்லி மகேந்திரன் நேற்று (20.02.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மகேந்திரன் (ஆசிரியர், மெமோறியல் ஆங்கில பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும் கவிதாவின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் பூமணி தம்பதிகளின் அன்பு மகளும் சுந்தரவல்லி, அமுதவல்லி, காலஞ்சென்ற சித்தானந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2004) சனிக்கிழமை பி.பகல் 3.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

உடுவில். (33389)(36-16-18)

தகவல்:
மகேந்திரன் (கணவர்)

# மனித உரிமைகள் ஆணைக்குழு முன் பாதுகாவலர் சங்கம் நேற்று மறியல்!

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கமும் அன்னையர் முன்னணியும் மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

செம்மணிப் புதைகுழி விவகாரத்தைத் துரிதப்படுத்துங்கள் -

1997ஆம் ஆண்டு அநுராதபுரச் சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார் என்று கூறப்படும், நாவறகுழியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவகுமார் என்ற இளைஞர் இன்னும் வீடு திரும்பவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துங்கள் -

இராணுவத் தளபதி லயனல் பலகல்ல அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் வடபகுதியில் ஆள்கள் காணாமற்போனமைக்கு அப்போது பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரிகளே காரணம் என்று தெரிவித்திருந்தார். அந்த அதிகாரிகளை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் -

ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

காலை 7 மணிமுதல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக அமர்ந்திருந்த காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணி ஆகியவற்றின் உறுப்பினர்கள் அலுவலர்களை உள்ளே செல்லவிடாமல் தடுத்தனர்.

போராட்டம் தொடர்பாக ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ருவான் சந்திரசேகரா தலைமையகத்துடன் தொடர்புகொண்டு பேசினார்.

அதன் பின்னர் போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை உரிய பதில் தருவதாக உறுதிமொழி தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து போராட்டம் காலை 11 மணியளவில் கைவிடப்பட்டது. (ம-7-30)

## ஆஸி. அணி வெற்றி!

கொழும்பு,பெப்.21

இலங்கை - ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணிகளுக்கு இடையில் நேற்று தம்புள்ளவில் நடைபெற்ற சர்வதேச ஒருநாள் ஆட்டத்தில் ஆஸி. அணி இலகுவாக வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 262 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தது. 9.1 ஓவர்களில் 41 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்திய பிரேட் ஹொக் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

# சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் இன்று அல்லது நாளை இலங்கை வருவர்

கொழும்பு,பெப்.21

எதிர்வரும் போதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 60 கண்காணிப்பாளர்களும் பொதுநலவாய அமைப்பிலிருந்து 15 கண்காணிப்பாளர்களும் இன்று அல்லது நாளை இலங்கை வந்துசேருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க சர்வதேச தொண்டர் நிறுவனங்களிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொது நலவாய அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சார்ந்த 75 கண்காணிப்பாளர்கள் இலங்கை வரவுள்ளனர்.

இலங்கையில் உள்ள பொது நிறுவனங்களின் உதவிகளையும் தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார்.

தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# தேசிய ஹெல உறுமய நேற்று யாழ்ப்பாணத்தில் வேட்புமனு தாக்கல்

## விமானத்தில் வந்து உடனே கொழும்பு திரும்பினர்

யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக 'தேசிய ஹெல உறுமய' கட்சி நேற்றுத் தனது வேட்பு மனுக்களை யாழ். தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் சமர்ப்பித்தது.

அக்கட்சியின் வேட்பாளர்கள் யாவரும் பிக்குகள் ஆவர்.

கட்சியின் முதன்மை வேட்பாளரான வண.விதாரநதினியோ மேதாந்த தேரர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார்.

விமானம் மூலம் யாழ். வந்த இக்கட்சியின் முக்கியஸ்தர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டு உடனே கொழும்பு திரும்பினர்.

யாழ்ப்பாணத்தில் தமது கட்சியின் அலுவலகம் ஒன்றைத் திறக்கவிருப்பதாகக் கூறிய அவர்கள், தேர்தல் சுவரொட்டிகளையும், துண்டுப் பிரசுரங்களையும் வெளியிடவிருப்பதாகவும் கூறினர்.

தேர்தல் கூட்டம் எதனையும் நடத்தப்போவதில்லை என்றும் தெரிவித்தனர். (ம-3)

# யாழ். மருத்துவ...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

மனைவி, மகள் ஆகியோரையும் பயமுறுத்திவிட்டு வானில் ஏறிச்சென்றுள்ளனர்.

பீடாதிபதியின் மகன் சி.சஞ்சயனும் யாழ். மருத்துவபீடத்தின் மாணவன் ஆவார்.

இச்சம்பவம் தொடர்பாக பீடாதிபதி யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மருத்துவபீடப் பீடாதிபதியின் குடும்பத்தினர் அச்சுறுத்தப்பட்டிருப்பதை மருத்துவ பீட ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

நேற்று அவசரமாகக் கூட்டப்பட்ட மருத்துவபீட ஆசிரியர் சங்கத்தின் கூட்டத்தில் இது தொடர்பான கண்டனத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்தால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் மருத்துவபீடக் கல்விச் செயற்பாடுகள் மேலும் பாதிப்புக்குள்ளாகலாம் என்று மருத்துவபீட ஆசிரியர் சங்கம் விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோரை இனங்கண்டு கூட்டத்தின் முன்நிறுத்த பொதுமக்கள் உதவ வேண்டும் என்றும் சங்கம் கேட்டிருக்கிறது.

**மாணவர் ஒன்றியம் கண்டனம்**

தங்கள் சக மாணவனான சிவபாலன் சஞ்சயன் மிரட்டப்பட்ட சம்பவத்தை மருத்துவபீட மாணவர் ஒன்றியமும் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

19.02.2004 வியாழக்கிழமை இரவு எமது மருத்துவபீட மாணவனும், மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் பிரதித் தலைவருமான சி.சஞ்சயன் அவர்களுக்கு நடைபெற்ற காடைத்தனமான செயலையிட்டு மருத்துவ மாணவர்களாகிய நாம் கடும் விசனமடைகிறோம். இரவு 9.00 மணியளவில் வானில் வந்த இனந்தெரியாத சிலர், எமது மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி சிவபாலன் அவர்கள் வீட்டில் உள்ளாரா என விசாரித்துவிட்டு, அவர் இல்லாத காரணத்தால் அவரது மகனை வலுக்கட்டாயமாக வானில் ஏற்ற முற்பட்டுள்ளனர். இது அவரது உயிருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாக நாம் கருதுவதோடு, இத்தகைய மிகவும் அநாகரிகமான செயலை எமது மருத்துவ மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது. அத்துடன், இதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் சங்கம் கண்டித்து அறிக்கை**

மருத்துவபீடாதிபதியின் இல்லத்தில் நடந்த சம்பவத்தை ஒட்டி யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மருத்துவபீட பீடாதிபதியின் இல்லத்திற்கு நேற்றுமுன்தினம் 19.02.2004 இரவு இனந்தெரியாத சிலர் வெள்ளை நிற வானில் வந்து அவரைத் தேடியதாகவும் அவர் அங்கு இல்லாத காரணத்தினால் வீட்டினரை அச்சுறுத்தியதாகவும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதுபற்றி இன்று கூடிய யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க செயற்குழு இச்சம்பவத்தினைக் கண்டிக்கின்றது. இதுபோன்ற சம்பவங்கள் பல்கலைக்கழக ஆசிரியர் சமூகத்தின் கல்விசார் நடவடிக்கைகளைப் பாதிப்பதுடன் பல்கலைக்கழகத்தின் சமூகமான செயற்பாட்டினையும் பாதிக்கும்.

இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபடுவோர் இனம் காணப்படுவதுடன் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படல்வேண்டும் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் எதிர்பார்க்கின்றது.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஜ-7)

# அதாவுல்லா..

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

அக்குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

நேற்று மாலை ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த இந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னிலையில் தமது நியமனப்பத்திரங்களில் கையெழுத்திட்டனர். புதிய முன்னணியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக இந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடுவதற்குத் தீர்மானித்ததுடன், கிழக்கு மாகாணத்தின் பிரபல அபேட்சகர்கள் குழுவொன்றைத் தம்மால் முன்னிறுத்தக் கூடியதாக உள்ளதென முன்னணியின் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவிடம் அவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் நியமனப் பத்திரங்களில் கையொப்பமிடும் சமயத்தில் தேசிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைவி பேரியல் அஷ்ரப்பும் அத்தினம் கலந்துகொண்டார்.

ஏ.எல்.எம்.அதாவுல்லா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குழு நேற்று மாலை கொழும்பில் விசேட செய்தியாளர் மாநாடொன்றை நடத்தவும் திட்டமிட்டிருந்தனர்.

- இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# முஸ்லிம் ஒற்றுமை...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இன்னொருவர், மயோன் முஸ்தபா, நௌஷாத் ஆகியோருடன் ஒரே அணியாக நின்று மு.கா மரச்சின்னத்தில் போட்டியிடும்.

3. நாட்டின் ஏனைய மாவட்டங்கள் சிலவற்றில் வேறு கட்சியுடன் (ஐ.தே.க.) கூட்டுச் சேர்ந்து அந்தக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடும்.

இவை பற்றி இங்கு நாம் ஆராய்ந்து எமக்குள் ஒரு முடிவுக்கு வரவேண்டும்; தேர்தல் வியூகங்களை வகுக்க வேண்டும். அதற்காகவே இந்த உயர்பீடக் கூட்டம் - என்று அறிவித்தார்.

கூடியிருந்தவர்கள் பலரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அஷ்ரப் காங்கிரஸ் காரர்கள் முஸ்லிம் காங்கிரஸில் சேர்ந்து கொண்டாலொழிய அவர்களுடன் சேர்ந்து போட்டியிடக்கூடாது என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் வேறு "இணைப்புகள்" எதுவும் இல்லாமல் குறிப்பாக ஐ.தே.கவுடன் கூடக் கூட்டுச் சேராமல் தனித்து நின்று மரச்சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று சிலர் கூறினர். முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் எம்.பிக்களான ஹரீஸும், அன்வர் இஸ்மாயிலும இந்தக் கருத்தை வெகு அழுத்தமாக எடுத்துக்கூறி பலமான வாதப் பிரதிவாதங்களுக்குக் களம் அமைத்தனர்.

அது குறித்து அதிருப்தியடைநத சிலர் ஹரீஸையும், அன்வர் இஸ்மாயிலையும் கண்டித்துப் பேசினர். இவர்கள்தான் முன்னர் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பு என்று ஒன்றைத் தொடங்கி பிரச்சினை ஏற்படுத்தியவர்கள் என்று பொரிந்து தள்ளினர்.

அன்வர் இஸ்மாயிலும், ஹரீஸும் ஆத்திரமடைந்தனர். ஆக்ரோஷத்தோடு பல வாதங்களை முன்வைத்த பின்னர் தமது கதிரைகளை உதைத்துத் தள்ளிவிட்டு கோபாவேஷமாக வெளியேறினர்.

கூட்டம் தொடர்ந்து நடந்தபோதிலும் இறுதிவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

கூடியிருந்தவர்கள் சில தகவல்களை வெளியிட்டனர்.

மயோன் முஸ்தபா, நௌஷாத், அதாவுல்லா முதலானோரை அம்பாறையில் மரச்சின்னத்தில் போட்டிக்கு நிறுத்தினால் தங்களுடைய வெற்றி வாய்ப்பை அது பாதிக்கலாம் என்று இந்த இருவரும் அஞ்சுவதற்குக் காரணம் உண்டு. அதை வெளிக்காட்டாமல்தான் அவர்கள் 'எங்கேயும் கூட்டு வேண்டாம்; முஸ்லிம் காங்கிரஸ் தனித்தே போட்டியிடவேண்டும்' என்று கூறுகிறார்கள். இது விளங்காதா? - இப்படி அவர்கள் கூறினர்.

மற்றும் சிலர், முஸ்லிம் தலைவர்களிடையே உடன்பாடு காணப்பட்ட செய்தி அம்பாறை மாவட்டத்தை எட்டியதும் ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோரது ஆதரவாளர்கள் பலர் போர்க்கோலம் பூண்டனர் என்றும் ஹக்கீமுக்கு ரெலிபோனில் பல்வேறுவிதமான அச்சுறுத்தல்களை விடுத்தனர் என்றும் தமக்குத் தகவல்கள் கிடைத்தன எனச் சொன்னார்கள்.




புதுக்கடைத் திறப்பு விழா
'தில்லையம்பதி லெதர் வேக்ஸ்'

தில்லையம்பதி லெதர் வேக்ஸ் எனும் ஸ்தாபனம் இன்று (21.02.2004) சனிக்கிழமை மு.ப.11.20 - 1.16 வரையுள்ள சுபநற் பொழுதில் மங்களகரமாக திறந்து வைக்கப்படுகின்றது. சகலவிதமான வாகனங்களின் (சீற் கவர்கள்) லெதரிங் வேலைகள் சிறந்தமுறையில் செய்து கொள்ளலாம்.

உரிமையாளர்:-
நாதன் - கிருஷ்ணபாபு (குட்டி),
(தில்லையம்பதி கோண்டாவில்).

இல. 45, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (28751)(30-17-18)



WALK - IN INTERVIEW

We are looking for a Lecturer in information Technology to fill an immediate vacancy

1. The ideal candidate should be a B.Sc. degree holder in Computer Science,from any University in Sri Lanka or abroad or any other professional bodies
2. Fluency in English and corresponding ability in this language is a must.
3. The person selected could expect an attractive salary and other fringe benefits depending on their qualification and experience.

Interested persons should call over at this office from 11.00 a.m. to 1.00 p.m. on Wednesday 25 th February 2004.

DIRECTOR,
INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
100,CLOCK TOWER ROAD,JAFFNA
(சி-33375)(36-17-18)



New Stocks Available

மிகக் குறைந்த பணத்துடன் மிகப் பெறுமதியானதை வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்

Pentium I, II, III
IBM, Compaq, Dell
ரூ12,000/- லிருந்து
இலவச பராமரிப்பு சேவையுடன்

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam, Jaffna
T.P:021 222 2674, email: stpworld@sltnet.lk



A/L 2005
LOGIC
குறியீட்டு அளவையியல்
By: R.P.சர்மா
ஆரம்பம்: 21.02.2004
சனி 5.00 மணி
(28714)
ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்.



IBMS புதிய பிரிவுகள் ஆரம்பம்!!

H.Of : 250, STANLEY ROAD (NORTHERN BUILDING) , JAFFNA.

DIP. IN BUSINESS APPLICATIONS (MS Office) Duration - 4 Months
DIP. IN DIGITAL SCIENCE (Information Technology) Duration - 8 Months
DIP. IN DESKTOP PUBLISHING Duration - 5 Months
DIP. IN HARDWARE Duration - 3 Months
HIGHER DIP. IN SOFTWARE ENGINEERING Duration - 4 Months
DIP. IN ENGLISH (By: S.Pathmanathan) Duration - 5 Months
DIP. IN KIDS PROGRAMME

Certificates
MS Word, MS Excel, MS Access, Page Maker, Photo Shop, Visual Basic, Pascal, Java, C++, Hard Ware

Tertiary Vocational Education Commission Reg.No.:P25/0010

Branches: N.M.V. Road, Nelliyady. - Chankathanai, Chavakacheri.


## மரண அறிவித்தல்

### துரைராசா ஸ்ரீமுருகராசா (முருகன்)

(இலங்கை மின்சாரசபை ஊழியர் - மன்னார்)

மயிலு வீதி, ஆறுகால்மடத்தைச் சேர்ந்த துரைராசா ஸ்ரீமுருகராசா (முருகன்) 19.02.2004, வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அமரர் துரைராசா - கண்மணி தம்பதிகளின் மகனும் சுதாமதியின் அன்புக் கணவரும் விஜயராசா (வியாபாரி, திருநெல்வேலிச் சந்தை), மகேஸ்வரி, தையல்நாயகி, நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி, கௌரி ஆகியோரின் அருமைச் சகோதரனும் கோணேஸ்வரன் (படப்பிடிப்பாளர்), கிரிதரன் (கனடா), ஸ்ரீகஜந்தன் (மாணவன், வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அமரர் ஸ்ரீஸ்குமார், ஸ்ரீகாந்தன் (ஜேர்மனி), ஸ்ரீகரன (கனடா), வளர்மதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2004) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலு வீதி,
ஆறுகால்மடம்.
T.P.: 0777 499479 (28747)(35-16-18)

தகவல்:
ஸ்ரீ.கோணேஸ்வரன் (மகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.